KALKI
6.11.2006 ரூ.8.00
80 பக்கங்கள்

கல்கி

குடும்பத்துடன் படிக்க...



கஸ்தூரிராஜாவுக்குக் கண்டனக் கணைகள்...

அதிசயம்! ஆனால் உண்மை!



இளைஞர்களே ! வழுக்கைத் தலையால்
உங்கள் காதல், திருமணம் தடைபட்டுவிட்டதா ?
இனி கவலை வேண்டாம் !

மூன்றே மணி நேரத்தில் இளைமையான தோற்றத்தைப்
பெற்று காதல் திருமணத்தில் வெற்றி பெறலாம்

சிறப்புச் சலுகை **50%**

Hair Weaving, Hair Bonding &
Silicon System Treatments are Done Here !



சிறப்பம்சங்கள்

வித்தியாசமான முறை
பக்க விளைவுகள் அற்றது
ஷாம்பு போட்டுக் குளிக்கலாம்
நீச்சலும் அடிக்கலாம்
அறுவை சிகிச்சை கிடையாது
இது விக்கும் அல்ல
வாகனங்கள் ஓட்டலாம்
நீங்கள் விரும்பும் ஹேர்
ஸ்டைலில் தலை வாரலாம்

FAIR & HAIR
HEALTH & BEAAUTY CURE

- 51, Salai Road, Uraiyur, (Near Rockfort School) TRICHY-620 003.
  Phone : 0431-2768497, 2760545. Mobile : 98424-38381, 94431-38381.
- 17/1, L.B.Road, Adyar, CHENNAI - 600 020. Phone : 24469596, Mobile : 94449-18848
- 128-A, North Marat Street, Yanaikkal, Opp. To Anjeneyar Temple, Simmakkal,
  MADURAI - 625 001. Phone : 0452-2620567, 2628383. Mobile : 94433-38382


அரசியல்



4

அவசரப்பட்ட ராமதாஸ்...


ஆன்மிகம்



17

கடவுள் காத்திருக்கட்டும்!

ஆரோக்கியம்



20

பயமுறுத்தும் பட்டியல்!

அறிவு



72

ஆண்களுக்கு எதிரானது அல்ல!

கலை



8

கஸ்தூரிராஜாவுக்குக் கண்டனக் கணைகள்!

கல்கி
26.11.2006

அண்மையில் மறைந்த முன்னாள் தமிழக சட்டமன்ற சபாநாயகரான காளிமுத்துவுடன் மதுரையில் தியாகராஜர் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர் கவிஞர் நா.காமராசன். இருவரும் சேர்ந்து நிறைய பட்டிமன்றங்களில் கலந்து கொண்டிருக்கிறார்கள். காளிமுத்துவைப் பற்றிய நினைவுகளைப் பகிர்ந்துகொள்கிறார் நா.காமராசன்.



"காளிமுத்துவே வந்துட்டாரு!"

"படிக்கிற காலகட்டத்திலேயே காளிமுத்துவுக்கு அரசியல் ஆர்வம் அதிகம். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றவர். காமராஜரை எதிர்த்து தி.மு.க.வைச் சேர்ந்த மாணவரான ஸ்ரீனிவாசன் விருதுநகரில் போட்டியிட்ட போது, பெரியதொரு மாணவர் படையினைத் திரட்டிக் கொண்டு ஸ்ரீனிவாசனுக்காகத் தொகுதி முழுவதும் பிரசாரம் செய்தவர்.

அவரும் இன்னும் சில மாணவர்களும் சென்னைக்குச் சென்று, குண்டடிபட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப் பட்டிருந்த எம்.ஜி.ஆரைச் சந்தித்தபோது, உற்சாகமூட்டும் விதமாகப் பேசிய எம்.ஜி.ஆர். மாணவர்கள் விடைபெற்றுக் கொண்டு புறப்படும் நேரத்தில் காளிமுத்துவை அழைத்து, 'தேர்தல் செலவுக்குப் பணம் இருக்கிறதா?' என்று கேட்டு, உடனே தம் உதவியாளரை அழைத்து, 'இவங்களுக்குத் தேர்தல் செலவுக்குப் பணம் கொடுத்து அனுப்புங்கள்' என்றாராம்.

புத்தகங்களைப் படிப்பதில் காளிமுத்து ஒரு தீவிரவாதி. இன்ன புத்தகம் என்று இல்லாமல், பலதரப்பட்ட புத்தகங்களையும் படிப்பார் என்றாலும் இலக்கியம் அவருக்குப் பிடித்த சப்ஜெக்ட். அவற்றிலிருந்து ஏராளமான குறிப்புகளை எடுத்துத் தனியே நோட்டுப் புத்தகங்களில் எழுதி வைத்துக்கொள்வார்.

தி.மு.க.விலிருந்து விலகி எம்.ஜி.ஆர். தனியாக அ.தி.மு.க. ஆரம்பித்தபோது காளிமுத்து கூட வரவில்லை. பின்னர் தி.மு.க.வில் மாவட்ட அளவில் ஏற்பட்ட பிரச்னை காரணமாகக் கட்சியை விட்டு விலக முடிவுசெய்து, எம்.ஜி.ஆரைச் சந்தித்துத் தம் விருப்பத்தைத் தெரிவித்தபோது,



எம்.ஜி.ஆரே அதனை எதிர்பார்க்காததால், வியப்படைந்தார். உடனிருந்த கட்சியின் மற்ற முக்கியஸ்தர்களிடம் 'காளி முத்துவே வந்துட்டாரு' என்று சொல்லித் தம் மகிழ்ச்சியையும், வியப்பையும் வெளிப்படுத்தினார்.

சினிமா மீதும் மிகவும் ஆர்வம் கொண்டவர் காளிமுத்து. எம்.ஜி.ஆரின் 'இன்றுபோல் என்றும் வாழ்க' படத்துக்கு அவர் வசனம் எழுதினார். படத்தின் பிரிவியூ காட்சியின்போது, படம் பார்த்தவர்களிடம் எம்.ஜி.ஆர்., காளிமுத்துவின் வசனங்களைப் பற்றிப் பெரிதும் பாராட்டினார். சில திரைப்படப் பாடல்களும் கூட எழுதி இருக்கிறார். அரசியல்வாதி என்பதைவிட சிறந்த இலக்கியவாதியை நாம் இழந்துவிட்டோம் என்பதில் காளிமுத்துவின் பிரிவு மிகவும் வேதனை தரக்கூடியது" என்றார் நா.காமராசன்.

காளிமுத்துவின் மகன், பசும்பொன் முத்து ராமலிங்க தேவரின் வாழ்க்கையை சினிமாவாக எடுக்கத் திட்டமிட்டிருக்கிறார். அந்தப் படத்துக்கு வசனம் எழுதி இருப்பவர் காளிமுத்து.

- கௌதம்

கடந்த அக்டோபர் மாதம் ஒன்றாம் தேதி, கல்கி தீபாவளி மலருக்குச் செய்தி சேகரிப்பதற்காக ராமேஸ்வரத்துக்குச் செல்லும் வழியில், மதுரையில் காளிமுத்து அவர்களை நமது கல்கி இதழில் 'துள்ளித் திரிந்த காலம்' தொடரில் பங்கு கொள்ளச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் சந்தித்தோம்.

தொடரில் அவர் தமது அனுபவங்களைச் சொல்ல வேண்டும் என்றவுடன், சில நிமிடங்கள் யோசித்தார். கண்களில் மலர்ச்சி தெரிந்தது.

"எனது வாழ்க்கையில் நான் மிகமிக மகிழ்ச்சியாக இருந்த நாட்கள், தியாகராஜர் கல்லூரியில் படித்த காலகட்டம்தான்" என்று சொல்லி அந்த நினைவுகளில் ஆழ்ந்து போனார். பணி நெருக்கடியால் 'சென்னைக்கு வரும்போது இதைப் பற்றிப் பேசலாமே' என்று முடித்துக் கொண்டார். மறுபடியும் அவரைச் சந்திக்க வாய்ப்பில்லாமலேயே போய்விட்டது.

- ஸ்ரீநி

கல்கி
ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்
எம். மோகன்
ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

‘உள்ளாட்சித் தலைவர் தேர்தலில் தி.மு.க. செய்தது பச்சைத் துரோகம் என்று பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் கடுமையாகக் கூறிவிட்டாரே’ என்று வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்திடம் கேட்டோம்.

“ ‘கூட்டணி என்பது ஒரே குறிக்கோள் கொண்ட இயக்கங்களால் தேர்தல் நேரத்தில் தொகுதிப் பங்கீட்டுக்காகச் செய்த ஏற்பாடு’ என்று கலைஞர் சொல்லியிருக்கிறார். அப்படிப் பொதுவாக ஒன்றுக்கொன்று வெற்றி கண்டிடும் நோக்கத்துடன் அமைந்திடும் உடன்பாட்டை, ஒவ்வொரு கட்சியும் அதன் வலிமைக்கேற்றபடி செயல்படுத்த வேண்டும் என்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

இந்த அடிப்படையில் அந்தந்த இடங்களில் கட்சிகளுக்கு உள்ள மக்கள் செல்வாக்குக்கு ஏற்ப இடப்பங்கீடுகள் நடைபெறுகின்றன. ஆனால், இந்த முறை உள்ளாட்சித் தேர்தல் தொகுதிகள் ஒதுக்கீட்டிலேயே கூட, செல்வாக்குள்ள பல பகுதிகளை தி.மு.க. தமது தோழமைக் கட்சிகளுக்கு விட்டுக் கொடுத்துவிட்டது. ஆனால், அங்கேயும் தோழமைக் கட்சிகளின் சார்பில் இரண்டு, மூன்று வேட்பாளர்கள் களம் இறங்கினார்கள்.

பா.ம.க. சார்பில் இரண்டு வேட்பாளர்கள் மாம்பழச் சின்ன அங்கீகாரத்துடன் தேர்தல் அதிகாரியைக் குழப்பிய சம்பவமும் சேலம் மாவட்டத்தில் நடந்தது. தொடர்ந்து பல காலம் வெற்றி பெற்ற

அவசரப்பட்ட



தொகுதிகளை தி.மு.க. இழந்தது. எங்கள் தோழர்கள் கொதித்துப் போனார்கள். அவர்களைச் சமாதானப்படுத்த மிகவும் போராட வேண்டியிருந்தது. தலைவர் தேர்தலில் தோழமைக் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை, எந்தவித முணுமுணுப்பும் இல்லாமல் கட்சிக் கட்டளைக்கேற்ப ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கும் உழைத்தோம். ஆனால் பல இடங்களில் உரிய வேட்பாளர்களைத் தோழமைக் கட்சிகளால் நிறுத்த முடியவில்லை. எனவே சுயேச்சையாக நின்றவர்களையும் மாற்றுக் கட்சியில் தேர்தெடுக்கப்பட்டவர்களையும், தங்கள் கட்சிகளில் சேர்த்துத் தலைவர் தேர்தலில் போட்டியிட வைத்தன. அதையும் ஏற்றுக்கொண்டோம். அதனால்தான் பா.ம.க. ஏழு நகராட்சிகள், நான்கு மாவட்ட ஊராட்சிகள் மற்றும் ஏகப்பட்ட பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களில் வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால் தி.மு.க.வுக்கு



ஒதுக்கப்பட்ட பல இடங்களில் தோழமைக் கட்சியினர், எதிர்கட்சியின் உதவியுடன், தி.மு.க. வேட்பாளர்களைத் தோற்கடித்துள்ளனர்.

வேலூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் தி.மு.க. வேட்பாளரை பா.ம.க. வேட்பாளர் தோற்கடித்திருக்கிறார். இதேபோல் சேலம் பி.என்.பட்டி பேரூராட்சியிலும் நடந்திருக்கிறது.

தி.மு.க.வுக்கு ஒதுக்கப்பட்டிருந்த காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் பா.ம.க. போட்டியிட்டிருக்கிறது. காங்கிரஸ், கம்யூனிஸ்ட் இயக்கத்தவரும், தி.மு.க. வேட்பாளர்களைப் பல இடங்களில் தோற்கடித்திருக்கிறார்கள். இவ்வாறு சில இடங்களில் தி.மு.க.வினரும் ஈடுபட்டிருக்கக்கூடும். ஆனால் அப்படி கட்சிக் கட்டுப்பாட்டை மீறிச் செயல்பட்ட எங்கள் கட்சிக்காரர்கள் மீது கலைஞர் விரைந்து நடவடிக்கை எடுத்திருக்கிறார். பலர் இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர். இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேறு கட்சிகளில் இதுபோல நடந்ததாகத் தெரியவில்லை.

தி.மு.க.வின் செல்வாக்கில் நிறைய இடங்களில் வெற்றி பெற்றிட வேண்டும் என்ற எண்ணத்தில் மட்டுமே தோழமைக் கட்சிகள் செயல்படுவதாகத் தோன்றுகிறது. மருத்துவர் அய்யா சரியான ஆலோசனை இல்லாமல் அவசரப்பட்டுக் கருத்தைச் சொல்லிவிட்டார்'' என்று நீண்ட விமர்சனமளித்தவரிடம்,

''தி.மு.க. அரசுக்கு ஆதரவைத் தொடரும் அதே நேரத்தில் நல்ல எதிர்கட்சியாகத் தொடருவோம்' என்கிறதே பா.ம.க., இது தேர்தலின் விளைவுதானே?' என்றோம்.

"முதல்வர் கலைஞர் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறார். தமிழ்நாட்டை முன்னேறிய மாநிலமாக்க, தோழமைக் கட்சிகளைத் தவிர, எதிர்கட்சிகளின் ஆலோசனைகளையும் கேட்டுச் செயல்படுகிறார். இந்த நிலையில் பா.ம.க. தொடர்ந்து தமது ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கி அரசுக்கு உதவ வேண்டும். அதுவே கூட்டணிக்கு வோட்டுப் போட்ட மக்களுக்கு நாம் செய்யும் கடமையாகும்."



ராமதாஸ்...

— விமர்சிக்கிறார் வீரபாண்டி ஆறுமுகம்

'தேசியமயமாக்கப்பட்டுள்ள வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய கடனை ஏன் ரத்து செய்யவில்லை என்கிறாரே ஜெயலலிதா?'

"தி.மு.க. தனது வாக்குறுதியில் குறிப்பிட்டபடி, கிராமக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள கடன்களை ரத்து செய்தது. மற்றபடி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பெரிய விவசாயிகள்தான் கடன் வாங்கியிருக்கின்றனர். சிறு விவசாயிகளின் கடனை ரத்து செய்தது மட்டுமல்லாமல், அவர்களுக்கு மீண்டும் கடன் கொடுக்க நிதி ஆதாரம் உருவாக்கப்பட்டிருக்கிறது."

- ப்ரியன்

குறிஞ்சி மலர்!

தமிழ் இலக்கிய வானில் பல்லாண்டுகளாக ஒளியைப் பொழிந்து கொண்டிருந்த மாபெரும் நட்சத்திரமான வல்லிக்கண்ணன், சமீபத்தில் மறைந்துவிட்டார். அவருடைய இனிய நண்பரான வழிக்கறிஞர் செந்தில்நாதன், வல்லிக்கண்ணனிடம் தாம் கொண்டிருந்த நட்பு, அவரின் இலக்கிய வேட்கையும் எழுத்தார்வம் குறித்தெல்லாம் நம்மிடம் பேசினார்...

"வல்லிக்கண்ணன் குழந்தை உள்ளம் கொண்டவர், சூதுவாது அறியாதவர். சுருக்கமாகச் சொன்னால் எழுத்தை வைத்து வணிக ரீதியாகப் பிழைக்கத் தெரியாதவர்.

அவரைச் சந்திப்பவர்கள் எல்லாம் அவர் திருமணம் செய்துகொள்ளாததைப் பற்றித்தான் அதிகம் கேட்பார்கள். அவரோ, 'தாயைப்போல அண்ணியும், தந்தையைப் போன்ற அண்ணனும், பாசத்தோடு இருக்கும் அவர்களுடைய பிள்ளைகளும் இருக்கும் போது திருமணம் தேவையில்லை என்றே தோன்றுகிறது' என்பார். அவருக்கு ஏனோ தமிழின் மீது இருந்த காதலைப்போல், இலக்கியத்தின் மீது இருந்த பக்தியைப்போல் இல்லற வாழ்வின்மீது நாட்டம் ஏற்படவில்லை.

கடைசி காலத்தில் எல்லா ஏழை எழுத்தாளர்களைப் போலவே அவரும் கஷ்டப்பட்டார். என் முயற்சியினால் தமிழக அரசின் நலிந்த எழுத்தாளர்களுக்குத் தரும் உதவித் தொகையை வாங்கிக் கொண்டிருந்தார். பிறகு அதையும் வருடத்துக்கு ஒருமுறை புதுப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையால் வெறுப்புற்று, அந்த உதவித் தொகையைப் பெறுவதையும் நிறுத்திக் கொண்டார். தம்மைப் போலவே தமது அண்ணன் பிள்ளைகளும் திருமணமே வேண்டாம் என்று கூறிவிட்டதை எண்ணி எண்ணி வருத்தப்படுவார். தமது மரணத்துக்கு முன் எப்படியும் அவர்கள் மனதை மாற்றிவிட எண்ணினார். ப்ச்... முடியாமலே போய்ச் சேர்ந்துவிட்டார். அவரைப் போன்ற தமிழ்க் காதலன் எழுத்துப் பக்தியுடையோர் இந்த மண்ணில் குறிஞ்சி மலர்தான்" என்கிறார் செந்தில்நாதன் கண்கள் பனிக்க.



• வல்லிக்கண்ணன்



• செந்தில்நாதன்

- குட்டிக்கண்ணன்

படம் : பொள்ளாச்சி சுந்தரம்

உண்மையான அறிவின் வேலை நகைச்சுவையுடனே இருக்கும்

தேவன்

மிஸ்டர் வேதாந்தம்	I & II	170.00
ராஜத்தின் மனோரதம்		50.00
மிஸ் ஜானகி		75.00
சீனுப்பயல்		55.00
விச்சுவுக்குக் கடிதங்கள்		42.00
என் இந்த அசட்டுத்தனம்		55.00
போக்கிரி மாமா		65.00
ஐந்து நாடுகளில் அறுபது நாள் (3 பாகங்கள்)		260.00
சொன்னபடி கேளுங்கள்		52.00
ரங்கூன் பெரியப்பா		54.00

எஸ்.வி.வி.

உல்லாச வேளை	65.00
சௌந்தரம்மாள்	65.00
கோபாலன் ICS	55.00
ரமணியின் தாயார்	40.00
ஹாஸ்யக் கதைகள்	40.00
செல்லாத ரூபாய்	32.00
சம்பத்து	63.00
வசந்தன்	40.00
புது மாட்டுப் பெண்	21.00
பொம்மி	23.00
சபாஷ்! பார்வதி!	25.00
வாழ்க்கையே வாழ்க்கை	45.00

சோ

கூவம் நதிக்கரையினிலே	II	45.00
கூவம் நதிக்கரையினிலே	III	27.00
எங்கே பிராமணன்?		100.00
முகமது பின் துக்ளக்		25.00
இந்தியா எங்கே போகிறது?		12.00
துக்ளக் கேள்வி – பதில்	II	45.00
உண்மையே உன் விலை என்ன?		42.00
சம்பவாமி யுகே யுகே		30.00
வெறுக்கத்தக்கதா பிராமணீயம்		30.00

ஜி.எஸ். பாலகிருஷ்ணன்

சிரிங்க சார்		40.00
வசந்த சொப்பனங்கள்		32.00
பல்சுவைக் கதைகள்		60.00
சபாஷ்! சந்துரு!		30.00
சிரிப்பு – ஏன்? எதற்கு? எப்படி?	30.00	
புடலங்காய் புரொபஸர்		60.00
நான்காவது ஹனுமான்		40.00
கார்ட்டூனிஸ்ட்		40.00

ஜே.எஸ். ராகவன்

தமாஷா வரிகள்	I	50.00
தமாஷா வரிகள்	II	50.00
திருமதி திருப்பதி க்ரோர்பதி		62.00

Dr. V. சொக்கலிங்கம்

நகைச்சுவையும் உடல் நலமும்	25.00

எஸ்.வி.கே.

பலே! பலே! கதைகள்	90.00
சபாஷ்! கதைகள்	90.00
பேஷ்! பேஷ்! கதைகள்	90.00

'துக்ளக்' சத்யா

நையாண்டிக் கட்டுரைகள்	40.00
அரசியலில் நகைச்சுவை	32.00
மாடசாமியின் மனசாட்சி	100.00
அரசியல் கலையை அறிந்து கொள்வோம்	45.00
நாடு தழுவிய நகைச்சுவை	50.00
ஸ்மைல் ப்ளீஸ்	40.00

எஸ்.வி. சேகர் in

தனிப்பிரதி ரூ.45/-

கண்ணாமூச்சி	
திரும்பி வந்த மனைவி	
கிரேஸி தீவ்ஸ் இன் பாலவாக்கம்	
ஒரு சொந்த வீடு வாடகை வீடாகிறது	
ஒன் மோர் எக்ஸார்சிஸ்ட்	
மகாபாரதத்தில் மங்காத்தா	
காதுல பூ. அல்வா	
காட்டுல மழை	
யாமிருக்க பயமேன்	
ஆயிரம் உதை வாங்கிய அபூர்வ சிகாமணி	
வால் பையன்	
எல்லாமே தமாஷ்தான்	
எல்லோரும் வாங்க	
அதிர்ஷ்டக்காரன்	
சின்ன மாப்ளே பெரிய மாப்ளே	
பெரிய தம்பி, எப்பவும் நீ ராஜா	
தத்துப் பிள்ளை, பெரியப்பா	
குழந்தசாமி	
மனைவிகள் ஜாக்கிரதை	
சிரிப்பு உங்கள் சாய்ஸ்	
இனிமே நாங்கதான்	
எஸ்.வி. சேகர் பதில்கள்	I & II
ஜுட்ஸ் ஜாலி	I & II
நாட்டு நடப்பு	I & II
7 மாதங்கள் 7 நாடுகள்	

டாக்டர் அம்பேத்கர், டாக்டர் கே.ஆர். நாராயணன் இவர்கள் வாழ்க்கையைப் போலவே, டாக்டர் ஜாதவ் வாழ்க்கையும் துணிவு, எதிர்பார்ப்பு, போராட்டம், முன்னேற்றம் – இவை நிறைந்ததுதான். தூங்கிக் கொண்டிருப்பவர்களைத் தட்டி எழுப்பி, சுய கௌரவத்துக்காகவும், நல்வாழ்வுக்காகவும் போராடவைக்கும் என நான் நம்புகிறேன்.

— பாரதப் பிரதமர் மன்மோகன்சிங்

நரேந்திர ஜாதவ் (Chief Economist & Principal Advisor to RBI)
எழுதி வழக்கறிஞர் சுமதி மொழி பெயர்த்த
துருவ நட்சத்திரம் – ரூ.120.00

அல்லயன்ஸ்
(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
புதிய எண். 64, (பழைய எண் : 244)
ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால் பெட்டி எண்: 617, மயிலாப்பூர்,
சென்னை – 600 004. தொலைபேசி : 24641314
e-mail : srinivasan@alliancebook.com
visit us at : www.alliancebook.com

கஸ்தூரிராஜாவுக்குக் கண்டனக் கணைகள்...

அண்மையில், பிரபல தினசரிகளை ஆக்ரமித்திருந்தது அந்தத் திரைப்பட விளம்பரம்.

திரைப்படத்தின் தலைப்பும், அது மையப்படுத்தியுள்ள விஷயமும் நம்மைக் கதிகலங்க வைக்கின்றன.

படத்தின் தலைப்பு : "இது காதல் வரும் பருவம்". 'இது 13க்கும் 15க்கும் இடைபட்ட வயதுச் சம்பவங்கள்' என விளம்பரம் விளக்குகிறது!

'துள்ளுவதோ இளமை', 'டிரீம்ஸ்' போன்ற மாணவச் சமுதாயத்துக்கு 'நன்மை'(?) தரக்கூடிய படங்களைத் தந்த இயக்குநர் கஸ்தூரிராஜாவின் அடுத்த படம்தான் இது.

இந்தப் படம் இவரது முந்தைய படங்களைப்போலவே மாணவர்களுக்குத் தவறான வழிகாட்டுதலையும், பாலியல் தூண்டுதலையும் தவிர வேறெதையும் சொல்லப் போவதில்லை என்பதை நாம் இந்த விளம்பரத்தைப் பார்த்த நிமிடத்திலேயே உணர முடிகிறது.

பருவ வயதில் இதைப்போன்ற படங்களை மாணவ, மாணவிகள் பார்க்க நேர்ந்தால் என்னென்ன விபரீதங்களுக்கும் சீரழிவுகளுக்கும் ஆளாவார்கள் என்பதைச் சொல்லித்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. நம்மைச் சுற்றி நடந்துள்ள பல்வேறு எதிர் கொடூரமான உண்மைச் சம்பவங்களே அதை நமக்கு உணர்த்துகின்றன.

நட்பு, காதல், வாழ்க்கை, எதிர்காலம் என்ற விஷயங்களைப் பாகுபடுத்திப் பார்க்கும் பக்குவம் அடையாத பருவ வயதினரைப் பாழுங்கிணற்றில் தள்ளுவது தான் ஒரு கலைஞனுக்கும் அவரது படைப்புக்கும் அழகா என்பதை கஸ்தூரிராஜா உணர்ந்து இந்தப் படத்தைக் கைவிட வேண்டும்.

சமூக அக்கறை கொண்ட யாரும் இப்படிப்பட்ட படத்தை வரவேற்கத் தயாராக இல்லை. இளைய சமுதாயத்தின் வழிகாட்டியாக விளங்கும் ஆசிரியர்களிடமும் இப்படம் பெருத்த கண்டனத்தையும், எதிர்ப்பையும் சம்பாதித்திருக்கிறது.

கல்கியும் இத்தகைய படம் எடுக்கப் படுவதற்கு எதிராகத் தனது கடுங் கண்டனத்தைத் தெரிவிக்கிறது. இதற்கெதிராக ஆசிரியர்களிடத்தும், பெற்றோர்களிடத்தும் ஒரு கையெழுத்து இயக்கத்தையும் மேற்கொண்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக சில மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களைச் சந்தித்தபோது, தங்களது மனக் கொதிப்பினையும், எதிர்ப்பினையும் பதிவு செய்தார்கள்.



மேற்கு மாம்பலம் ஜெய்கோபால் கரோடியா ஹிந்து வித்தியாலயா மெட்ரிக் மேனிலைப் பள்ளியின் முதல்வர் திருமதி கிரிஜா சேஷாத்திரி. 32 வருடங்களாக முதல்வர் பணியாற்றி வரும் அவருக்கு மாணவ சமுதாயத்தின்மீதுள்ள அக்கறை கோபமாக வெளிப்பட்டது.

எண்ணத்தில் நஞ்சைக் கலக்காதீர்கள்!

"மாணவப் பருவம் எப்படி அமைகிறதோ

அதைப் பொருத்துத்தான் மொத்த வாழ்க்கையும் அமையும். புரியாத, தெரியாத வயதில் இருக்கும் அவர்களை வழிநடத்துவதைவிட்டு, இதைப்போன்ற பாலியல் விஷயங்களைப் படமாகத் தந்தால் பாழ்பட்டுத்தான் போகும் அவர்கள் வாழ்க்கை. ஒரு மாணவனது படிப்பில் குறையிருந்தால் சரி செய்துவிட முடியும். விளையாட்டில் ஆர்வம் இல்லையென்றால் அதை வரவழைத்துவிட முடியும். ஆனால் இதைப் போன்ற மோசமான படங்கள், அவை தரும் வக்கிர புத்திமதிகளின் பின் செல்கிற மாணவ சமுதாயத்தின் எதிர்காலத்தை நினைத்து மனம் பதைத்து நிற்கிறோம்.

இவ்வாறான படங்களை எந்தக் காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது. இதற்காக எதிர்ப்புக்குரல் கொடுக்கும் 'கல்கி'யை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

பத்து வயதில் குழந்தை பெற்றுக் கொள்ளவா பள்ளிக்கூடம் நடத்துகிறோம். இந்த மண்ணுக்கென ஒரு பண்பாடு இருக்கிறது; கலாசாரம் இருக்கிறது; பாரம்பர்யம் இருக்கிறது. அதைக் குலைக்க நினைப்பவர்கள் என்றுமே கண்டனத்துரியவர்கள்தான்.

நான் கேட்கிறேன் - அவர்களது குழந்தையை, அவர்களது சகோதரியை, இந்த மாதிரி எக்ஸ்போஸ் பண்ணுவார்களா?"




பியூலா பெல்,
தலைமையாசிரியர்,
அன்னை வேளாங்கண்ணி மேல்நிலைப்பள்ளி,
அசோக் நகர்

தீய படங்களைத் தீயிலிட வேண்டும்.

"இது எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றுகிற விஷயம். பாலுணர்வு அரும்பு





Bharathan Publications Private Limited

KALKI GOKULAM

G. BEAULA BELL, M.A.
PRINCIPAL

PRINCIPAL
CHENNAI - 600 023

ROYAPETTAH, CHENNAI-600 014.

Head Master
Muslim Higher Secondary School
Triplicane, Chennai-600 005

PRINCIPAL

HEADMASTER
TRIPLICANE, CHENNAI-600 005.

PRINCIPAL
No. 23, CONRAN SMITH ROAD
CHENNAI

HEADMISTRESS
C.M.S., 162, Peters Road,
Royapettah, Chennai - 14.

PRINCIPAL
CHENNAI - 600 088

Kalki Buildings · 47-NP Jawaharlal Nehru Road · Ekkaduthangal · Chennai - 600 032 · India

கிற வயதில், காதல் போன்ற விஷயத்தில் தெளிவு இல்லாமல் இருக்கும் மாணவச் சமுதாயத்தை இந்தப் படம் நிச்சயம் சீரழிக்கத்தான் செய்யும். இதில் நடக்கிற ஆபாச கேலிக்கூத்துகளை நம்பி, உண்மையென வீட்டை விட்டு ஓடிப்போகும் மாணவ, மாணவியர் பின்னாளில் தெருவில் நிற்பதை நாங்கள் நிஜத்தில் பார்க்கிறோம்.

கற்பு, பண்பாடு, கலாசாரம் இவற்றைச் சீரழிக்கத்தான் இப்படிப்பட்ட படங்களை எடுக்கிறார்கள். இந்தக் கொடுமையை அரசும், பத்திரிகைகளும், பெண்கள் அமைப்புகளும் தொண்டு நிறுவனங்களும் கடுமையாக எதிர்க்க வேண்டும். இல்லையென்றால், வருங்கால சமுதாயம் இவர்களால் சீர்கெட்டு விடும்."


எம்.எம்.முகமது முஸ்தபா,
தலைமையாசிரியர்,
முஸ்லிம் மேனிலைப்பள்ளி,
திருவல்லிக்கேணி

"ஒரு பக்கம் எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு பிரசாரம், மறுபக்கம் பார்த்தால் இதைப்போன்ற மலிவான திரைப் படங்கள். கேட்டால் 'செக்ஸ் கல்வி மட்டும் தருகிறீர்களே?' என்று விதண்டாவாதம் செய்வார்கள்.

செக்ஸ் எஜுகேஷன் என்பது தீயவற்றிலிருந்து மாணவர்களைக் காப்பாற்றுவதற்காகச் சொல்லப்படுகிற விஷயம். இவர் காதல் என்கிற பெயரில் காமத்தையும், வக்ர உணர்வுகளையும் காண்பிக்கிறார்.

ஆசிரியர்களாகிய எங்களுக்குத்தான், எத்தனை பெற்றோர்கள் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியும்.

காதல் இல்லை நட்புதான் என்று சொல்லிவிட்டு வரம்புமீறும் இளைஞர்களுக்கு இதைப்போன்ற படங்கள்தான் 'இன்ஸ்பிரேஷன்'. இப்படிப்பட்ட ஆபாசப் படங்களை, இரட்டை அர்த்தப் பாடல்களை, வசனங்களைத் தடை செய்யாமல், எதிர்த்துக் குரல் கொடுக்காமல் இருக்கிற அரசியல்வாதிகளை, சென்சார் போர்டை என்ன செய்வது? டைட்டில் மட்டும் தமிழில் இருந்தால் போதுமா? அரசாங்கம் கண்டிப்பாக இந்தப் படத்தைத் தடை செய்ய வேண்டும்."



சென்னையைத் தொடர்ந்து திருச்சி மாவட்டத்திலுள்ள பள்ளிகளின் தலைமையாசிரியர்களும் தமது எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளனர். இதுகுறித்து எதிர்ப்புகளைத் தெரிவிக்க விரும்புவோர் கல்கிக்கு எழுதுங்கள்.

அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, ஸ்ரீரங்கம், திருச்சி

அரசு உயர்நிலைப்பள்ளி, திருவானைக்காவல், திருச்சி

ஈ.ஆர். மேல்நிலைப்பள்ளி, திருச்சி

நேஷனல் கல்லூரி மற்றும் மேல்நிலைப் பள்ளி, திருச்சி

ஸ்ரீஜெயேந்திரா மெட்ரிக். மேல்நிலைப் பள்ளி, திருச்சி

ஸ்ரீசங்கரா மெட்ரிக் பள்ளி, திருச்சி

அரசு சையத் முர்துசா மேல்நிலைப்பள்ளி, திருச்சி

ராக்போர்ட் மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி, திருச்சி

மெதோடிஸ்ட் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, உரையூர், திருச்சி

எஸ்.எம். மேல்நிலைப்பள்ளி, உறையூர், திருச்சி

பிஷப் ஹெப்லர் மேல்நிலைப்பள்ளி, புதூர், திருச்சி

கே.ஏ.பி. விஸ்வநாதம் மேல்நிலைப்பள்ளி, தில்லை நகர், திருச்சி

ஹோலிகிராஸ் மேல்நிலைப்பள்ளி, தெப்பக்குளம், திருச்சி - 2

இந்து வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, சென்னை - 33

மோனகன் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சென்னை - 14

கில் ஆதர்ஷ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, சென்னை - 14

டி.ஏ.வி. மேல்நிலைப்பள்ளி, சென்னை - 56

எம்.டபிள்யூ.ஏ. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை - 86.

வேளாங்கண்ணி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை - 83

இந்து மேனிலைப்பள்ளி, சென்னை - 5

முஸ்லிம் மேல்நிலைப் பள்ளி, சென்னை - 5

சி.எஸ்.ஐ. கெல்லட் மேல்நிலைப்பள்ளி, சென்னை - 5

சி.எம்.எஸ்., சென்னை - 14

நமது நிருபர்கள்

அட்டைப்படம் : **ஸ்ரீஹரி**

படங்கள் : **பொள்ளாச்சி சுந்தரம்**

ப்ரியாவுக்குப் பிறந்ததிலிருந்தே முகம் அப்படித்தான். பற்கள் சற்று முன் துருத்தி, கீழ் தாடை உள்ளடங்கி இருக்கும். இதற்காக அவள் எப்போதும் பெரிதாகக் கவலைப்பட்டதில்லை. ஆனால், நீண்ட நாட்களுக்கு அந்த நிலை நீடிக்கவில்லை. திருமண வயது வந்ததும் ப்ரியாவுக்கு மாப்பிள்ளை பார்க்கத் தொடங்க, வந்தது விபரீதம். வந்த வரன்கள் எல்லாம் அவள் முகத்தைப் பார்த்து 'போய் சொல்லி அனுப்பறோம்' என்று போய்விட்டிருக்கின்றனர். பதிலே இல்லாது வெறுத்துப்போன ப்ரியாவின் பெற்றோர், அவளை அர்ச்சிக்கத் தொடங்க, நொந்துபோய் விட்டிருக்கிறாள் ப்ரியா. 'ஏன் என் முகம் மட்டும் இப்படி ஆக வேண்டும்?' என்று வருத்தப்பட்டவள், தற்கொலை எண்ணத்தோடு ரயில் முன் பாயச் செல்ல, தகுந்த நேரத்தில் ஸ்டேஷன் மாஸ்டரால் காப்பாற்றப்பட்டு, அறிவுறுத்தப்பட்டிருக்கிறாள்.

"அவரின் வழிகாட்டுதலால் எங்களை நாடி வந்த ப்ரியாவுக்குத் தகுந்த முக அழகு சிகிச்சையளித்தோம். இப்போது அவளுக்குத் திருமணமாகி இரண்டு குழந்தைகள்" என்று பெருமிதத்துடன் சொல்கிறார் சென்னை தேனாம்பேட்டை பாலாஜி பல் மற்றும் முகச் சீரமைப்பு மருத்துவமனையின் நிறுவனரும் முகச் சீரமைப்பு நிபுணருமான டாக்டர் எஸ்எம்.பாலாஜி. முக அழகு சிகிச்சைகள் குறித்து அவரிடம் பேசியதிலிருந்து...

ஆண்களுக்கும் பெண்களுக்கும் வரக்கூடிய பொதுவான முகம் சார்ந்த பிரச்னைகள் என்னென்ன?

"மேல் தாடை தூக்கிக் கொண்டிருத்தல், கண் விலகிக் கொண்டிருத்தல், முகப் பக்கவாதம், மேல் தாடை மற்றும் கீழ்தாடை மிகை வளர்ச்சி, சப்பை முகம், ஒரு காதின்றி முகம் கோணலாக இருத்தல் என்று சொல்லிக்கொண்டே போகலாம். இதனால் மூச்சுத் திணறல், குறட்டைச் சத்தம், பார்வைக் குறைவு, பேச்சுத் தெளிவின்மை, முகம் விகாரமாகக் காட்சியளித்தல் போன்ற உடற்சார்ந்த விளைவுகளும், திருமணத் தடை, சமூகப் புறக்கணிப்பு போன்ற மனம் சார்ந்த விளைவுகளும் ஏற்படும்."

அண்ணப் பிளவு, உதடுப் பிளவு ஏற்படக் காரணம் என்ன? இதற்கான லேட்டஸ்ட் சிகிச்சையைப் பற்றிக் கூறுங்களேன்...

"பாரம்பரியம், உணவுக் குறைபாடு, தாய் உடலில் ஃபோலிக் அமிலம் குறைவாக இருப்பது, கர்ப்ப காலத்தில் தவறான வழிகாட்டுதலால் சாப்பிடப்படும் மருந்துகளால் உண்டாகும் பக்க விளைவு போன்றவற்றால் அண்ணப் பிளவு, உதடுப் பிளவு தோன்றலாம். உதடுப் பிளவு கண்ட குழந்தை, பால் குடிக்க முடியாமல் திணறும். எனவே மூன்றே மாதத்தில் சிகிச்சையளிக்க வேண்டியது அவசியம். அதேபோல் அண்ணப் பிளவு வந்துவிட்டால் பேச்சு சரியாக வராது. பிறந்த பத்தாவது மாதத்துக்குள் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். இந்தப் பிரச்னைகளுக்கு இனி கவலைப்படத் தேவையில்லை. Distraction என்னும் நவீன பற்சிகிச்சை நல்லதொரு தீர்வாக அமைந்துள்ளது. உதடுப் பிளவு உள்ளவர்களுக்கு, கூடவே மூக்குக் குறைபாட்டையும் சரி செய்ய வேண்டியிருக்கும்."

பிளவுக் குழந்தைகளுக்கு எலும்புப் பதிய சிகிச்சை ஏன் அவசியமாகிறது?

"உதடுப் பிளவு இருக்கும் குழந்தைகளுக்குத் தாடை எலும்பில், சிங்கப்பல்



முளைக்கும் இடத்தில் ஒரு பிளவு இருக்கும். இதனால் அவர்களுக்குப் பேச்சு பாதிப்பு, பல் முளைப்பதில் பிரச்னை, பல் வரிசைக்

அழகுப் பிரச்னையும் அற்புதத் தீர்வும்...

குறைபாடு, வாய் துர்நாற்றம், மூக்கு வழியாக உணவு வந்து விடும் அபாயம் போன்ற பிரச்னைகள் இருப்பதால், ஏழு வயதிலிருந்து பதினொரு வயதுக்குள் எலும்புப் பதிய சிகிச்சையைச் செய்வது அவசியம்."

• கோணலாக இருக்கும் முகத்தை எப்படி நேராக்குகிறார்கள்?

"ஒரு பக்கம் முகம் சிறியதாகவும், ஒரு பக்கம் பெரியதாகவும் அமைந்துவிடுவது தான் கோணல் முகத்துக்குக் காரணம். கீழ்தாடை ஒரு பக்கம் பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ இருப்பதால்தான் இப்பிரச்னை ஏற்படுகிறது. கீழ்தாடை பெரியதாக இருந்தால், அதைச் செதுக்கி சிறியதாக்கிவிடுவோம். ஆனால் கீழ்தாடை சிறியதாக இருந்துவிட்டால், இதைச் சீரமைப்பதற்கு டிஸ்ட்ராக்ஷன் முறைப்படி சிகிச்சையளிக்க வேண்டும். உதாரணத்துக்கு, ஒரு பக்கக் கீழ்தாடை மறு பக்கத்தைவிட 20 மி.மீ. சிறியதாக இருந்தால், டிஸ்ட் ராக்டர் கருவியைப் பொருத்தி நாளொன்றுக்கு 1 மி.மீ. வீதம் இருபதே நாட்களில் இரு பக்கத் தாடைகளையும் ஒரே அளவுக்குச் சீரமைத்து விடலாம். இந்த சிகிச்சை முறையில் மேல் தாடையும் ஒருசேர சீரமைக்கப்படுவதால், இது நோயாளிகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்து விடுகிறது."



• டாக்டர் எஸ்.எம்.பாலாஜி



• முக்கிய நோய்களுக்கு அயல்நாட்டினர் சிகிச்சைக்கு வந்ததுபோய், இன்றைக்குப் பல்லுக்கும்கூட சிகிச்சை பெற இந்தியாவுக்கு வருகிறார்களாமே...

"ஆம். பல் என்பதை யாரும் சாதாரண விஷயமாக எடுத்துக்கொள்ள வேண்டாம். அதுதான் பல பிரச்னைகளுக்கு அடிப்படை. இன்னொன்று, அயல்நாடுகளில் பல் தொடர்பான பிரச்னைகளுக்கு இன்சூரன்ஸ் முக்கியத்துவம் தரப்படுவதில்லை. இதனால் பல் சிகிச்சைக்கு இந்தியாவில் ஆவதைப்போல் பத்து மடங்கு செலவாகிறது. நம்மை நாடி அவர்கள் வருவது பணத்தை மிச்சம் பிடிக்கலாம் என்பதோடு, நவீன சிகிச்சைகளின் தலைநகரமாக இந்தியா மாறி வருவதாலும் தான். அங்கெல்லாம் மக்கள் தொகை குறைவாக இருப்பதால், நாளொன்றுக்கு ஐந்து பேஷண்ட்டை ஒரு டாக்டர் பார்த்தாலே பெரிய விஷயம். ஆனால் இங்கு கதையே வேறு. நூற்றுக்கும் அதிகமானோரை ஒரு டாக்டர் மட்டுமே பார்க்கிறார். இந்த அனுபவம் டாக்டர்களுக்கு வரப்பிரசாதம். இதனை அயல்நாட்டினர் பெரிய விஷயமாகக் கருதுகின்றனர். தரமான, நம்பிக்கையான சிகிச்சை கிடைக்கும் என்று நம்புகின்றனர்; படையெடுக்கின்றனர்!"



• இப்படியிருந்த நான்....

• இப்படியாயிட்டேன்!

- விக்டோரியா

படம் : **பொள்ளாச்சி சுந்தரம்**



கல்கி



2006 நவம்பர் 26
விய கார்த்திகை 10
மலர் : 65
இதழ் : 17

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

தன்னிறைவுக்குத் தடைபோடும் 'தருமதுரைகள்'!

இந்திய ரயில்வே லாபத்தில் கொழிப்பதைக் கொண்டாடுகிறோம். ஆனால், காஞ்சிபுரம் அருகே ஆளற்ற லெவல் கிராஸிங்கை ஷேர் ஆட்டோ கடக்க முயற்சி செய்கையில் கோர விபத்து நிகழ்ந்து குடும்பமே பலியாகிறது.


இந்தியாவெங்கும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் கொடிகட்டிப் பறந்து கோடிகளை அள்ளிக் கொள்கின்றன. ஆனால், குடித்துவிட்டுக் கண்மண் தெரியாமல் ஒருவர் கார் ஓட்டி வர, மும்பை நடைபாதையில் தூங்கிக் கொண்டிருக்கும் ஏழை கட்டடக் கூலிக்கார குடும்பத்தின் பிஞ்சுக் குழந்தை உள்பட அனைவருமே பலியாகின்றனர்!

இவ்விரு சம்பவங்களுமே சமீபத்தில் நடந்தவை; இந்தியா இன்று செல்லும் தவறான பாதை குறித்து நமக்கு எச்சரிக்கை செய்பவை!

ஒரு பக்கம் உலகமயமாக்கல், தனியார் மயமாக்கல், ஏற்றுமதி நிறுவனங்களுக்குச் சிறப்புச் சலுகை, என்று அரசின் பொருளாதார கொள்கை தாராளமயமாகிக் கொண்டிருக்கிறது. இன்னொருபுறத்தில் பார்த்தால், ஏழைகளுக்கு இலவசங்கள், வேலையில்லாதோருக்கு மானியங்கள் என்று வினியோகங்கள் தொடர்கின்றன. சிறப்புப் பொருளாதார மண்டலங்களும் சாடிலைட் நகரங்களும் சிறு விவசாயிகளின் நிலங்களை விழுங்க, அவர்கள் பிழைப்புக்கு அபாயம் உண்டாகிறது. ஐ.டி. நிறுவன அடுக்குமாடிகளைக் கட்டும் ஏழைத் தொழிலாளர்கள் வீதியில் உறங்குகிறார்கள்!

விவசாய உற்பத்தி பெருகியிருப்பதாகக் கூறப்படுகிறபோதே, விவசாயிகளின் தற்கொலை அதிகரிக்கிறது. இன்னொரு பக்கம், ஜெனடிக் மாற்றம் பெற்ற விதைகள் விவசாயியை அச்சுறுத்துகின்றன.

அன்னியச் செலாவணிக் கையிருப்பு பெருகினாலும் பங்குச் சந்தைக் குறியீடு ஏறுமுகமாக இருந்தாலும், விலைவாசிக் குறியீடு





இறங்குமுகமாக இருப்பதாக நிதியமைச்சர் அடித்துச் சத்தியம் செய்தாலும் நம் நாட்டில் இன்னமும் ஏழைமையின் கொடுமை நீடிக்கிறது என்பதுடன் மேலும் தீவிரமாகிறது.

காரணங்கள் என்ன...? ஏழைகளை முன்னேற்ற வேண்டும்; அவர்களுக்குச் சிறந்த கல்வியையும் தன்னிறைவைத் தரும் வேலைவாய்ப்பையும் வழங்க வேண்டும் என்று எந்த அரசும் நினைப்பதில்லை. அவர்களுக்கு இலவசங்களைத் தந்து, தற்காலிகமாகச் சமாதானப் படுத்தி, 'தருமதுரைகளாக' அவர்கள் மனத்தில் இடம் பிடித்து வோட்டுக்களை அள்ளுவதில் மட்டுமே அரசியல்வாதிகளுக்குக் குறி...

இதன் காரணமாக நீடிக்கும் அறியாமையினால் காஞ்சிபுரத்தில் நடந்ததைப் போன்ற ரயில்பாதையில் ஷேர் ஆட்டோ சிக்கிய விபத்துகள் நடைபெறுகின்றன.

இதே காரணத்தால், தொடர்ந்து நிலவும் ஏழைமையால்தான் இன்னமும் நகரங்களின் சாலையோரத்தில் குடித்தனம் நடத்துகிறார்கள் ஏழைக் கூலியாட்கள்!

இனியும் நமது அரசுகள் நிதி இல்லை; அல்லது நிதி நெருக்கடி என்று காரணம் காட்டி இந்த பேதங்களைக் களையாமலிருக்க முடியாது! ஏனெனில், உலகிலேயே மிக அதிகமாக வரி விதிக்கும் நாடு இந்தியாதான் என்று சமீபத்திய சர்வதேச ஆய்வுகள் தெரிவித்துள்ளன - 81 சதவிகித வரியை ஒவ்வொரு இந்திய நிறுவனமும் அரசுக்கு நேர்முகமாகவும் மறைமுகமாகவும் செலுத்துவதாகப் புள்ளிவிவரங்கள் தரப்பட்டுள்ளன. லாபம் ஈட்டினாலும் ஈட்டாவிட்டாலும் பல்வேறு அடிப்படை வரிகளைச் செலுத்தியே ஆக வேண்டும்.

இவ்வளவு வரிப்பணமும் எங்குதான் போகிறது? எப்படித்தான் செலவாகிறது? என்று தட்டிக் கேட்க ஏழைகளுக்குப் போதுமான அளவு பொருளாதார ஞானம் கிடையாது. வசதி படைத்தவர்களோ தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரச் சூழலில் தங்கள் வளத்தைப் பெருக்கிக் கொள்வதில் குறியாக உள்ளார்களேயொழிய, ஏழைச் சகோதரர்களைப் பற்றிய சிந்தனையோ கவலையோ அவர்களுக்கு இல்லை.

புதிய பொருளாதாரக் கொள்கையினாலும் தாராளமயமாக்கலினாலும் பல நல்ல விளைவுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் நம் நாட்டில் ஏழை - பணக்கார இடைவெளியை அது முன்னைக்காட்டிலும் அதிகமாக்கியிருப்பதுடன் சமூகப் பிரக்ஞை, சக மனிதர்கள் மீதான அக்கறை, மனித நேயம் போன்ற உயர் பண்புகளை மழுங்கடித்தும் வருகிறது.

தாராளமயக் கொள்கையைப் பின்பற்றுவதால் மட்டுமே இந்தியா தன்னிறைவை அடைந்துவிட முடியாது என்பது உணரப்பட வேண்டும். நமக்குத் தேவை பொருளாதார வீக்கம் அல்ல; பொருளாதார ஆரோக்கியம். ●



கற்றுக்கொள்ள ஆசை!

போட்டோகிராபியைப் பற்றிப் படித்ததும் நாங்களும் அக்கலையைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆவல் பிறந்தது.

- ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்

தெருக்கூத்துக் கலைஞர்களின் அவல நிலையை அறிந்து வேதனையுற்றேன். நாடக உலகின் 'முதல் தளம்' இப்படி ஆட்டம் காணலாமா? முத்தமிழ் வித்தகரின் கடைக்கண் பார்வை விழுந்தால் சரி...!

- வானவில் மூர்த்தி,
கடலூர்

உள்ளாட்சித் தேர்தல் வன்முறைகள் கலைஞரின் நல்லாட்சிக்கு ஏற்பட்ட கரும்புள்ளி மட்டுமல்ல, சறுக்கலும் கூட.

- உமரி.
பொ.கணேசன்,
மும்பை



இயக்குநர் சீமானின் நேர்முகம் நாட்டின் நலத்தோடு விரிவாகவும், சிறப்பாகவும் பரிணமித்தது.

- ஆர்.கே.லிங்கேசன்,
மேலகிருஷ்ணன் புதூர்

விஞ்ஞானம் மூலமும், மெய்ஞானம் மூலமும் மக்களின் அஞ்ஞானத்தைப் போக்குகிறார் சுஜாதா. 'வாரம் ஒரு பாசுரம்' வரம். தமிழை வளர்க்கும் அவரின் பணி தொடரட்டும்.

- என்.கௌரி,
கோவை

எதிர்க்கட்சி வரிசையில் 'மீடியா'க்களை அமர வைத்துள்ள சென்னைப் புது மேயரின் சமயோஜித கருத்து ரசிக்கும்படி உள்ளது.

- கே.என்.பாலகிருஷ்ணன்,
கும்பகோணம்

ஜகி வாசுதேவ் நாத்திகத்துக்கும் ஆத்திகத்துக்கும் இடையேயான ஒரு நியாயமான நடுநிலைவாதி என்பதை உணர்ந்து கொண்டோம்.

- பிரபாலி,
புதூர்

திருமழிசை ஆழ்வாரின் கடலோரக் கவிதையில் அலைபாயும் நளினத்தை நிலைப்படுத்திய பாங்கு சுஜாதாவுக்கே உரித்தானது!

- ச.ஆ.கேசவன்,
இனாம் மணியாச்சி

'மௌனம்' சிறுகதை படித்தேன். அமரர் கல்கியின் பேத்தி என்பதை சீதா ரவி நிரூபித்துவிட்டார். அங்கதமும் நகைச்சுவையும் அந்த அளவுக்கு இழையோடின.

- வெ.கல்யாணி,
திருநெல்வேலி

திருத்தம்

வாதம், பித்தம், கபம் என்ற மூன்று தத்துவங்களைச் சார்ந்தே பிரக்ருதியும், உடலில் நோய்களும் உருவாகின்றன. ஆனால், 12.11.2006 இதழின் தேவ மருந்து பகுதியில் 'வாதம், பித்தம், கபம், வாயு என்ற நான்கு பிரக்ருதிகள்' எனத் தவறாக அச்சாகிவிட்டது. திருத்தி வாசிக்கவும்.

கடவுள் காத்திருக்கட்டும்!

சுவாமி சுத்தானந்தா

“கடவுளை அடைய சிறந்த வழி எது ஞானமா, பக்தியா, கடவுள் பற்றா, அல்லது நடவடிக்கைகளா?” என்று ஒரு மனிதனிடம் கேட்கப்பட்டது. “ஓர் எலும்புத் துண்டுக்காக நாய்கள் சண்டையிடுவதைப் பார்த்திருக்கிறீர்களா?” என்று எதிர்கேள்வி கேட்டான், அந்த மனிதன். தொடர்ந்து, “சண்டையில் அந்த எலும்புத் துண்டும் கலந்துகொள்வதைக் கண்டிருக்கிறீர்களா?” என்றான். இப்படித்தான் சச்சரவுகளில் கடவுள் பங்கேற்பதில்லை; சத்தியம் ஒருபோதும் சண்டையிடுவதில்லை. நாம்தான் அவரை இந்துக் கடவுள், முகமதியக் கடவுள், கிறிஸ்துவக் கடவுள், சமணக் கடவுள், புத்தமதக் கடவுள் என்று உருவகப்படுத்தியிருக்கிறோம். கடவுளுக்கென்று எந்த மதமும் கிடையாது. அவர் மதவாதியே அல்ல! அவரேதான் சர்வமும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

எந்தத் தேசத்துக்கும் குடியுரிமை கிடையாது... மக்களுக்குத்தான் குடியுரிமை. இந்தியா என்பது ‘இந்தியன்’ அல்ல, ஏனெனில் இந்தியா என்பது வெறும் பூமிதான். அதன் ஒவ்வொரு பகுதியும் இந்தியாதான். ‘இந்தியா’ என்பதே வலுவற்ற கருத்தாக்கம்தான். 1947-ஆம் ஆண்டு வரை இந்தியாவுடன் சேர்ந்து பாகிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளும் இருந்தன. இன்று, இந்தியா என்பது எது? இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே சண்டை நடந்ததும், எல்லைக்கோடு என்ற முட்டாள்தனமான கோட்டைப் போட்டுவிட்டோம். அதன் பிறகுதான் எத்தனை வேதனை! அந்தக் கோட்டை நீக்கிவிட்டுப் பாருங்கள், எத்தனை மாற்றம் நிகழ்கிறதென்று! அந்தக் கோட்டை கடவுளா உருவாக்கினார்? இந்தியா என்பது இந்தியன் அல்ல... அதற்குக் குடியுரிமை ஏதும் கிடையாது. கடவுளும் அப்படித்தான்... அவர் மதவாதி அல்ல... எல்லாமே அவர்தான்.

நமது இந்த மரபு

மிக அழகானது. இந்த மரபு என்பது மதம் சார்ந்த வெறுக்கத்தக்க சொற்றொடராக உங்களுக்குத் தோன்றலாம். இது 'நம்' முடையதற்கும் 'அவர்களு'டையதற்கும் இடையேயானது அல்ல. இது முற்றிலும் மனித மரபு. தன்னைப் பற்றிய நிஜத்தன் மையை எங்கேயும் எவரும் உணரலாம். 'நான்' என்று நீங்கள் சொன்னால், அந்தச் சொல்லின் பொருள் கிறிஸ்தவ நான், முகமதிய நான், இந்து நான் என்பதல்ல. இந்திய நான், அமெரிக்க நான் என்பதும் அல்ல. ஆண்பால் நான், பெண்பால் நான் என்பதுகூடக் கிடையாது. எல்லோருக்கும் அது ஒன்றேதான். கடவுளும் அப்படித் தான்... எல்லோருக்கும் ஒன்றுதான். வகைகள் கடவுளிடம் இல்லை... மனித மனங் களில்தான் உள்ளன.

உடலில் பல வகைகள் இருக்க முடியுமா? "இருநூற்று ஆறு எலும்புகள் இருப்பதாகச் சிலர் சொல்கிறார்கள், இருநூற்றிரண்டு என்று சிலரும், எலும்பே கிடையாது என்று சிலரும் சொல்கிறார் களே..." என்று யாரும் கேட்க முடியாது. குறிப்பிட்ட எண்ணிக்கையில் எலும்புகள் நம் உடலில் உண்டு என்பதை நாம்தான் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். கடவுள் மட்டுமே உண்மை... அவரைச் சரியாக உணர்வது நம் பொறுப்புதான்.

கடவுள் யார் என்பதற்கு முன், நம்மை நாமே புரிந்துகொள்ள வேண்டும்.

மகிழ்ச்சி அடைவேன்!

தொலைவிலும் துக்கத்திலுமாக
நீயே இல்லாமலிருப்பதுபோல
நீயே இறந்ததுபோல
நீ மௌனமாக இருப்பதை
விரும்புகிறேன்.
ஒரு நொடியில் ஒரு வார்த்தை, ஒரு
புன்னகை போதும்
மகிழ்ச்சியடைவேன் நான்...
உண்மையான மகிழ்ச்சியல்ல
எனினும்.

– யார்?

ஏனெனில் நம்மைப் பற்றித்தானே நமக்குக் குழப்பம்! நம் நிலைமைக்கு ஏற்ப ஒவ் வொரு முறையும் ஒவ்வொரு விதமாகக் கடவுளைப் புரிந்துகொள்கிறோம். சில சமயங்களில் நம்புகிறோம். சில சமயங் களில் நம்பிக்கையை இழந்துவிடுகிறோம். நம்மிடம் தன்னம்பிக்கை இருக்கும்போது, அவரை நம்புவதில்லை. வியாபாரம் நொடித்துப் போனால் மக்கள் ஜோதிட ரைத் தேடிப் போவார்கள்... வியாபாரம் செழித்திருக்கும்போது யாரும் ஜோதி டரிடம் செல்வதில்லை. தொழில் நசிந் ததற்குக் காரணம் நம் தீய பழக்கம், அல்லது நம் அசிரத்தை என்றெல்லாம் பொறுப்பேற்க எவரும் தயாராக இல்லை. உடனே ஜோதிடரை அணுகிவிடுவோம். "உங்களைச் சனி படுத்துகிறது" என்று அவர் சொல்லிவிட்டால் ரொம்ப நிம்மதி... 'இந்தச் சீரழிவுக்கு சனிதான் காரணமே தவிர, நாம் அல்ல!' என்னும் முடிவுக்கு வருகிறோம்.

எல்லாம் நன்றாகவே நடக்கும்போது பலர் கோயிலுக்குச் செல்வதில்லை. கடவுள் காத்திருக்கட்டுமே! சிக்கல் ஏற் பட்டு நம்மால் தீர்க்க முடியாது போனால் தான், நாம் கடவுள் பக்கம் சாய்வோம். அப்போதும், எந்தக் கடவுளை நாடுவது என்று புரிவதில்லை... உள்ளூர்க் கடவுளி டம் முதலில் ஆரம்பிப்போம். அதில் ஏதும் பலனின்றிப் போனால், திருப் பதிக்குச் செல்வோம். திருப்பதிக்குப் போயும் லாபமில்லை என்றால், அடுத்து குருவாயூர்; காஞ்சி; வைத்தீஸ்வரன் கோயில்; வேளாங்கண்ணி, நாகூர் தர்கா. ஒன்றிலும் பிரயோஜனமில்லை என்றால், நாம் நாத்திகராகிவிடுவோம்! உடையை மாற்றுகிற மாதிரி கடவுளையும் மாற்றிக் கொண்டே இருக்கிறோம். கடவுள் மாறுகிறாரா அல்லது நாம் மாறுகிறோமா? நாம்தான் மாறுகிறோம். நம்மிடமிருந்து துவங்கும் அந்த மாற்றம் நல்லது என்பது உங்களுக்குப் புரிகிறதா?

"கடவுள் என் நல்ல நண்பர், இந்த நண்பர் எனக்கு நண்பராக இருப்பதால், கடவுள் அவருக்கும் நண்பர்" என்றார் என் சிநேகிதர். உண்மைதானே... அப் படித்தானே நம் நட்பு வட்டம் விரிகிறது? நண்பருடைய நண்பர் நமக்கும் நண்பரா

கிறார். அவர் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருக்கையில் எனக்கு ஒரு கதை நினைவுக்கு வந்தது.

முல்லாவுக்கு ஒரு நாள் நல்ல வாத்து ஒன்று பரிசாகக் கிடைக்கிறது - வளர்ப்பதற்காக அல்ல, உண்பதற்காக. அதைக் கொண்டு சுவையான சூப் தயாரித்து, பருகும் சமயத்தில் ஒரு நண்பர் வருகிறார். "முல்லா, உனக்கு இந்த வாத்தைப் பரிசளித்தவர் எனது நண்பர். அதனால், எனக்கும் கொஞ்சம் சூப் கொடுப்பீர்களா?" முல்லா கொடுத்தார். ஏனென்றால் அவர் நண்பருக்கு நண்பராயிற்றே! அங்கு வரும் இன்னொருவர், தான் அந்த நண்பருக்கு நண்பரின் நண்பர் என்கிறார். சூப்பில் கொஞ்சம் தண்ணீர் விட்டுப் பெருக்கி, அவருக்கும் கொடுக்கிறார் முல்லா. அடுத்து, நண்பருக்கு நண்பரின், நண்பருக்கு நண்பர் என்று சொல்லிக் கொண்டு மற்றொருவர் வர, சூப்பில் மேலும் நீர் சேர்ந்துகொண்டே போகிறது. இப்படியே ஏழாவதாக வரும் நண்பர் சூப்பை ருசி பார்த்துவிட்டு, "வாத்து சூப்பா இது?" என்று முகத்தைச் சுளிக்க, "இல்லை... நீங்கள் நண்பருக்கு நண்பரின், நண்பருக்கு நண்பரின், நண்பருக்கு நண்பரின் நண்பர் என்பதைப்போல, இதுவும் சூப்புக்கு சூப்புக்கு சூப்!" என்கிறார் முல்லா. மிஞ்சியது, ருசியற்ற-நீர்த்துப்போன சூப்தானே!

ஆனால், கடவுளை உணர்தல் என்ற சத்தியம் இப்படியல்ல. நீங்கள் நண்பருக்கு நண்பரின், நண்பருக்கு நண்பராக இருந்தாலும், கடவுளிடம் எந்த மாற்றமுமின்றி அப்படியேதான் இருப்பார். உணர்தல் எல்லோருக்கும் ஒன்றேதான். இப்போது உணரப்போகிறீர்களா அல்லது பிறகா என்பது முக்கியமல்ல; அதை உணர்த்துவது கிருஷ்ணரா, கிருஷ்ணானந்தரா என்பதிலும் வித்தியாசமில்லை. யார் உணர்த்தினாலும், எப்போதும் இருப்பதைப் போல முழுமையானவர் கடவுள்.

ஓர் உரையாடல் என் நினைவுக்கு வருகிறது... "கடவுள் என்பதைப் பற்றி உன் கருத்தென்ன?" என்று ஒருமுறை சிறுவன் ஒருவனைக் கேட்டேன். "பத்துப் பன்னிரண்டு வயதுச் சிறுவனாக நான் இருந்த போது, எனக்கு ஒரு சைக்கிள் கொடுக்கும்படி கடவுளை வேண்டினேன். பின்னர் நான் பெரியவனானதும், அப்படிக் கேட்டது சரியில்லை என்பதைப் புரிந்துகொண்டேன். அதனால், சைக்கிளைத் திருடிவிட்டு மன்னிப்பு கேட்டுவிட்டேன்" என்றான்!

வளரும் பருவத்தில் சராசரி மனிதன் தனக்குச் சௌகர்யமான முறையில் கடவுளை ஏற்கிறானே தவிர, அவர் இருக்கும் விதத்தில் அல்ல. எந்தக் கருத்து சௌகர்யமாக இருக்கிறதோ அதை ஏற்று, உடனுக்குடன் அதை மாற்றிக்கொள்ளவும் செய்வான். இது ஒரு விளையாட்டு... கடவுள் பெயரைச் சொல்லி நாமெல்லோருமே விளையாடிக் கொண்டிருக்கிறோம் - நம்மை வைத்தே நாம் விளையாடுகிறோம் என்பது புரியாமல்!

நேர்முகத் தேர்வு ஒன்றில் அனைவரிடமும் மிக எளிமையான கேள்வி ஒன்று கேட்கப்பட்டது - "மூன்று மூன்றுகள் எவ்வளவு?" எல்லோருமே சரியான விடையளித்திருந்தாலும் ஒரே ஒருவருக்குத்தான் வேலை கிடைத்தது. "முதலாளி என்ன சொல்கிறாரோ அதுதான்!" என்று அவர் சொன்னதனால்தான் அவரைத் தேர்ந்தெடுத்தார்கள். வேலை செய்வது மட்டுமல்ல, அதை முதலாளி சொல்படி செய்வதுதான் நம் பொறுப்பு. இப்படிப்பட்டதுதான் வாழ்க்கையும்!

(தொடரும்)

நான் இங்கே இருக்கிறேன்

வெண்மையும் குளிருமான
தெளிந்த நாள்.
சுத்தமாகக் கழுவப்பட்ட மணல்.
கடலில் சுருளும் நுரை.
அந்த அளவிடமுடியாத தனிமையில்
எரிந்து கொண்டயிருக்கிறது
என் சுதந்திரத்தின் சுடர்.

ஆனால்
நான் விரும்பிய உலகம் இதுவல்ல

— யார்?

பயமுறுத்தும்

ஒரு பட்டியல் தருகிறேன் - இதில் காணப்படும் அனைத்து நிலைகளும் ஒரே ஒரு காரணத்தால் உருவாகக்கூடியவை :

* மூளையில் ரத்த ஓட்டம் குறைவதால் விளையும் பக்கவாதம் (ஸ்ட்ரோக்)
* நரம்பு பிடிப்பு நோய், வெரிகோஸ் வெயின்ஸ் என்னும் இரத்தநாள விரிவடைதல் நிலை.
* பாலுணர்வு குறைதல்
* பாதங்கள் விரிவடைதல்
* முதுகு வலி
* குடல் இறக்கம்
* மூச்சுத் திணறல்
* முழங்கால் வீக்கம்
* மூச்சுக் கோளாறுகள்
* தாழ்வு மனப்பான்மை
* ஆண்மைக் குறைவு
* ஆயுள் குறைவு

பயமுறுத்தும் பட்டியலாக இருக்கிறது அல்லவா! இவற்றுக்கான 'சிங்கிள் ரீசனை' நீங்கள் இன்னும் யூகித்திரா விட்டால் இதோ



இருக்கிறது விடை :

உடல் பருமன்!

உயரத்துக்கும் வயதுக்கும் ஏற்றதைக் காட்டிலும் எடை மிக அதிகமாகும் நிலையே ஒபிசிடி என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் உடல் பருமன். ஆயுர் வேதம் இதனை ஸ்தௌல்யம் என்கிறது (குண்டாக இருப்பவர்களை 'ஸ்தூல சரீரம் உடையவர்' என்று பேச்சுவாக்கில் வர்ணிக்கப்படுவதை நீங்கள் கேட்டிருக்கக்கூடும்).

இந்த நிலை பற்றி மேற்கொண்டு விவரிக்கும் முன், உடல் பருமனும் அதிக எடைப் பிரச்னையும் வெவ்வேறானவை என்பதை உணர்த்த விரும்புகிறேன். அதிக எடை இருப்பவர்கள் எல்லோருமே அதிக பருமனாக இருப்பார் என்று சொல்ல முடியாது. எடை என்பது தசை, எலும்பு, கொழுப்பு என்ற மூன்றையும் உள்ளடக்கியது. 'பருமன்' அல்லது ஒபிசிடியானது உடலில் தேங்கிவிட்ட கொழுப்பை மட்டுமே குறிப்பது.

கொழுப்பு எவ்வாறு உடலில் சேர்கிறது? செரிமான சக்தியாகிய அக்னி அதிகரிக்கும்போது அதன் காரணமாக அதிக உணவு உட்கொள்ளப்பட்டு, அது கொழுப்பாக மாறி உடலில் ஆங்காங்கே படிகிறது. பொதுவாக, உட்கொள்ளும் உணவின் அளவைக் காட்டிலும் செலவிடும் உடல் சக்தி குறைவாக இருப்பதால்தான் இது நிகழும். பெண்களுக்குப் பருவம் எய்தும் காலத்திலும் பிரசவத்துக்குப் பின்னரும் உடம்பில் சேரும் கொழுப்பு பின்னர் குறைவதில்லை.

உட்கொள்ளும் கலோரிகளையும் செலவிடும் கலோரிகளையும் சமமாக வைத்திருந்தால் உடலில் கொழுப்பு சேராது. ஆனால் மாத்ரு பித்ருஜபாவம் என்று ஆயுர்வேதம் குறிப்பிடுகிற ஹெரிடிடரி ஃபாக்டர் உடல் பருமனை நிர்ணயிக்கிறபோது, அங்கே கலோரி கணக்கெல்

டாக்டர் எல்.மஹாதேவன்



லாம் செல்லுபடியாவதில்லை!

செரிமான சக்தியாகிய அக்னி ஓவர் டைம் வேலை செய்தாலும் உண்ணும் உணவின் அளவு கூடி கொழுப்பைக் கூட்டிவிடும். ஜீரண சக்தியான அக்னி சக்தியின் விளைவாக, உணவு ஜீரணமாகி சப்த தாதுக்களை (ஏழு வகை உடல் அம்சங்கள்) உருவாக்குகிறது - ரஸம், ரத்தம், மாம்ஸம், கொழுப்பு, எலும்பு, மஜ்ஜை, சுக்லம் ஆகியவை அந்த ஏழு தாதுக்கள். இப்படி ஏழு தாதுக்களாக மாறுவதற்குப் பதிலாக, உணவு கொழுப்பாகவே மாறிக் கொண்டிருந்தால் ஒபீசிடியில் கொண்டு நிறுத்தும்! இந்தக் கொழுப்பே பிற தாதுக்களைப் போஷாக்கு அடையவிடாமல் தடுத்து விடுகிறது.

உடல் மெலிந்திருப்பதையே ஆயுர்வேதம் ஆரோக்கிய நிலையாக வலியுறுத்துகிறது. ஸ்தூல உடம்பு உடையவர்களை 'நிந்தித புருஷன்' என்று சரகர் (ஆயுர்வேத ஆசார்யர்) குறிப்பிடுகிறார். அதாவது, இவர்கள் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து, சிகிச்சையை ஏற்கவியலாத உடற்கட்டு உடையவர்களாகி விடுவார்கள்.

வாத பித்த கபங்களில் கபத்துக்கும் உடல் கொழுப்புக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. கபத்தை அதிகரிக்கும் அனைத்துமே கொழுப்பையும் அதிகரிக்கும். உதாரணம் : சோம்பல், உடற்பயிற்சியின்மை, பகல் தூக்கம், அசையாமல் உட்கார்ந்த நிலையில் வேலை செய்தல், மனமகிழ்ச்சியால் திளைப்பு; எண்ணெய்ப் பலகாரங்கள் இனிப்பு.


இந்த ஸ்தூல சரீரிகளுக்கு அதிக பசி, வியர்வை, சோர்வு, நீர் வேட்கை, மிகுதியான உறக்கம் போன்ற தொந்தரவுகளும் இருக்கும். டயபடீஸ் கொலஸ்ட்ரால் 'வந்தேன் வந்தேன்!' என்று





ஆஜராகிவிடும்.

சரி, கொஞ்சம் குண்டாக இருப்பவர் அதிக எடை உள்ளவரா, அதிக பருமனானவரா என்பது எப்படித் தெரியும்...? இடுப்புச் சுற்றளவு முதல் அளவுகோல். ஆண்களுக்கு 38 அங்குலமும் பெண்களுக்கு 35 அங்குலமும் இடுப்புச் சுற்றளவு இருப்பது சிலாக்கியம். இந்த எல்லைக் கோட்டைத் தாண்ட ஆரம்பித்தால் உஷாராகி விடுங்கள்.



இது தவிர, BMI எனப்படும் Body Mass Index-ஐக் கணக்கிட்டுப் பார்த்துக் கொள்ளலாம். உங்கள் உடல் எடையை (கிலோ கணக்கில்) எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் உயரத்தை மீட்டர் கணக்கில் அளந்து கொள்ளுங்கள். உயரத்தை அதே எண்ணால் பெருக்கிப் பெறும் விடையால் எடையை வகுக்க வேண்டும். இதில் கிடைக்கும் விடையே உங்கள் BMI.

$$\frac{\text{உங்கள் எடை கிலோ கணக்கில்}}{\text{உங்கள் உயரம் மீட்டர் அளவில்} \times \text{உங்கள் உயரம் மீட்டர் அளவில்}} = \text{BMI}$$

பி.எம்.ஐ அடிப்படையிலான மருத்துவ தீர்மானங்கள் இவை

பி.எம்.ஐ.	உடல்நிலை
18.5.க்கும் குறைவு	— குறைந்த எடை
18.5 - 24.9	— சாதாரண எடை
25.0 - 29.9	— அதிக எடை
30.0 - 34.9	— பருமன்
35.0 - 39.9	— கூடுதல் பருமன்
40க்கு மேல்	— மிக அதிக பருன்

கணக்கெல்லாம் போட்டு நிர்ணயிப்பது ரொம்ப சுலபம். எடையைக் கட்டுப்படுத்துவதும் குறைப்பதும்தான் ரொம்பப் பெரிய சவால். அதற்கான வழிமுறைகளை இரு வாரங்கள் கழித்துப் பார்ப்போம்.

(தொடரும்)

உத்வர்த்தனம்

மூலிகைப் பொடிகள் அல்லது சூர்ணங்களால் செய்யப்படும் ஒருவகை மஸாஜ் உத்வர்த்தனம். கொள்ளு, கொட்டம், சுக்கு, நவதானியங்கள்

> **“அக்னி அதிகரிக்கும் போது அதிக உணவு உட்கொள்ளப்பட்டு, அது கொழுப்பாக மாறி உடலில் ஆங்காங்கே படிகிறது.”**

போன்றவற்றை இலேசாக வறுத்து, பொடி செய்து, உடம்பில் கீழிருந்து மேலாகத் தேய்க்கப்படும் சிகிச்சை இது. உடல் பருமன் மற்றும் கப பிரதானமான நோய்களுக்குக் கைகொடுக்கும் வாரம் ஒருமுறை, சில மாதங்களுக்கு ஒருமுறை அல்லது தினமும் என தேவையைப் பொருத்து அளிக்கப்படும்.

தன்வந்தரி டாலர் பரிசுப் போட்டி - 5

குழந்தைகள் வெறுமே கொறிக்கக் கேட்கும்போது அவர்களுக்குத் தரக்கூடிய ஆரோக்கிய உணவுக் குறிப்பை அஞ்சல் அட்டையில் எழுதியனுப்புங்கள். தலைசிறந்த குறிப்புக்கு டாக்டர் மஹாதேவன் தன்வந்தரி டாலர் பரிசளிப்பார். இரண்டாவது பரிசாக தேவமருந்து முதல் பாகம் புத்தகம்.

கடைசி தேதி : **27.11.2006**

ஆசிரியர் தீர்ப்பே இறுதி


உங்களில் பலருக்கு

எஸ்டேட் ஃப்ரெஷ் ஃபில்டர் காபி

ஒரு மரபாகும்

EfG
ESTATE
FRESH
Coffee






வெகு காலமாக, புதிதாக தயாரிக்கப்பட்ட தரம் வாய்ந்த காபியை உங்கள் விருப்பத்திற்கேற்ற வகையில், உங்கள் ஒவ்வொருவருக்கும் நாங்கள் வழங்கி வருவதை நீங்கள் நன்கறிவீர்கள். மறுக்கவியலாத மற்றும் மிக உயர்ந்த தரத்துடன் எஸ்டேட் ஃப்ரெஷ் ஃபில்டர் காபி உற்பத்தி செய்யப்படுவதால், பலகாலமாக எங்கள் வாடிக்கையாளர்களால் அது பெரிதும் விரும்பப்பட்டு வருகிறது. தரத்தை விரும்பும் எங்கள் வாடிக்கையாளர்களின் வசதிக்காக, அவர்களுக்கு அருகாமையில் உள்ள கடைகளில் எஸ்டேட் ஃப்ரெஷ் ஃபில்டர் காபி கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காலம் காலமாக உங்கள் ஆதரவையே எங்கள் நோக்கமாக கொண்டுள்ள நாங்கள், உங்கள் பகுதி மற்றும் தமிழ்நாடு முழுவதிலும் எங்களது தரம் வாய்ந்த தயாரிப்பான எஸ்டேட் ஃப்ரெஷ் ஃபில்டர் காபியை புதிய எழில்மிகு மற்றும் சிறப்பான பேக்கிங்கில் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உங்கள் ஒவ்வொருவரின் நாவின் சுவையை திருப்தி செய்து, நீங்கள் சுவைக்கும் காபியின் மணம் உங்கள் நாவில் நெடுநேரம் நிலைத்திருக்கச் செய்வதே எங்கள் நோக்கமாகும். எனவே உங்கள் அருகாமையிலுள்ள பலசரக்கு கடைக்குச் சென்று, எஸ்டேட் ஃப்ரெஷ் ஃபில்டர் காபியை கேட்டு வாங்கிப் பருகி, உங்கள் காபியின் விசேஷ மணம் மற்றும் சுவையை அனுபவித்து மகிழுங்கள்.





இதுபோன்ற நிறைவில்லை
வேறெந்த காபியிலும்

COFFEE 85%
CHICORY 15%



EfG
Estate Foods & Grain

சென்னை மற்றும் தமிழகமெங்கும் வியாபார விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.
தொடர்பு கொள்க: Chennai:9841221796, Rest of Tamilnadu: 9486263342

கவசம்

ராகவனின் மனது ஒரு நிலையில் இல்லை. வீசும் காற்றில் நாலாபுறங்களிலும் அலையும் கிழிந்து போன காகிதம் போல இருந்தது.

ஜன்னலுக்கு வெளியே பார்வையைச் செலுத்தினான். ஆள் நடமாட்டம் இல்லாத ஒரு சாலை போலத்தான் இருக்கிறது ஒவ்வொருவரின் மனமும். பிரச்னைகள் பாதசாரியாக, சைக்கிளாக, காராக, பேருந்தாகப் பெருகும்போது போக்குவரத்தில் நெரிசல் ஏற்பட்டு மூச்சுத் திணறலே வந்துவிடுகிறது. அப்படியான மூச்சுத் திணறலில்தான் இருந்தான் ராகவன்.

'என்னங்க...! ரேஷன்ல இன்னைக்கு அரிசி வாங்கணும்.'

'இன்னிக்குச் சமாளிச்சுட்டேம்பா. நாளைக்கு நான் ஸ்கூல் ஃபீஸ் கட்டியே ஆகணும். இல்லேன்னா படிப்பை மறந்துட வேண்டியதுதான். நீங்க நாடகத்துல நடிக்கறீங்க; நான் இந்த ஒரு வாரமா பள்ளிக்கூடத்துல நடிக்கறேன். எத்தனை நாளைக்கு நடிக்கறது...? உங்கள மாதிரி எல்லாம் என்னால நடிக்க முடியாதுப்பா...'

மனைவியும் மகனும் பேசியது நினைவில் வந்துபோனது.

இன்னும் அரை மணி நேரத்தில் நாடகம் துவங்கிவிடும். எல்லோரும் நடிக்க ஆரம்பித்து விடுவார்கள்.

'வறுமையை எதிர்த்து எதிர்த்து போராடித் தோற்றுப் போகிறேன். எனக்கு எதற்கு இந்த வீரன் வேடம்...? நல்ல நிலையில் வைத்துக் குடும்பத்தைப் பாதுகாக்க முடியவில்லை... இந்தக் கவசம் எதற்கு...?'

ராகவனுக்குள் வாதம் நிகழ்ந்தது.

திரும்பி மெள்ள நடந்து வந்து நாற்காலியில் அமர்ந்து கொண்டான். பக்கத்திலிருந்த மணிவேல் அண்ணனைப் பார்த்தான். பஞ்சு மெத்தையில் அமர்ந்தபடி ஏதோ யோசனையில் இருந்தார்.

நல்ல நடிகர். எந்த வேடம் தந்தாலும் அந்த வேடத்துக்கு உயிர் கொடுத்து விடுவார். நேற்று முன்தினம்கூட பக்கத்து ஊர் திருவிழாவில் நடத்தப்பட்ட நாடகத்தில் கர்ணன் வேடத்தில் அசத்தலாக நடித்து அரங்கத்தையே அதிர வைத்தார்.

"என்னடா பார்க்கற?" என்றார்.

"துன்பம் வரும்போது சிரிக்கணுமின்னு வள்ளுவர் சொல்லியிருக்காரே... அதான் சிரிக்கலாமான்னு பார்க்கறேன்..."

"உனக்கென்னடா துன்பம்?"

"என்னண்ணே இப்படி கேட்டுப்புட்டீங்க..? இந்த மாசம் பட்ஜெட்டுக்கே திணறிக்கிட்டு இருக்கேன். பையனுக்கு ஸ்கூல் ஃபீஸ் கட்டணும். என்ன செய்யறதுன்னே தெரியல. முன்ன மாதிரி இந்த நாடகங்களுக்கும் மதிப்பு இல்லாமப் போயிடுச்சு. பாட்டுக் கச்சேரி, பாட்டுக்குக் குத்தாட்டம் இதுக்குத்தானே இப்ப மவுசு! ஏண்ணே...! நாமளும் அப்படி நடிச்சா என்ன..? நம்ம கஷ்டம் தீரணும்னா வேற



ஆங்கரை பைரவி

வழியே இல்லண்ணே..."

மணிவேலுக்குக் கோபம் வந்துவிட்டது.

"டேய்...! என்ன நினைச்சுக்கிட்டுப் பேசறே...? ஆபாசப் பாட்டு பாடுறது, அதுக்கு மேடையில அசிங்கமா டான்ஸ் ஆடுறது வேணும்னா நம்மள வளர்த்து விடும். ஆனா, அதைப் பார்க்குற எத்தனை பேரோட மனசு கெட்டுப் போகும் தெரியுமா..? காசுக்காகக் கண்டதையும் செய்யறவனா கலைஞன்?"

ராகவனின் தோளைத் தொட்டுத் தம் பக்கம் திருப்பினார்.

"டேய்! பாக்கெட்ல பத்துப் பைசா இல்லாட்டியும் கம்பீரமா இந்த வாளைச் சுழட்டிக்கிட்டுப் பட்டினியோட வசனம் பேசறதும், அள்ளிக் கொடுக்கற கர்ணன் வேடத்துல நடிச்சுப்புட்டு சம்பளத்துக்காகக் காத்திருக்கறதும் முரண்பாடா தெரியலாம். ஆனா அதுதாண்டா வாழ்க்கை! கலங்காதே, சமாளிக்கலாம்!"

ராகவன் நம்பிக்கையோடு நடிக்க எழுந்தான். ●





என் மனசுல யாரு?

ஏன்னாச்சு காயத்ரி ஜெயராமுக்கு? விஜய் டி.வி.யின் 'கிராண்ட் மாஸ்டர்' நிகழ்ச்சியில் கலக்கிக் கொண்டிருந்தவரை திடீரென்று காணோம். இப்போது புதிதாய் அந்த இடத்துக்கு வந்திருக்கிறார் 'கருத்தம்மா' மகேஸ்வரி. ஒரு காலத்தில் தமிழ் சினிமாவின் முக்கிய ஹீரோயினாகத் திகழ்ந்தவர், நடுவில் மாயமாகி இப்போது சின்னத் திரைக்கு வந்துவிட்டார்.



"சினிமாவுக்கு வரணும்ங்கிறது என்னோட லட்சியமா என்னைக்கும் இருந்ததில்ல. ப்ளஸ்டூ முடிச்சுட்டு லீவ்ல ஒரு கல்யாணத்துக்குப் போனப்போ, பாரதிராஜா சார் பார்த்துட்டு 'நடிக்கிறியா'ன்னு கேட்டாரு. பிடிச்சிருந்தது; நடிச்சேன், அவ்ளோதான். அதுக்கப்புறம் சில வாய்ப்புகள் வந்தும் கருத்தம்மா கேரக்டர் அளவுக்குப் பேசப்படல. அதனால நானும் வருத்தப்படல. பிறகு ஃபேஷன் டிசைனிங்ல பிசியாயிட்டேன்" என்று ஃப்ளாஷ்பேக்கிய மகேஸ்வரியிடம் **கிராண்ட் மாஸ்டர் வாய்ப்பு கிடைத்தது எப்படி?** என்றோம்.

"திடீர்னு விஜய் டி.வி.யிலிருந்து போன். கிராண்ட் மாஸ்டர் நிகழ்ச்சியை நீங்கதான் தொகுத்து வழங்கணும்னு. எனக்கு ரொம்ப சந்தோஷமா இருந்தது. ஓ.கே. சொல்லிட்டேன். மத்தபடி காயத்ரி ஏன் போனாங்கன்னெல்லாம் எனக்குத் தெரியல."

ஏன் ப்ரோக்ராம்ல ஒரே சோகமயமா தெரியறீங்க?

"உங்க கண்ணுலதான் குறை. நான் ரொம்ப கலகலப்பானவ. அதே கலகலப்போடதான் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கறேன்."

யார் மனசுல யாரு? உங்க மனசுல யாரு?

"கல்யாணமா? இவ்ளோ சீக்கிரமா? அதுக்கெல்லாம் இன்னும் டைம் இருக்குங்க. சாதிக்க வேண்டியது நிறைய...."

அடுத்து சீரியலா?

"வாய்ப்புக் கிடைச்சா செய்றது ஒண்ணும் தப்பில்லையே. கவுசல், மீனா, சுகன், தேவா எல்லாம் கலக்கற மாதிரி நானும் கலக்கப் போறேன்."

திரும்பவும் சினிமா?

"நோ அண்ணி, அக்கா ரோல். ஒன்லி ஹீரோயின். நம்ம ஆட்கள் கூப்பிட மாட்டாங்க; நானும் ஆசைப்பட மாட்டேன்."

- மனோ சௌந்தர்

படம் : **பொள்ளாச்சி சுந்தரம்**

போட்டிக் கதை

ராதா கையிலே அகப்பட்ட கூழாங் கல்லைத் தண்ணீரிலே தூக்கி எறிந்தாள். கடலுள் மறைந்து போனது. நிம்மதி. அப்படியே அடியில் தங்கிப் போகும். சலனமில்லை.

'நானும் அப்படிப் போனாலென்ன?'

ராதாவுக்குத் தன் எண்ண ஓட்டம் ஒரு கணம் பூகம்ப அதிர்ச்சியைத் தந்தது. மறுகணமே எல்லையில்லா அமைதியும், ஆனந்தமும் சூழ்ந்து கொண்டன. மனம் அதிர்ச்சிகளைத் தாங்கும் சக்தியை இழந்துவிட்டது நிதர்சனமாகத் தெரிந்தது.

தேனாய் இனித்த இல்லற வாழ்க்கை சீர்குலைந்து போனது. கணநேரக் கவனக் குறைவால்.

"பின் கதவைத் தாழ்போட்டுக் கொள் என்று சொன்னால் கேட்க மாட்டேன் என்கிறாயே?" அம்மா கெஞ்சுவாள்.

அலட்சியம். இளமைத் திமிர். "என்னை யார் என்ன செய்ய முடியும்?" முடிந்தது! திறந்த கதவு வழியே நுழைந்த மூன்று கயவர்களால் அந்தப் பூங்காவனத்தை, சூறையாடப்பட்ட காடாய் ஒரு கணத்தில் மாற்ற முடிந்தது.

துவம்சம் செய்யப்பட்டு மயங்கிக் கிடந்த ராதாவை முதலில் கண்டவள் வேலைக்காரி. பதறிப்போய் போலீஸுக்குப் போய், ரத்தன் ஓடிவர, ஊரே கலகலத்துப் போய்விட்டது.

இரும்புக் கரம் கொண்டு அனைவரையும் ஒதுக்கித் தள்ளி, அன்புக் கரம்

அகிலா கிருஷ்ணன்

கொண்டு அரவணைத்தான் ரத்தன்.

"மறந்து விடு! நானிருக்கிறேன்."

அவனிருந்தான். ஆனால் மறக்க விடவில்லை உலகம். அன்பே உருவான அம்மா திகிலோடு கேட்டாள்: "அதுக்கப்புறம் மாதா மாதம் குளிக்கிறியா?"

ராதா உடைந்து போனாள்.

மாமியின் மௌனமும் குத்தியது.

"உன் மனசு எவ்வளவு சுத்தம்னு தெரியுமடி கண்ணே."

'அப்போது தன் உடல் கறைபட்டது என்று சொல்கிறாளோ?' பேச்சும் சுட்டது; மௌனமும் குத்தியது. சுருண்டு போனாள்.

ஒரு மாற்றமும் வந்தது. கொங்கணுக்கு மாற்றம். ரத்தன் பதவியில் மூன்று வருட கிராம சேவை கண்டிப்பான ஒன்று. கேட்டுப் பெற்றிருக்க வேண்டும்."

கடலோரத்தில் உயரப் பாறைகள் மீது கவிதையைப் போல வீடு; நீலக் கடல், பச்சைப் போர்வை போர்த்துக் கொண்ட பூமி. சின்னஞ்சிறு சிட்டுகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க வாய்ப்பு வந்தபோது பரவசம். அரபிக் கடலோர அழகு

அமரர் க



வீட்டில் அடுத்த வீட்டு ஆஷா - சசிதர் நட்பு ஓர் இதமான போனஸ். ஆஷா, ரத்தனின் இள வயதுப் பள்ளித் தோழி. அற்புதமான தம்பதிகள்.

கவலையெல்லாம் மறக்கத் தொடங்கிய காலம். ஆனால் கறையான் திரும்ப வந்துவிட்டது அரிக்க.

சின்னச் சின்ன சந்தேகங்களின் தொகுப்பு - விஸ்வரூபம்.

"வருகிறேன் என்றால் வேண்டாம் என்கிறாரே மாப்பிள்ளை"– அம்மாவின் கவலை.

''நீ வர வேண்டாம் என்றால் வரவில்லை"– மாமியின் விரக்திக் கடிதம்.

"மிஸஸ் ரத்தன், தமிழ்ச் சங்கக் கூட்டத்துக்கு நீங்கள் ஏன் வரவில்லை? நாங்கள் மங்களூரில் உங்களை எதிர் பார்த்தோமே"- சென்னை நட்பு வட்டாரத்தின் கேள்வி.

''நான் ரத்தனுக்கு அவமானச் சின்னமாய் இருக்கிறேன் போலும். அதுதான் என்னைத் தனிமைச் சிறையில் வைத்திருக்கிறாரோ.'-

இத்தனை மனப் போராட்டங்கள் தேவையா? ஒரேயடியாகப் போய் விட்டால் நிம்மதி. ராதா எழுந்து கடலை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

...னைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான கதை

நன்றி, என் தாயே நன்றி!



"ராதா'' ஆஷாவின் மென்மையான குரல். தூக்கிவாரிப் போட்டது; திரும்பினாள்.

''அஸ்தமனத்தை ரசித்துக் கொண்டிருக்கிறாய். ரத்தன் வந்து விட்டார். என் வீட்டில் உட்கார வைத்துவிட்டு உன்னைக் கூப்பிட வந்தேன். சாரி."

"என் எண்ண ஓட்டத்தை யூகித் திருப்பாளோ? ச்சே, இருக்காது. அரபிக் கடலே! காத்திரு, நாளை வருகிறேன், என்னை அரவணைத்துக் கொள்!

ஆஷா வீட்டில் ரத்தன் அமர்ந்திருந்தான். சோர்ந்தும் இருந்தான். "போகலாமா?"

சசிதர் கடச் கட டீயுடன் வந்தார். ரத்தன் கோப்பையை எடுக்க முயற்சி செய்ய, விளையாட்டாகக் கைகளைத் தட்டி விட்டார்.

"பொறு மேன். என் பெண்டாட்டிக்குக் கொதிக்கக் கொதிக்க வேண்டும். முதல் கப் அவளுக்குத்தான்." ஆஷா சின்ன சிரிப்புடன் கோப்பையை எடுத்தாள்.

"ராதா, ஒரு போட்டிக்காகச் சிறுகதை ஒன்றை எழுதி வைத்திருக்கிறேன். உன்னைப் போல அவ்வளவு அருமையான ஆங்கில நடை எனக்கு வராது. மொழி பெயர்த்துத் தருவாயா?" என்று கேட்டாள் ஆஷா. உற்சாகமாக இருந்தது. ஆஷா ஓர் அருமையான எழுத்தாளர்.

"இன்று இரவு கொடுக்கிறேன். நாளை காலைக்குள் வேண்டும். சின்னஞ் சிறு கதைதான்." ராதா தலையை அசைத்தாள்.

"தலைவலி மாத்திரை இலவச இணைப்பு." சசிதர் சிரித்தார்.

மொழிபெயர்ப்பைத் துவக்கினாள் ராதா.

நன்றி, என் தாயே நன்றி!

தன் துயரங்களையும் சந்தேகங்களையும் முன் நிறுத்தும் நேரமில்லை இது என்று சீதா தேவி அறிவாள். அவள் நாட்டின் முதன்மை நாயகி அல்லவோ! தாய்மார்கள் மூவரும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். தம்பி பரதன் அக்னியில் குதிக்கத் தயாராக இருக்கின்றான். சத்ருக்னன் தோளில் அவ்வளவு பாரமும். 'இனி பொறுக்க மாட்டோம்' என்ற தவிப்பில் மக்களும், மந்திரிமார்களும்.

அனுமனை முன்னே அனுப்பியாயிற்று. கௌதமர் ஆஸ்ரமத்தில் ஓரிரவு தங்கிச் செல்லலாம் என்று இராமன் எடுத்த முடிவு வியப்பாக இருந்தது. அவனிடத்தில் தனித்துப் பேச மனமும் இல்லை, மார்க்கமும் இல்லை, அவகாசமும் இல்லை.

தவிப்போடு தனிமையில் அமர்ந்தாள் தாயார். 'ஏன்? ஏன்? என் ராமா நீயா இப்படிச் செய்தாய்? என் நிழலைக் கூட அன்னியன் தொட முடியாது என்று அறியாதவனா நீ? உன்னுள் உன் உயிர் அல்லவா நான்! உன் இதயத்தில் என்னைச் சுமப்பவனே, எனக்குக் களங்கம் ஏற்பட வாய்ப்புண்டா?'

'இவ்வளவுதானா? என் புனிதத் தன்மையை நிரூபிக்க அக்னிப் பரீட்சை தேவையா, என்னவனே! நீ இப்படி நினைத்தாய் என்ற நினைப்பே என்னைத் தீயாய்ச் சுடுகின்றதே, என் நாயகனே!" சீதையின் மனம் அழுதது. வாடிய முகத்தை வெளி உலகுக்குக் காட்டக் கூட இயலாத மாதேவி.

கௌதமருக்கு அன்போடு பணிவிடை செய்யும் அகலிகையின் நிச்சயமான புன்னகை முகம் அவளுக்கு வியப்பை அளித்தது. இத் தம்பதியரின் அன்பும் இணக்கமும் அயர வைத்தன. இது எப்படி சாத்தியம்? 'தீக்குளித்து வா' என்று சொன்னதற்கும், 'கல்லாய்ப் போ' என்று சொன்னதற்கும் என்ன வேறுபாடு? அக்னி தேவன் சொன்னதைப் போல, பரம்பொருள் அன்று கல்லைப் பெண்ணாக்கிக் கற்புக்கு ஆதாரம் சொன்னான். இது எப்படி சாத்தியம்? இந்தப் பெண்மணி மன்னித்தது மட்டுமல்லாமல், மன மகிழ்ச்சியோடு இருக்கிறாளே...! முழுமுதற் கடவுளே ராமனாக உருத் தாங்கி, மாதேவி மகாலக்ஷ்மியே சீதையாக மாறி அதிதியாக வந்திருப்பது அறிந்தும், அறியாதவளைப் போல கணவரது சேவை முடிந்து அதிதி உபசாரம் செய்ய வருகிறாளே இந்த

நான்
உன்னை அரசியாக்கினேன்
உயரமானவர்கள், உன்னைவிட
உயரமானவர்கள் உண்டு
தூய்மையானவர்கள், உன்னைவிட
தூய்மையானவர்கள் உண்டு
அழகானவர்கள், உன்னைவிட
அழகானவர்கள் உண்டு.
எனினும்
நீ ஒருத்திதான் அரசி.
தெருக்களைக் கடந்து நீ போகும்போது
எவரும் உன்னை அடையாளம்
காண்பதில்லை
எவரும் உன் ஸ்படிகக் கிரீடத்தைக்
கவனிப்பதில்லை

அகலிகை! இதென்ன மாயம்?

சீதை குழம்பினாள். அகலிகை கையிலே செம்பஞ்சுக் குழம்போடு வந்தவள் சீதையின் தளிர் விரல்களைப் பற்றி அணைத்தாள். என்னை ஈன்ற கணத்தில் விட்டுச் சென்ற பூமித்தாயே நீயே அகலிகையாக வந்து என்னை அணைக்கிறாயோ?' அந்த அணைப்பு தந்த சுகத்தில் சீதா தன்னை மறந்தாள்.

" 'கல்லாய்ப் போ' என்ற கணவனை எப்படி மன்னித்தாள் என்ற குழப்பமா? தலையை அசைப்பதுகூட மரியாதைக் குறைவாகி விடுமோ?"

"சீதே. இந்திரன் என்னைத் தொட முடியுமா? என் உயிரற்ற மாயை உடலை அல்லவா அவன் தொட்டான். என் உயிர் கௌதமரிடத்தில் அல்லவா அடக்கம் என்னைத் தீண்ட அவர் விடுவாரா?"

சீதை பிரமிப்புடன் அமர்ந்திருந்தாள். "பிறகு, ஏன்... ஏன்... ஏன்?" அகலிகை மென்மையாகச் சிரித்தாள். "சீதே, உலகுக்கு எடுத்துக்காட்டாக வாழ வேண்டிய நிர்பந்தம் நமக்கு. நம் வழி நடக்க, நாடே நம்மைக் கவனித்துக் கொண்டு இருக்கின்றது. சொற்களால் என்னைச் சுட்டுவிடக் காத்திருக்கும் உலகை கௌதமர் நன்கறிவார். அந்த அம்புகள் என்னை எவ்வளவு காயப்படுத்தும் என்று தெரியும்."

"கல்லாய்ப் போ என்றார். ஏன்! பரம்பொருள் உன்னை உயிர்ப்பித்து உலகத்தின் வாயை அடைப்பார் என்பதால். சீதே, கல்லான என்மீது அவர் தினமும் வந்து அமர்ந்து கொள்வார். அவர் கண்கள் இரு கண்ணீர் புஷ்பங்களை என்மீது சிந்தும். அற்புதமான கணங்கள் அவை, சீதே. எங்களின் காதலின் சாட்சியங்கள் அவை. எனக்காக, என் மன நிம்மதிக்காக, என்னைக் கல்லாக்கி, உலகத்தின் கண்களில் கொடுமைக்காரக் கணவரானார் கௌதமர்."

சீதை தெளிந்தாள். 'உலகத்தின் வாயை அடைப்பதற்காகத் 'தீக்குளி' என்றாயா என் நாயகனே! இரக்கமில்லா இராமன் எனும் அவப்பெயரை, என் நிம்மதிக்காகச் சுமக்கிறாயா என் தலைவனே!' அவள் முகத்தில் எல்லையில்லாத சாந்தம் பரவியது. அகலிகையை அடிபணிந்து வணங்கினாள்.

மறுநாள் காலை. விருந்தினர் புறப்பட்டனர். கிளம்பிய இராமபிரான், அரைக் கணநேரம், கண்சிமிட்டும் நேரம் மட்டுமே. செந்தாமரைக் கண்களால் அகலிகையின் கண்களை நேர்கொண்டான்.

'நன்றி. என் தாயே நன்றி.'

எவரும் நீ மிதித்து முன்னேறும் செம்பொன்
கம்பளத்தைப்
பார்ப்பதில்லை.
எனினும்
நீ என்முன் தோன்றும்போது
என் உடலில் எல்லா நதிகளும்
ஒலிக்கின்றன
மணிகள் ஆகாயத்தைக் குலுக்குகின்றன
வாழ்த்துப் பாடல் பூமியை நிறைக்கிறது
நீயும்
நானும் மட்டுமே
நீயும் நானும் மட்டுமே, என் அன்பே
அதைக் கவனிக்கிறோம்.

— யார்?

மறுநாள் காலை, அரபிக் கடலோரம் அலைகள் கால் நனைய ராதா நின்றிருந்தாள். அலைகள் புரண்டு வந்து போயின! கண்ணாடியில் புகை மூட்டம் போய்விட்டது. எல்லாமே தெளிவாக இருக்கின்றன.

மென்மையான கரங்கள் தன் மீது பட, சிலிர்த்தாள் ராதா.

"என் மனப் போராட்டங்களை எப்படிப் புரிந்து கொண்டாய்?"

"உன்னைவிட ரத்தனை அதிகம் புரிந்து கொண்டேன் ராதா. இந்தத் தனிமையை ஒரு சிறைத் தண்டனையாக ரத்தன் உனக்குத் தரவில்லை. நீ தெளிய, ஒரு தவமாகத் தந்திருக்கிறான்."

கடற்காற்று இனிமையாகத் தொட்டு விளையாடியது.

"காதலித்துக் கைப் பிடித்தவன் கதறக் கதறக் கை கழுவி விட்டுப் போன பின்பு கை கொடுத்து அரவணைத்த சசிதர் என்ற அற்புதமான மனிதருடன் வாழ்வதால் என்னால் ரத்தனைப் புரிந்து கொள்ள முடிகிறது ராதா."

ராதா பிரமித்து நின்றாள்!

மேஷம் : மேன்மையான வாரம். பொருளாதாரம் பலப்படும். திருமணக் காரியம் கைகூடும். வாக்கு வன்மை மேலோங்கும். கல்வி வளம் மேலோங்கும். கணவன், மனைவி உறவு நற்பலனைத் தரும். பூர்வீகச் சொத்து கைக்கு வந்து சேரும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். வீடு மாற்றம் உண்டாகும். வியாபாரத்தில் முற்போக்கான சூழ்நிலை ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் தீரும். வழக்கு வியாபாரம் வெற்றி அளிக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். சனி / ராகு / கேது / குரு வழிபாடு சிறந்தது.

ரிஷபம் : திருமணக் காரியம் கைகூடும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தடைபட்ட காரியம் கைகூடும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். பணக்கஷ்டம் வராது. வீடு / மனை வாங்க நல்ல தருணம். தொலைதூரப் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். கொடுக்கல், வாங்கல் நற்பலனைத் தரும். கல்வியில் வளர்ச்சி ஏற்படும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். ஊதிய உயர்வு உண்டாகும். குழந்தைகள் வழியில் மகிழ்ச்சி நிலவும். புதிய முயற்சிகள் கைகூடும். ராகு / கேது வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

மிதுனம் : எதிர்பார்க்கும் காரியம் நிறைவேறும். வாக்கு வன்மை மேலோங்கும். கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். உடல்நிலை பாதிக்கப்படாது. திருமணம் கைகூடும். புண்ணிய ஸ்தலம் செல்லும் வாய்ப்பு வந்து சேரும். நீண்ட காலக் கடன்கள் தீர்வு ஆகும். தூரதேச அழைப்பு கிட்டும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். வேலைப்பளு அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். குழந்தைகள் இடம் மாறிப் போவார்கள். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் வேலை மாற்றம் வரும். குடும்ப வாழ்வு நன்றாக இல்லை. மனச்சலனம் தீரும். குரு வழிபாடு நற்பலனைத் தரும்.

கடகம் : எதிர்பார்ப்புகள் நிறைவேறும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். குழந்தை பாக்கியம் கிட்டும். வீடு / வாசல் வாங்க நல்ல தருணம். கல்வி வளம் மேலோங்கும். திருமணம் கைகூடும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தீராத வழக்கு, பிரச்னை தீரும். சத்ரு தொல்லை இருக்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வு கிட்டும். நீண்ட தூரப் பிரயாணம் செல்ல நேரிடும். சுபச் செலவுகள் இருக்கும். தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் உண்டு. நண்பர், உறவினர்களால் ஆதாயம் அடைவீர்கள். சனி / ராகு / கேது வழிபாடு செய்து வருதல் உத்தமம்.

நடக்குமென்பார்; நடக்கும்!

சிம்மம் : தடை விலகித் திருமணம் கைகூடும். கொடுக்கல், வாங்கல் நற்பலனைத் தரும். கணவன், மனைவி விட்டுக் கொடுத்தல் நல்லது. மனக் குழப்பம் தீரும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். நீண்ட காலக் கடன் தொல்லை தீரும். சத்ரு தொல்லை விலகும். உடல்நிலை பாதிக்காது. பிரயாசைப்படாமலே பிரயாண

19.11.2006 முதல் 25.11.2006 வரை

தஞ்சை பரத்வாஜ்

வாய்ப்பு வந்து சேரும். வீடு மாற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் மாற்றம் வரும். புதிய வேலைவாய்ப்பு கிடைக்கும். கல்வி வளம் மேலோங்கும். வழக்கு வெற்றி அளிக்கும். ராகு / கேது / சனி / குரு வழிபாடு செய்து வருதல் நற்பலனை அளிக்கும்.

கன்னி : வெளிநாட்டு அழைப்பு கிட்டும். பணக்கஷ்டம் இருக்காது. உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வாக்கு வன்மை மேலோங்கும். கல்வியில் முன்னேற்றம் உண்டாகும். சொத்துகள் வாங்க நல்ல தருணம். மனத்தில் தைரியம் ஏற்படும். சகோதரர்கள் வழியில் அனுகூலம் ஏற்படும். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். பூமித் தொழில் மூலம் ஆதாயம் கிட்டும். திருமணம் கூடி வரும். மனப் பிரம்மை தீரும். குழந்தைகளால் சந்தோஷம் ஏற்படும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். குரு வழிபாடு செய்து வருதல் நற்பலனைத் தரும்.

துலாம் : எண்ணங்கள் யாவும் ஈடேறும். வழக்குகள் முடிவுக்கு வரும். சத்ரு தொல்லை விலகும். வராத பணம் கைக்கு வந்து சேரும். சுபச்செலவுகள் இருக்கும். தடை விலகித் திருமணம் கைகூடும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். புதிய வேலைவாய்ப்பு வந்து சேரும். வாக்கு வன்மை மேலோங்கும். நண்பர் உறவினர்களால் ஆதாயம் கிட்டும். பூர்வீகச் சொத்து கைக்கு வந்து சேரும். கூட்டாளிகள் விலகிச் செல்வார்கள். கூட்டுத் தொழிலில் மனக்கசப்பு ஏற்படும். கல்வி வளம் மேலோங்கும். ராகு/கேது/சனி வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

விருச்சிகம் : அனுகூலமான வாரம். சுபச்செலவு ஏற்படும். திருமணம் கைகூடும் வீடு மாற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். கல்வி வளம் மேலோங்கும். வியாபாரத்தில் நல்ல இலாபம் காணும். குழந்தைகளைப் பற்றின மனக்கவலை தீரும். வீடு / மனை வாங்க நல்ல தருணம். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். கணவன், மனைவி உறவு பலப்படும். குழந்தை பாக்கியம் கிட்டும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். புதிய வேலை வாய்ப்பு வந்து சேரும். மனச் சலனம் விலகும். வழக்கு வெற்றி அளிக்கும். ராகு/ கேது வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

பரத்வாஜ் பதில்கள்

+2 படிக்கும் என் மகள் மேற்படிப்பில் என்ன படிக்கலாம்?

- என்.கிருஷ்ணவேணி, சென்னை - 91

உங்கள் பெண்ணுக்கு மேல்படிப்பு தொழில்கல்வி பயிலும் யோகம் இருக்கிறது. மனதுக்குப் பிடித்த துறையில் படித்து வெளிநாடு சென்று சம்பாதிக்கும் யோகம் உள்ளது. அதற்கு ஏற்றாற்போல சப்ஜெக்ட் தேர்ந்து எடுக்கவும்.

என் தங்கைக்குப் பார்க்கும் வரன் எதுவும் சரியாக அமைவதில்லை. அவளுக்கு எப்போது திருமணம் நடக்கும்?

- கே.புவனேஸ்வரி, கீழச்சிவல்பட்டி

உங்கள் தங்கைக்கு 39 வயதில் திருமணம் நடக்கும். பிறந்த ஊருக்கு மேற்கு / தெற்குத் திசையில் உடன்பிறப்பு இருவர் உள்ள இடத்தில் வெளிநாட்டில் வேலை செய்யும் பையன் அமைவான். ஆறுமுகம் என்ற பெயர் உடைய பையன் வருவான். பரிகாரம் தேவை இல்லை.

என் மகனுடைய படிப்பு, பணி, வாழ்க்கை எப்படி இருக்கும்?

என் மகளுக்கு நல்ல வரன் அமையுமா?

- வி.காந்திராஜ், சென்னை - 87

உங்கள் பையனுக்கு சூரிய தசை நடக்கிறது. மேல்நாட்டில் வேலை கிடைக்கும். எதிர்காலம் நன்றாக இருக்கும்.

உங்கள் மகளுக்கு 2007-ல் திருமணம் கைகூடும். 2006-ல் நல்ல வேலை கிடைக்கும். முயற்சி செய்யவும்.

தனுசு : தெய்வ பலம் நிறைந்த வாரம். முயலும் காரியம் வெற்றி அளிக்கும். தடை விலகித் திருமணம் கைகூடும். கல்வி வளம் மேலோங்கும். எதிர்பார்ப்புகள் விலகும். வழக்கு பிரச்னை முற்று பெறும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். புண்ணிய ஸ்தலம் செல்லும் வாய்ப்பு வந்துசேரும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படாது. குழந்தைகளால் மன சந்தோஷம் ஏற்படும். வீடு மாற்றம் ஏற்படும். மகான் சந்திப்பு ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் தீரும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். குரு/ சனி வழிபட்டு வருதல் நலம்.

மகரம் : வாக்கு வாதத்தைத் தவிர்க்கவும். கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கை தேவை. வீடு / மனை வாங்க நல்ல தருணம். உடல்நிலையில் கவனம் தேவை. வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும். குடும்ப வாழ்வில் விட்டுக் கொடுத்தால் நல்லது. வழக்கு வெற்றி அளிக்கும். மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். திருமணக் காரியம் கைகூடும். சொத்துகள் விற்றுப் பணம் கைக்கு வந்து சேரும். கூட்டாளிகள் விலகிப் போவார்கள். வேலைப் பளு அதிகரிக்கும். தொழில் துறையில் நல்ல வருவாய் கிட்டும். புதிய தொழில் முயற்சி பலன் தரும். படிப்பில் கவனம் செலுத்துங்கள். ராகு / கேது / சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

கும்பம் : சிறப்பான வாரம். புதிய வேலைவாய்ப்பு வந்து சேரும். வாக்கு, தனம், கல்வி மேலோங்கும். சத்ரு தொல்லை விலகும். வராத பணம் கைக்கு வந்து சேரும். கணவன், மனைவிக்குள் அனுசரணை நல்லது. மனச்சலனம் விலகும். தடை விலகித் திருமணம் கைகூடும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப் படாது. வெளிநாட்டு அழைப்பு வந்து சேரும். பணக்கஷ்டம் இருக்காது. குழந்தைகளிடம் மகிழ்ச்சி நிலவும். நண்பர், உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். ராகு / கேது / குரு வழிபாடு நற்பலனைத் தரும்.

மீனம் : மேன்மையான வாரம். சுபச் செலவுகள் ஏற்படும். திருமணக் காரியம் கூடி வரும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். குழந்தைகளால் மன மகிழ்ச்சி ஏற்படும். வெளிநாட்டு அழைப்பு வந்து சேரும். மனப்பிரம்மை தீரும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். சிலருக்கு இடமாற்றம் வரும். வீடு / மனை வாங்கி நல்ல தருணம். பணக் கஷ்டம் விலகும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படாது. வழக்கு வெற்றி அளிக்கும். ஆஞ்சநேயர் வழிபாடு நற்பலனை அளிக்கும். ●



அப்பா வைத்துவிட்டுப் போகும் சொத்து சாஸ்வதமில்லை. நாமே தேடிக் கொள்கிற சொத்துக்களுக்கும் இதே கதைதான்.

சாஸ்வதமான சொத்து, இழந்து போகாத, ரிப்பேர் பண்ண வேண்டாத சொத்து, டாக்ஸும் திருட்டும் தொடாத சொத்து, 'திருட்டுப் போயிடுமோ?' என்று பயப்படவும் வேண்டாத சொத்து, ஏமாற்று வழிகளில் போய் நாம் காப் பாற்றிக்கொள்ள வேண்டாத சொத்து அப்பா கொடுக்க முடியாது; நாமாகவும் தேடிக்கொள்ள முடியாது.

குரு என்கிற ஒருவர்தான் சாஸ்வத மான அந்தச் சொத்தைத் தருகிறவர். இது நாம் போன பிற்பாடு நம் கூட வராத சொத்தில்லை - நம்மையே திரும்பி வரப் பண்ணாத சொத்து! எது சாஸ் வதமோ, அந்த பரமாத்மாவுடன் நம்மைப் பிரிக்க முடியாமல் சேர்த்துவிடுகிற சொத்து.

ஞானம் என்ற சொத்தை குரு

ஆனந்தம்

அநுக்ரஹிக்கிறார். சொத்து குறைந்து கொண்டே போவது, நாம் சிரமப்பட்டு அதை விருத்தி பண்ணப் பாடுபடுவது, இந்தப் பாட்டில் பாவ மூட்டையை இன்னும் பெரிசாக்கிக் கட்டிக்கொள் வது என்பதற்கெல்லாம் இடமே வைக் காமல் நாளுக்கு நாள் தானும் வளர்ந்து நம்மையும் வளர்ப்பது குரு தருகிற உபதேச சொத்து.

மற்ற சொத்து எதுவானாலும் அதனால் கிடைக்கும் எல்லா சுகங்களும் தாற் காலிகம்தான். 'நித்யானந்தம்' என்றே சொல்லப்படுவதான சாஸ்வத சுகத்தைத் தருவது குரு அநுக்ரஹிக்கிற ஞான மொன்றுதான்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

மெட்டுக்குப் பாட்டா... பாட்டுக்கு மெட்டா?

யுகபாரதி

கவிதை என்றால் என்னவென்றே தெரியாத பள்ளிக்கூட வயதில் கவிதையாக நானே நினைத்துக்கொண்டு சில வார்த்தைகளைக் கிறுக்கி, என் தமிழாசிரியை ராஜேஸ்வரியின் மேஜையில் வைக்கப்போக, அவர் அன்றலர்ந்த முகமாக என்னை உற்சாகப்படுத்திய நிகழ்ச்சியைக் கவிதை எழுதுகிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நினைத்துக் கொள்வேன்.

உற்சாகப்படுத்தியதை விடவும் கவிதையின் கைப்பிடித்து நடக்க, மறுநாள் எனக்காக அவர் கொண்டுவந்து கொடுத்த கவிதை நூல்கள் என்னைத் தொடர்ந்து எழுதத் தூண்டிற்று. கவிஞர் மு.மேத்தாவின் 'கண்ணீர்ப் பூக்கள்' அவற்றில் ஒன்று.

எழுதத் தொடங்கும் எவரையும் வசிகரிக்கும் அவருடைய கவிதைகள் எளிமையானவை. முதலிரு வாசிப்புகளுக்குப் பிறகு வாசிக்கும் ஒவ்வொருவரையும் காதலிக்கவோ அல்லது கவிதை எழுதவோ செய்துவிடும். ந.பிச்சமூர்த்தியிலிருந்து விரியும் புதுக்கவிதைப் பொட்டலத்து அவலை அனைவருக்கும் பகிர்ந்தளித்த அன்பாளர். இருபத்தைந்து பதிப்புகளுக்கு மேலாக கண்ணீர்ப் பூக்கள் கண்டிருக்கும் வரவேற்பு, வாசப்பூக்கள் எவற்றுக்கும் கிடைக்காத வாய்ப்பு. புதுக்கவிதைப் பரவலுக்கு 'வானம்பாடி' இயக்கம் செய்த தொண்டும் உழைப்பும் அலாதியானவை. நினைத்துப் போற்றத் தக்கவை.

'என் வாழ்க்கை
நாடகத்தில்
எத்தனையோ காட்சிகள்
எத்தனையோ
காட்சிகளில்
எழமுடியா வீழ்ச்சிகள்' என்று தன்னை கண்ணீர்ப் பூக்கள் காட்டிக் கொண்டாலும், அது அடைந்திருக்கும் வெற்றிக்கு ஈடாக வேறொன்றைச் சொல்ல முடியாது. மரபோடு மல்லுக்கு நின்றிருந்த தமிழை, புதுக்கவிதை ஆற்றுப் படுத்தியது. வார்த்தைகளில் கவிதை இல்லை என்ற வகுப்பை எடுத்தது. புதுக் கவிதைகளைத் திரைப்பாடல் நாற்காலியில் முதலில் அமர்த்தியவர் நா.காமராசன். நானறிந்த வரையில், நா.காவின் 'கறுப்பு மலர்'களும் மு.மேத்தாவின் 'கண்ணீர்ப் பூக்'களும் வந்திருக்காவிட்டால், புதுக்கவிதைக்கு வெகுஜன அங்கீகாரம் கிடைத்திருக்காது.

மேத்தாவின் புதுக்கவிதைப் பிரவேசம் திரைப்பாடலுக்குள் என்னென்ன விளைவுகளை ஏற்படுத்தின என்பதைவிட திரைப்பாடலுக்குள் மேத்தா செய்திருக்கும் அழகுகளை ரசிப்பது உசிதம். வேண்டி விரும்பி திரைத்துறைக்கு வந்தவரல்ல மேத்தா. தம் கவிதைகளின் மீது ஈர்ப்புக் கொண்டவர்களால் இழுத்து வரப்பட்டவர்.


'திரைத்துறையில் என்னுடைய கை, மற்றவர்களோடு கை குலுக்குகிறது. இலக்கியத் துறையில் என்னுடைய இதயம், மற்றவர்களின் இதயத்தைக் குலுக்கிப் பார்க்கிறது. கையைக் குலுக்குவதை விட இதயத்தைக் குலுக்குவதில் தான் ஓர் உண்மையான கவிஞன் ஈடுபாடு காட்ட முடியும்' என்று மேத்தா கூறியிருந்தாலும், திரைப்பாடலிலும் இதயத்தைக்

குலுக்கிய சாட்சிகளுண்டு.

'மதுரைக்கார தம்பி' திரைப்படத்தில் 'இரவும் ஒருநாள் விடியும்' பாடலில்,

'சாவினை எண்ணி
தைரியம் இழந்தால்
தாயகம் நமக்கேது?
உலகினை ஜெயிக்கும்
நாள்வரை நமது
உறைவாள் உறங்காது' என்று எழுதியிருப்பார். இடதுசாரி சிந்தனைகளின் கலை இலக்கிய வெளிப்பாடாகவே வானம்பாடி இயக்கக் கவிஞர்கள்

தலைமுறை
வாழத்
தலை
தருவோரை
சரித்திரம் மறக்
காது' எனப் போகிற போக்கில் உரைக்காமல், பொறுப்புணர்வோடு மேத்தா வடித்திருப்பது கவனத்துக்குரியது. மெட்டுக்குப் பாட்டா, பாட்டுக்கு மெட்டா என்ற மிக மிக மிகப் பழைய கேள்விக்குப் பதிலளிக்காமல் எந்தத் திரைப்பாடலாசிரியனும் தப்பிக்க முடியாது. கவிதையாளர்களைவிட புதுக்கவிதையாளர்கள் மெட்டுக்குப் பாட்டு என்பதை வெகுவாக



செயல்பட்டதைத் திரைப்பாடலிலும் இவ்வரிகள் மூலம் உணர முடிகிறது.

'தேகமும் ஓர் நாள்
ஓய்ந்திடக் கூடும்
தாகங்கள் ஓயாது

விமர்சிப்பார்கள். கருத்தே பிரதானம் என கருதி வெற்று வார்த்தைகளை நீக்கத் துணிந்த புதுக்கவிதையாளர்கள் அவ்விதம் விமர்சிப்பது வியப்பில்லை. ஆனால் மேத்தா, ''வள்ளுவர், திருக்குறளை

வெண்பா என்கிற 'ட்யூனு'க்குத்தான் எழுதினார். கம்பர், ராமாயணத்தை விருத்தம் என்கிற 'ட்யூனு'க்குத்தான் எழுதினார். நான் என் திரைப்படப் பாடல்களை 'ட்யூனு'க்கு எழுதுவது மட்டும் எப்படித் தவறாகும்?" என ஒரு பத்திரிகை நேர் காணலில் பதிலளித்திருந்தார். பதில் எனக்கு பிடித்திருந்தது. காரணம், மேத்தா மரபிலும் எழுதி மரபின் செழுமைக்கும் உழைத்திருப்பவர். 'உத்தமி' திரைப்படத்தில் 'காதல் தேவன்' பாடலில்,

'விழியில் காதலின்
விவசாயம்
மனதில் ஆசைகள்
பயிராகும்' என்று முதல் சரணத்திலும்,

'அழகே தேர்தலில்
முடிசூடும்




• மு. மேத்தா

அமையும் வாலிப அரசாங்கம்' என்றும் எழுதியிருப்பார். புதுக்கவிதைப் போக்குகளை நன்குணர்ந்தவர் என்பதைப் போலவே பாடலின் தன்மைகளையும் உள்வாங்கியே இவருடைய பாடல்கள் புனையப்பட்டுள்ளன. 'புதுசு பண்ணுறேன்' என்ற போர்வையில் விகாரங்களை விளைவிக்காமல், முடிந்தவரை புதுமைகளை நுழைக்கப் பாடுபட்டிருக்கிறார். 'ரெட்டைவால் குருவி' படத்தில் 'ராஜ ராஜ சோழன் நான்' பாடலும் 'இதயக் கோயில்' படத்தில் 'யார் வீட்டில் ரோஜா' பாடலும் 'கேளடி கண்மணி' படத்தில் 'கற்பூர பொம்மை' பாடலும் 'காசி' படத்தில் 'என் மன வானில்' பாடலும் 'சூர்யவம்சம்' படத்தில் 'நட்சத்திர ஜன்னலில்' பாடலும் முக்கியமானவை.

'நட்சத்திர ஜன்னலில் வானம் எட்டிப் பாக்குது' என்பதைப் பல்லவியாக எழுதும் மனம், புதுக்கவிதையில் பயிற்சியற்ற ஒருவருக்கு வாய்க்காது. 'வேலைக்காரன்', 'மைக்கேல் ராஜ்', 'கைநாட்டு' போன்ற பல படங்களுக்கு அனைத்துப் பாடல்களும் மேத்தாவால் புனையப்பட்டுள்ளன. 'காசி' திரைப்படத்திலுள்ள 'என் மன வானில்' பாடலில்,

'நான் பாடும் பாடலெல்லாம்
நான் பட்ட பாடே அன்றோ
பூமியில் இதை யாரும்
உணர்வாரோ?
மனதிலே மானிகை வாசம்
கிடைத்ததோ
மரதிழல் நேசம்
எதற்கும் நான்
கலங்கியதில்லை இங்கே' என்று முடித்திருப்பார்.

இயக்குநர் ஸ்ரீதர் மிகப் பிரபலமாக இருந்த சமயத்தில் மேத்தாவுக்கு அழைப்பு. பாடல் எழுதப்போன பிறகுதான் அப்பாடல் ஏற்கெனவே ஒருவருக்குத் தரப்பட்டு, அவர் எழுதியது திருப்தி அளிக்காமல் மேத்தாவை அழைத்த செய்தி தெரிய வருகிறது. உடனே மேத்தா ஏற்கெனவே எழுதிய கவிஞரின் இதயம் புண்படும் என்று கூறிப் பாடலை எழுத மறுத்து விடுகிறார். பிறகு அப்பாடல் யாரால் எழுதப்பட்டதோ?

'கைநாட்டு' படத்தில் ஒரு பாடல். ஏழை, பணக்காரன் கதை. ஏழை, பணக்காரனிடம் நியாயம் கேட்க, தமிழ் சினிமாவில் தோன்றும் எந்தப் பணக்காரனும் நியாயத்துக்கு எதிரியாகவே காட்சியளிப்பது போல இக்கதையிலும் பணக்காரன் முரண்டு பிடிக்கிறான். 'பொறுத்தது போதும், பொங்கி எழு' என்பதாக அமைந்த சூழல். அதில்,


'மேடைகளில் பொய்களுக்கு
நல்ல விற்பனை
மக்கள் இங்கு கண்டதெல்லாம்
கனவு கற்பனை.

காந்திபோன பாதை மீதும்
கறை படிந்தது
கண்ணகியின் கற்பில்கூட
திரை விழுந்தது' என்று தீட்டியிருப்பார் அல்லது திட்டியிருப்பார். கோபாவேசமும் கொடுமைக்கு எதிரான கொந்தளிப்பும் சிலி நாட்டில் பாப்லோவை உருவாக்கிற்று. பாப்லோ நெருடாவின் நூற்றாண்டு நினைவுகளோடு இக்கவிதைகளை வாசிக்க மனம் கனக்கிறது. 'தீபம்' நா.பா., மேத்தாவின் புதுக்கவிதைகளுக்கு இடமளித்தவர். தீபத்தில் மேத்தா எழுதிய 'தேசப்பிதாவுக்கு தெருப் பாடகனின் அஞ்சலி' கவிதை 'கைநாட்டு' படப் பாடலிலும் வேறு வடிவில் வெளிப்படுவதாக எனக்குத் தோன்றுகிறது. 'தோற்ற மயக்கம்' என்பானே பாரதி... அதைப்போல....

''மன்னர் ஏன் கோபமா இருக்கார்?''

''மலர் கிரீடம் சூட்டறேன்னு ஒரிஜினல் கிரீடத்தை சுட்டுட்டுப் போயிட்டாங்களாம்!

- எஸ். தமிழ்மணி



மேத்தாவின் பாடல்களில் பிறர் வியந்து கூறியவற்றை வேண்டுமென்றே தவிர்த்திருக்கிறேன். ஏனெனில், பார்க்கப்பட வேண்டிய பாடல்கள் அவரிடம் நிறைய உள்ளன. 'பெரிய வீட்டுப் பண்ணைக்காரன்' படத்தில் 'நிக்கட்டுமா போகட்டுமா' பாடலில், நாட்டுப்புற நயம் தொக்கிய இடங்களாக எனக்குப்படுவது...

'ஓடையில் நான்
அமர்ந்தேன் - அதில்
என்முகம் பார்த்திருந்தேன்
ஓடையில் பார்த்தமுகம்
அது, உன் முகம் ஆனதென்ன?'

இசை, ஒழுங்கு, கவிதை, நயம், காட்சி, எல்லாவற்றையும் கடந்து ஒரு பாடல் வெளிவரும்போது எத்தனையோ கட்டுகளைத் தாண்டி வரவேண்டியுள்ளது. அந்தக் கட்டுகள் பாடலாசிரியனுக்குப் பிறப்பிக்கும் சவால்களை, கவிஞன் சாதுர்யமாக வெல்லும் சான்றை மேத்தாவைப் போன்றோரின் பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

சமீபத்தில் வெளிவந்த திருமேனியின் கவிதைத் தொகுப்பில் ஒரு கவிதை:

'உன்னைப் பார்த்த
ஜன்னலைத் தினமும்
பார்க்கிறேன்
ஜன்னல் அங்கேயே
இருக்கிறது'

- ஜன்னலில் விரிந்த காட்சிகளும் கனவு முகங்களும் தொலைந்துபோன பிறகு, ஜன்னலை மட்டுமேனும் இருந்த இடத்திலேயே பார்க்கும் கொடுப்பினையைக் கவிதை கொடுக்கிறது. மேத்தாவின் ஜன்னலும் பார்வையும் கவிதைகள். அது, காட்சிதரும் பிம்பமன்று, காலத்தின் அம்சம். மனதிலே மாளிகை வாசம்; கிடைத்ததோ மரநிழல் நேசம்.


(தொடரும்)


"மன்னர் டீ.வி.யில் செய்திகள் கேட்டுக் கேட்டுக் கெட்டுப் போய்விட்டார்..."
"எப்படிச் சொல்றீங்க...?"
"எதிரி நாட்டுப் படையெடுப்பைப் 'புறக்கணிப்பதாக'க் கூறுகிறார்...!"
- நாமக்கல் பாலு
அடகுக் கடை அரசே..!
"மன்னா! உங்களைப் பார்க்க பழைய இரும்பு வியாபாரிங்க வந்திருக்காங்க."
"என்னவாம்!"
"உங்க செங்கோல் வளைஞ்சுபோன விஷயம் அவங்களுக்கும் தெரிஞ்சிருக்கு!"
- முகவூர் சபரிநாதன்
"பொன்னே, மணியேன்னு மன்னர் கொஞ்சுகிறபோதே நினைச்சேன்!"
"ஏன், என்னாச்சு மகாராணி!"
"அடகுக் கடைக்குப் போகணுமாம்! நகையைக் கேட்கிறார்!"
- பம்மல் நாகராஜன்



"மன்னா! இளவரசருக்கு முடி சூட்டவில்லையென்றாலும் பரவாயில்லை. முடிவெட்டி விடவாவது ஏற்பாடு செய்யுங்கள்!"

- ஞா.ஞானமுத்து





"போருக்குப் பயப்படும் அரசர், இப்போது ஆவேசமாப் போறாரே, ஏன்?"

"அண்டை நாட்டு அரசருக்கு சிக்-குன் குன்யாவாம். எப்படியும் வென்றுவிடலாம் என்ற நப்பாசைதான்!"

- மு.புதூர் என்.பி.சாமி



என் பெயர் என்ன?

ஒரு நூற்றாண்டுக்கு முன், ஜெர்மனியைச் சேர்ந்த அல்ஜீமர்ஸைத் தேடி ஒரு விசித்திர நோயாளி வந்து சேர்ந்தார். பெயர் அகஸ்டி. வயது நாற்பத்திரண்டு. அவருக்கு உடல்நிலை மோசமாக இருந்ததால் இரண்டு நாட்கள் மருத்துவமனையில் தங்க வைத்து, மெதுவாக அவரிடம் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தார் அல்ஜீமர்ஸ்.

"உங்கள் பெயர்?"

"அகஸ்டி."

"உங்கள் கணவரின் பெயர்?"

"அகஸ்டி."

"குழந்தையின் பெயர்?"

"அகஸ்டி."

இன்னது என்று அல்ஜீமர்ஸுக்குப் புரிந்துவிட்டது.

"நீங்க இங்க வந்து எவ்வளவு நேரம் ஆச்சு, தெரியுமா?"


"தெரியும். மூன்று வாரம்."

அகஸ்டியின் பிரச்னை இதுதான். அவருடைய நினைவுச் சங்கிலி ஆங்காங்கே அறுந்துவிட்டது. தம் கணவரின் பெயர் அகஸ்டி என்று சொல்லும் அளவுக்கு மூளைக்குள் களேபரம் நடந்திருக்கிறது.

ஆண்டுகள் செல்லச் செல்ல, அவருடைய சொந்தப் பெயரே அவருக்கு மறந்துவிட்டது. "என்னோட பேரா? கொஞ்சம் டைம் கொடுங்க; யோசிச்சுச் சொல்றேன்' என்னும் அளவுக்கு நிலைமை விபரீதமாகிவிட்டது.

நான்கு ஆண்டுகளில் அகஸ்டி மரணமடைந்தார். அவரது மூளையைக் கழற்றிப் பார்க்கும் வாய்ப்பு அல்ஜீமர்ஸுக்குக் கிடைத்தது. மூளையிலிருந்து ஓர் இழையைத் தனியே பிரித்து அதைப் பெரிதுப்படுத்தி ஆராய்ந்தபோது, அவரால் சில விஷயங்களைப் பார்க்க முடிந்தது.

நியூரான்கள் தெரியும் அல்லவா? மூளையில் போஸ்ட்மேன் உத்தியோகம் பார்க்கும் ஜீவன்கள். இந்த போஸ்ட்மேன் ஒழுங்காக வேலை செய்தால்தான் நம்மால் தெளிவாகச் சிந்திக்க முடியும். விஷயங்களை நினைவில் வைத்துக்கொள்ள முடியும். 'இன்னிக்கு என்ன கிழமை?' என்றால், தடுமாறாமல் சொல்ல முடியும்.




• நியூரான்

அகஸ்டியின் மூளையில் என்ன பிரச்னை தெரியுமா? நியூரான்களுக்கு இடையே சில பழுப்பு நிறக் கட்டிகள், துவரம் பருப்பு சைஸுக்குக் கொப்புளம் கொப்புளமாகப் பரவியிருந்தன. இந்தக் கட்டிகள்தான் வில்லன்கள். இவை என்ன செய்கின்றன தெரியுமா? ஒரு போஸ்ட்மேனுக்கும் இன்னொரு போஸ்ட்மேனுக்கும் இடையில் பாய்ந்து செய்தியைத் தட்டிப் பறித்துவிடுகின்றன. 'உங்கள் கணவரின் பெயர் என்ன?' என்று கேட்கப்பட்டபோது, நிகழ்ந்தது இதுதான்.

இந்த ஞாபகத் தொந்தரவு

மருதன்





நோய்க்கு அல்ஜீமர்ஸின் பெயரையே வைத்துவிட்டார்கள். அல்ஜீமர்ஸ் பற்றிய ஒரு நல்ல விஷயத்தையும் கெட்ட விஷயத்தையும் பார்க்கலாம். முதலில் நல்ல விஷயம். அல்ஜீமர்ஸைப் பற்றி முன்னெப்போதையும் விட இப்போது நிறையத் தெரிந்து கொண்டிருக்கிறோம். சைக்கிளைப் பிரித்துப் போட்டு ரிப்பேர் பார்ப்பதைப் போல் மூளையைத் தனித்தனியே உதிர்த்து பூதக்கண்ணாடி வைத்து ரிப்பேர் பார்க்க முடியும். அல்ஜீமர்ஸ் வந்தால் சரி செய்ய முடியும். வராமல் தடுப்பதற்கான வழிமுறைகளை நம்பிக்கையுடன் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, கெட்ட விஷயம். மேற்படி ஆராய்ச்சிக்கு இரண்டு தடங்கல்கள். ஒன்று நேரம். ஒவ்வோர் ஆராய்ச்சியை செய்து முடிப்பதற்குள் வருடக் கணக்கு ஆகிவிடுகிறது. ஒரேயொரு மூளை இழையைக் கழற்றி வைத்துக்கொண்டு ஆண்டுக்கணக்கில் ஆராய்ந்தால் ஒரு குட்டி ஆச்சரியத் தகவல் கிடைக்கலாம், கிடைக்காமலும் போகலாம். இரண்டு, டாலர். அண்டா அண்டாவாகக் கொட்டினாலும் போதவில்லை. 'கட்டுப்படி ஆகவில்லை' என்று ஆளானப்பட்ட அமெரிக்கர்களே கவலைப்படுகிறார்கள்.

பொதுவாக 65 வயதுக்கு மேல்தான் அல்ஜீமர்ஸ் தாக்கும் என்று சொல்லப்பட்டாலும் கிறிஸ்டிக்கு வந்ததைப் போல் முந்திரிக் கொட்டைத்தனமாக முன்னரேகூட தாக்கலாம். இந்த அல்ஜீமர்ஸ் என்னும் வஸ்து ஏன் மூளையில் தோன்றுகிறது, ஏன் இப்படிப் பாடாய்ப்படுத்துகிறது என்று ஒருவருக்கும் தெரியாது. ஆனால், 2020-க்குள் உலகெங்கும் 40 மில்லியன் நபர்களின் மூளையை இந்நோய் தாக்கும் என்று கணக்குப் போட்டுச் சொல்கிறார்கள்.

திடீரென்று கிழமை மறந்துபோவது, நாலு மணிக்கு போன் செய்கிறேன் என்று சொல்லிவிட்டு, நான்கு நாட்கள் கழித்து போன் செய்வது, வாரத்துக்கு இருமுறை குடையைத் தொலைப்பது, காதலியின் பிறந்தநாளை மறந்துபோவதைப் போன்ற சின்னச் சின்ன நியூரான் கலவரங்களைக் கண்டு பதற வேண்டாம். இவையெல்லாம் அல்ஜீமர்ஸ் கிடையாது. ●

விபரீதம்!

பாண்டியிடம் விஷ்வா, 'ஒரு ஆம்புலன்ஸ் வண்டி உன்கிட்ட ரிப்பேருக்கு வந்து டெலிவரி ஆகாம இருக்குதில்ல?' என்று கேட்டதுமே ஏதோ வில்லங்கம் என்று உடனே புரிந்துக் கொண்டான்.

"என்ன விஷ்வா... கஜாவா போன்ல?" என்றான்.

"ஆமாம்..."

"விபரீதமா ஏதாவது திட்டம் சொல்வானே அவன்!"

"ஒண்ணும் விபரீதம் இல்ல... விளையாட்டா செஞ்சிட முடியும்..."

"மேட்டர் என்ன, விஷ்வா?"

"சொல்றேன்... வண்டியப் பத்திக் கேட்டேனே..."

"ஆமாம்... கல்யாணி நர்சிங்ஹோமோட ஆம்புலன்ஸ்தான் அது. என்ஜின் இறக்கி வேலை பார்த்தேன். பில் செட்டில் பண்றதுல பிரச்னை. அதுக்குள்ள அந்த டாக்டர் வெளிநாடு போய்ட்டாரு. வர்றதுக்கு இன்னும் ரெண்டு வாரம் ஆகுமாம்."

"டாக்டர் வந்து பில் செட்டில் பண்ற வரைக்கும் ஆம்புலன்ஸ் உன் பட்டறையில சும்மாதானே நிக்கப்போகுது?"

"ஆமாம்..."

"சரி... வண்டியை எனக்குக் கொடுத்துடு. சென்னை வரைக்கும் ட்ரிப் அடிச்சுட்டு நாளைக்கு, இல்ல நாளன்னைக்குத் திருப்பி விட்டுடறேன்."

"விஷ்வா, என்ன செய்யப் போறே?"

"ஒரு சின்ன கடத்தல். பாண்டிலேர்ந்து சென்னைக்கு!"

"சரக்கு என்ன?"

"ஒரு பொண்ணு!"

"அடப்பாவி!"

"கல்யாணப் பொண்ணு!"

"வேணாம்டா!"

"எடுத்ததுமே அபசகுணமா பேசாதே! நீயும் ஹெல்ப் பண்றியா, சொல்லு... வண்டிக்கும், உன் ஒத்தாசைக்கும் சேர்த்து ஐம்பதாயிரம் தர்றேன்."

பாண்டி உடனே அறிவுரை சொல்வதை நிறுத்தினான். தன் பட்டறைக்கு ஏழு மாத வாடகைப் பாக்கி இருபத்தோராயிரம் என்கிற கணக்கு மனதில் தோன்றி மறைந்தது.

"நான் என்ன செய்யணுங்கறே?"

"டிரைவரா வா. என் கூடவே இரு. சொல்றதைச் செய்... போதும்."

"பொண்ணு அங்க சென்னைல யாரையாவது லவ் பண்ணுதா?"

"முட்டாள்! இங்க கல்யாணம் நிக்கணும்."

"அப்படின்னா... பொண்ணோட சம்மதமில்லாம...அப்படியா?"

"சம்மதத்தோட செஞ்சா அதுக்குப் பேரு கடத்தல் இல்லை!"

"பொண்ணு யாரு?"

"நம்ம தங்கத் தோட்டம் குமரன் நாளைக்குக் காலைல தாலி கட்டப் போற பொண்ணு. பேரு மஞ்சரி. இப்போ அந்தப் பொண்ணு எங்க தங்கியிருக்குன்னு முதல்ல தெரிஞ்சிக்கணும். மத்த பின்னால் எல்லாம் அப்புறம்தான்!" என்றான் விஷ்வா.

"பெரிய எடம்டா!"

"தெரியும்... வாடா!"

அறைக்குள் வந்த விஷ்வா கைக்குக் கிடைத்த ஒரு சட்டையை அணிந்தபடி, "மாலிக், என் ஆட்டத்தை நீ ஆடு. நானும், பாண்டியும் அர்ஜெண்ட்டா வெளில போறோம்" என்றான்.

பாண்டிச்சேரி பஸ் நிலையத்தில் வந்து நின்ற சென்னை பஸ்ஸிலிருந்து கையில் ஒரு சூட்கேசுடன் இறங்கினாள் பூஜா. மணி மாலை 4:30. ஆட்டோக்காரர்கள் அவளை மொய்த்தார்கள்.

மறுத்துத் தலையசைத்துவிட்டு ஓரமாக ஒதுங்கி நின்று செல்போனில் குமரனை அழைத்தாள்.

"ஹாய் பூஜா!" என்றான் குமரன்.

"ஹாய் குமரன்..."

"ஹாஸ்டல் சௌகரியமா இருக்கா?"

"இருக்கு... இப்ப நான் பாண்டிச்சேரிலேருந்து பேசறேன் குமரன்."

பட்டுக்கோட்டை பிரபாகர்

ம்!

17

"வாவ்! என் கல்யாணத்துக்கு வர்றது உனக்குத் தர்மசங்கடமா இருக்கும்னு நினைச்சேன். அதனாலதான் நான் வற்புறுத்தலை பூஜா."

"நானும் தயக்கமாதான் யோசிச்சுட்டிருந்தேன். ஒரு தோழியா என்னை ஏத்துக்கிட்டு, அக்கறையா எனக்கு எவ்வளவு செஞ்சீங்க! அதே தோழின்ற உரிமையில உங்க கல்யாணத்துல கலந்துக்கறதுதானே நியாயம்? அதான் வந்துட்டேன்."

"ரொம்ப சந்தோஷம். இப்ப எங்க இருக்கே?"

"பஸ் ஸ்டாண்டுல. இங்க பக்கத்துல ரூம் எடுத்துத் தங்கிட்டுக் காலைல முகூர்த்தத்துக்கு வந்துடறேன், குமரன்."

"தனியா கண்ட லாட்ஜ்லயும் தங்க வேணாம் பூஜா. இங்க ஹோட்டல் வைடூர்யான்னு நேரு வீதில இருக்கு. அங்க இருபது ரூம்ஸ் போட்டிருக்கோம். மஞ்சரி, அவங்க குடும்பம், எல்லாம் அங்கதான் தங்கியிருக்காங்க. நீ நேரா அங்க வந்துடு. நீ வர்றதுக்குள்ள அந்த ஹோட்டல்ல நான் இருப்பேன்."


"உங்களுக்கு எதுக்குச் சிரமம் குமரன்?"

"ஒரு சிரமமும் இல்லை. நான் பஸ் ஸ்டாண்டுக்கே வந்து உன்னைப் பிக்கப் பண்ணிக்கட்டுமா?"

"வேணாம். நான் ஹோட்டலுக்கு வந்துடறேன்."

"போனை அணைத்துவிட்டு ஆட்டோ ஒன்றில் அமர்ந்தாள் பூஜா. இடத்தைச் சொன்னாள்.

ஹோட்டல் வைடூர்யாவை ஆட்டோ அடைந்தபோது சொன்னபடி அங்கே காத்திருந்த குமரன் புன்னகைத்தான்.



"ரூம் நம்பர் 207-ல மஞ்சரி இருக்கா. உனக்கு 208-ல போட்டிருக்கேன். வா" என்று சூட்கேசை வாங்கிக் கொண்டான்.

இருவரும் லிஃப்ட்டுக்குள் வந்தார்கள்.

"என்னை மஞ்சரியிடம் அறிமுகப் படுத்துவீங்களா, குமரன்?"

"கண்டிப்பாக."

"எப்படி அறிமுகப்படுத்துவீங்க?"

"என்னோட கல்லூரில ஒண்ணாப் படிச்ச தோழின்னு. அப்படித்தானே அறிமுகப்படுத்த முடியும்?"

"ஆமாம்" என்றாள் பூஜா.

ஒரு மௌனம் வந்து அமர்ந்தது. இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு பார்வையை விலக்கிக் கொண்டார்கள்.

இரண்டாவது தளத்தில் லிஃப்ட் நின்றதும் வெளிப் பட்டு காரிடாரில் நடந்தார்கள். 208-ஆம் எண் அறையைச் சாவி போட்டுத் திறந்தான் குமரன். உள்ளே வந்தார்கள்.

"பூஜா... முகம் கழுவிக்கிறியா? அப்புறம் மஞ்சரி ரூமுக்கு உன்னை அழைச்சிட்டுப் போறேன்."

"சரி... முதல்ல எனக்குச் சூடா ஒரு காபி வேணும், குமரன்."

"கொண்டாரச் சொல்றேன்..."

இண்டர்காம் எடுத்து இரண்டு காபி சொன்ன குமரன், அவள் தன் சூட்கேஸிலிருந்து டவல் எடுத்துக் கொண்டு குளியலறைக்குச் சென்றதும், மீண்டும் இண்டர்காம் எடுத்து அடுத்த 207-ஆம் நம்பர் அறையைத் தொடர்பு கொண்டான்.

"ஹலோ... யாருங்க?" என்றாள் அம்சா.

"அக்கா, நான்தான் குமரன் பேசறேன்."

"மாப்பிள்ளை தம்பியா? என்ன, சொல்லுங்க?"

"ரூம் சௌகரியமா இருக்காக்கா?"

"எல்லாம் சௌகரியமும் இருக்கு."

"மஞ்சரி என்ன பண்ணுது?"

"சும்மாதான் பால்கனில நின்னு வேடிக்கை பாத்துக்கிட்டிருக்கு. இருங்க தம்பி, பேசச் சொல்றேன்?"

சில விநாடிகளில் "ஹலோ" என்றாள் மஞ்சரி.

"மஞ்சரி... நாளைக்கு இந்நேரம் நமக்குக் கல்யாணம் முடிஞ்சி ரிசப்ஷனுக்கு ரெடியாகிட்டு இருப்போம் இல்ல?"

"ஆமாங்க... நினைச்சா ஒரு மாதிரியா இருக்கு."

"என்ன மாதிரி இருக்கு?"

"சொல்லத் தெரியலை... படபடன்னு இருக்கு... சந்தோஷமாவும் இருக்கு. பயமாவும் இருக்கு."

"பயம் எதுக்கு?"

"அவசியமில்லைன்னு தெரியுது. ஆனாலும் இருக்கு."

"ஒரு மாதிரி பரீட்சை பயம் மாதிரியா?"

"ஆமாம்..."

"நல்லா படிச்சிருந்தா பயம் தேவையில்லையே... ஆமாம், நல்லா படிச்சிருக்கியா?"

"எதைப் படிக்கிறதாம்?"

"ம்... நாளைக்கு நைட்டு ரிசப்ஷன் முடிஞ்சப்புறம் நமக்கு ஒரு பரீட்சை இருக்கு. ஞாபகம் இருக்கில்ல?"

"ச்சீ!"

"பக்கத்துல அண்ணி இருக்காங்களா?"

"அவங்களுக்கு நாசூக்கு தெரியும். பால்கனிக்குப் போய்ட்டாங்க."

"நான் உன்னைத்தான் நம்பி இருக்கேன். எனக்கு எதுவுமே தெரியாதுப்பா. எல்லாமே நீதான் கத்துக் கொடுக்கணும்."

"அய்யே! ஆளைப் பாரு!"

"நிஜமாதான்!"

"எனக்கும் ஒண்ணும் தெரியாதே..."

"அப்போ ரெண்டு பேரும் கலந்து பேசிதான் கத்துக்கணுமா?"

"அய்யோ... வேற பேசுங்களேன்..."

"என் கணவர் பயங்கரமா குறட்டை விடுகிறார் டாக்டர்."

"குறட்டை விடறது சகஜம்தான். இதுக்காகவா இங்கே கூட்டி வந்தீங்க?"

"இவர் முழிச்சிட்டிருக்கும்போதே குறட்டை விடறார் டாக்டர்...!"

- வி.எஸ். அனந்தராமன்



"சதாம் ஹுசேனுக்கு மரண தண்டனை கொடுத்ததைப் பத்தி நீ என்ன நினைக்கிறே?"

"அறுக்காதிங்க..."

"சரி... ஐந்து நிமிஷத்துல நான் உன் ரூமுக்கு வரப்போறேன்."

"அய்யோ! வேணாம்!"

"தனியா இல்ல... ஒரு ஃப்ரெண்டை உனக்கு அறிமுகப்படுத்தணும்."

"யாரு?"

"என்னோட காலேஜ்ல படிச்ச பொண்ணு. பேரு பூஜா! நம்ம கல்யாணத்துக்காக சென்னையிலேர்ந்து வந்திருக்கா. அவளைக் கூட்டிக்கிட்டுக் கொஞ்ச நேரத்துல வர்றேன்."

"சரி... வாங்க..."

போனை வைத்தான் குமரன்.

முகம் கழுவி திரும்பிய பூஜா கண்ணாடி முன்பு நின்று ஒப்பனை செய்து கொண்டாள்.

"குமரன், நான் வந்ததுல உங்களுக்கு எதுவும் கஷ்டம் இல்லையே..."

"நிச்சயமா இல்லை. அப்புறம் ஆகாஷ்கிட்டேர்ந்து எந்தத் தொந்தரவும் இல்லையே..."

"நான் இப்ப எங்க இருக்கேன்னு அவனுக்குத் தெரியாதே... தெரிஞ்சா ஒரு வேளை தொந்தரவு கொடுக்க யோசிக்கலாம். ஆனா இப்ப அவன் சூடு கண்ட பூனை. தட்டிக் கேட்க நீங்க இருக்கீங்கன்னு தெரிஞ்சதால இனிமே எங்கிட்டேர்ந்து விலகத்தான் நினைப்பான்."

உதடுகளில் லிப்ஸ்டிக் தீற்றிக் கொண்டாள் பூஜா.

சென்னை விமான நிலையம். பெங்களூரிலிருந்து வந்து இறங்கிய விமானத்திலிருந்து வெளிப்பட்டு வெளியே வந்த ஆகாஷ் மற்றும் கஜா ஒரு டாக்ஸி அமர்த்திக் கொண்டார்கள். ஒரு ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தார்கள்.

அறைக்குள் வந்ததும் கஜா, "எதுக்கு சார் நீங்களும் என்கூட வந்தீங்க? நானே முடிச்சிடறேன்னு சொன்னேனே... நம்பிக்கை இல்லையா?"

"இல்லை. அப்படி இல்லை... குமரன் தவிக்கிறதைப் பார்த்து ரசிக்கணும் கஜா. ஆமாம்... உன் பாண்டிச்சேரி ஆளு விஷ்வா போன்ல என்ன சொன்னான்?"

"கல்யாணப் பொண்ணு மஞ்சரி ஹோட்டல் வைடூர்யாவுல தங்கி இருக்காளாம். அவளைச் சென்னைக்குக் கொண்டு வர வண்டி ஏற்பாடு செஞ்சிட்டானாம். ஹோட்டல்லேர்ந்து எப்படி கடத்தறதுன்னு பிளான் செஞ்சிட்டு இருக்கானாம்."

ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான் ஆகாஷ். அவனுக்கும் நீட்ட, கஜாவும் எடுத்துக் கொண்டான்.

"பொண்ணைக் கடத்தணும்னு சொன்னதும், கடத்தின பொண்ணை மும்பாய்க்கு விக்கணும்னு வேற ஒரு பிளான் போட்டே பாரு... அப்பதான் எனக்கும் இன்னொரு பிளான் தோணிச்சு!"

"என்ன சார்?"

"குமரனை சும்மா அவமானப்படுத்தறதுக்காக நான் ஏன் லட்ச லட்சமா செலவு செய்யணும்? இதனால எனக்கு ஒரு லாபமும் இல்லையே..."

"அதனால?"

"இந்தக் கடத்தல் வெறும் பழி வாங்கற திட்டமா மட்டும் இருக்க வேணாம். பணம் கறக்கற திட்டமாவும் இதை மாத்தணும்னு முடிவு பண்ணிட்டேன்."

"புரியலை" என்றான் கஜா.

"சொல்றேன்" என்றான் ஆகாஷ்.

(தொடரும்)

"அரண்மனை வைத்தியருக்கு சம்பள பாக்கி வைக்காதீர்கள் மன்னா!"

"எதுக்கு அமைச்சரே?"

"உங்களுக்குத் தொற்று வியாதி இருக்கறதா ஊர் பூரா வதந்தி கிளப்பிக்கிட்டிருக்கார்!"

- அம்பை தேவா





ஓடும் ரயிலில் பாலாஜி!

நான் ஆஞ்சனேயர் பக்தன். 1999ல் ஷீரடிக்கு ரயிலில் சென்றேன். ரயிலின் நடுவில் கிச்சன். இரண்டு பெட்டிகளிலும் சில நண்பர்கள். இந்தப் பக்கத்து நண்பர்களுடன் அலுப்பு ஏற்பட்டு அந்தப் பக்கத்துக்கு நடக்க ஆரம்பித்தேன். கிச்சனின் இரண்டு பக்க ஷட்டர்களையும் இறக்கிப் பூட்டி விட்டார்கள். இடையில் எலி போல் மாட்டிக் கொண்டேன். ஓடும் ரயிலில் எத்தனைதான் தட்டினாலும் கூச்சல் போட்டாலும் ஷட்டர் திறப்பதாயில்லை. கீழே சொதசொதவென்று ஈரம். அன்னமய்யாவின் கீர்த்தனைகளை மனதுக்குள் உச்சரிக்கத் தொடங்கினேன். என் கண்களில் நீர்! சில நிமிடங்களில் எதற்கோ ரயில்வே ஊழியர்கள் ஷட்டரைத் தூக்க, நான் தப்பித்தேன். திறந்தவரின் பெயரை கேட்டேன் 'பாலாஜி' என்றார்.

- சித்தூர் எஸ்.முருகேசன்

பதினைந்து வருடங்களுக்கு முன்பு மதுரை அழகர் கோயில் மலைப் பாதையில் உள்ள பழமுதிர்ச்சோலை முருகன் கோயிலுக்குச் செல்ல சாலை வசதி இல்லை. கார், வேன்களும் செல்ல வசதியில்லை.

நானும் என் மனைவியும் எங்களுடைய குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு காலை 11 மணியளவில் மலையேறத் துவங்கினோம். நேரம் ஆகஆக வெயிலின் கடுமையால் மிகவும் சிரமப்பட்டோம். ஆள் நடமாட்டமே இல்லை.

திடீரென்று 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் வந்தார். எங்களது இரண்டு குழந்தைகளையும் தோளுக்கு ஒன்றாகத் தூக்கிக்கொண்டு சன்னிதி வரை வந்தார். குழந்தைகளை இறக்கி விட்டவுடன் மாயமாகி விட்டார். எங்கு சென்றார் என்றே தெரியவில்லை. அது முருகப் பெருமானால் அனுப்பப்பட்ட ஆளா? இப்போது நினைத்தாலும் மெய் சிலிர்க்கிறது.

- கே.ராஜேந்திரன், மதுரை

திடீரென்று ஒரு நாள் நான் தொடர்ச்சியாக இரத்த வாந்தி எடுத்து கிட்டத்தட்ட இரண்டு லிட்டர் இரத்தம் வெளியேறியது. ஒரு தனியார் மருத்துவமனையின் ஐ.சி.யு. வார்டில் அட்மிட் செய்தார்கள். எல்லா சிறப்பு டாக்டர்களும் தீவிர பரிசோதனை செய்து இரத்தம் எங்கிருந்து வருகிறது என்று கண்டுபிடிக்க முடியவில்லை என்றார்கள். கூடவே என் முதுமை காரணமாக ஆபரேஷன் செய்ய இயலாதென்றார்கள். அன்று இரவே இந்தச் செய்தி கேட்டு என் மகன் (தீவிர சாயிபாபா பக்தன்) குடும்பத்துடன் புறப்பட்டு என்னைப் பார்க்க வந்துவிட்டான்.



என் தலையணை அடியில் ஒரு சத்யசாய் போட்டோ வைத்தான். என் வாயில் சிறிது விபூதி, பிரசாதம் கொடுத்தான். பாபா உபயோகித்துக் கொடுத்த சால்வையை என் படுக்கை அடியில் வைத்து வேண்டிக்கொண்டான். மறுநாள் காலை டாக்டர்கள் வந்து என்னை பரிசோதித்து ஆச்சரியப்பட்டார்கள். நோயின் அறிகுறியே இல்லை. என்னை டிஸ்சார்ஜ் செய்துவிட்டனர். புட்டபர்த்தியின் அருள் இன்றும் என் மனத்தில் அகலாமல் இருக்கிறது.

- மீனாட்சி சுந்தரம், சென்னை



ஆச்சிக்கு அங்கீகாரம்!

வெற்றிப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் ஆச்சி நிறுவனத்துக்கு, புதிய அங்கீகாரம் ஒன்று, அதன் அலுவலகம் தேடி வந்துள்ளது.

'அனுகிர மேடிசன்' என்னும் விளம்பர நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி சென்னை ஸ்ரீ சாய்ராம் கல்லூரி எம்.பி.ஏ. மாணவர்கள் ஐம்பது பேர், ஓர் ஆய்வில் ஈடுபட்டிருக்கின்றனர். ஓராண்டு முழுவதும் நடைபெற்ற இந்த ஆய்வில், பத்து நிறுவனங்களின் உணவுத் தயாரிப்புகள் இடம் பெற்றிருக்கின்றன.

ஆயிரம் வீடுகளிலும், பொது இடங்களில் ஆயிரம் பேரையும் சந்தித்து இம்மாணவர்கள் பத்து நிறுவனங்களின் தயாரிப்புகளைக் காண்பித்து 'எது உங்களின் மனம் நிறைந்த தயாரிப்பு?' என்று கேள்வி எழுப்பியிருக்கின்றனர்.

தயாரிப்பின் தரம், திருப்தி, தட்டுப்பாடின்றி கிடைக்கும் தன்மை, விலை, பேக்கிங் என்று பதினைந்து விதமான கேள்விகள் ஆய்வில் கேட்கப்பட்டிருக்கின்றன.

சுமார் 70 சதவிகித நபர்கள் தரத்திலும், விலையிலும், திருப்தியிலும் தங்களது தேர்வாக 'ஆச்சி' நிறுவனத் தயாரிப்புகளையே கூறியுள்ளனர். இந்த அடிப்படையில் ஆச்சிக்கு அனுகிர மேடிசன் கம்பெனி, சிறந்த FMCG நிறுவனத்துக்கான விருதை வழங்கியுள்ளது.

விருதினை 'அனுகிர மேடிசன்' ராஜன் வழங்க, ஆச்சி நிறுவனர் பத்மசிங் ஐசக் பெற்றுக் கொண்டுள்ளார்.

விஷயம் இதோடு முடிந்துவிடவில்லை. மக்கள் மனதில் இடம் பெற்றுள்ள ஆச்சி நிறுவனம், தமது புதிய தயாரிப்புகளாக உடனடி உணவுத் தயாரிப்புகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது.



சென்னா மசாலா, பொங்கல் சாம்பார், பிசிபேலா பாத், வடைகறி, வெஜ் புலவ் என்கிற ஐந்து தயாரிப்புகள். அனைத்தும் வண்ண அட்டை பேக்கிங்கில் கண்ணைப் பறிக்கின்றன.

அவகாசம் குறைந்த நேரங்களில் வீடுகளில் பயன்படுவதோடு, மேன்ஷன் வாசிகளுக்கு, சுற்றுலா செல்வோருக்கு, திருத்தல யாத்திரைகள் போவோருக்கு இந்தத் தயாரிப்புகள் துணை வரும் என்கிற ஆச்சி நிறுவனம், வெளிநாடு செல்வோர்கூட விரும்பி வாங்குவதை பெருமையுடன் அறிவிக்கிறது.

- ஆதித்யா

'இம்சை அரசன் 23-ம் புலிகேசி' தந்த வெற்றியின் சுவடேயின்றி இருக்கிறார் இயக்குநர் சிம்புதேவன். சுஜாதாவிலிருந்து சூப்பர் ஸ்டார் வரை தமது படைப்புக்காய் பாராட்டப்பட்டவர். 'கல்கி'க்கென சந்தித்தபோது கவனத்தோடு பேசினார்...

விஜய்கோ, விக்ரமுக்கோ கதை செய்து சூப்பர் ஹிட் டைரக்டர் ஆகிவிட மாட்டோமா என்று அலைந்து திரிகிற புதியவர்களுக்கு மத்தியில் ஒரு நகைச்சுவை நடிகருக்குக் கதை செய்கிற துணிச்சல் எப்படி வந்தது?

"சினிமாவில் புதிதாகச் சாதிக்கத் துடிக்கிற எல்லா இளைஞர்களும் புதிய சிந்தனைகளோடும், நல்ல கதைகளோடும் தான் பயணத்தை ஆரம்பிக்கிறார்கள். எனக்குத் தெரிந்து

சிரிப்பும் கோபமும் கலந்ததுதான்



சக உதவி இயக்குனராக இருந்த நண்பர் ஒருவர், ஐந்தாண்டுகளுக்கு முன்பே இந்தியா-பாகிஸ்தான் போரை மையமாக வைத்துக் கதை பண்ணியிருந்தார். ரொம்ப நல்ல கதை. அதைக் கேட்கிற தயாரிப்பாளர்கள், நண்பர்கள் வட்டம்னு எல்லோரும் 'வியாபார ரீதியாக அதை மாற்று' என்று சொன்னபோது... 'முடியாது' என்று சொல்லிவிட்டு, 'ஊரில் எனக்கு விவசாயம் இருக்கு'ன்னு கோபத்தோடு போயிட்டார். இன்னிக்கு சமுகக் கோபம் கொண்ட நிறைய இளைஞர்கள் சினிமாவுக்கு வர்றாங்க. எல்லாருக்கும் ஷங்கர் சார் மாதிரி கிடைப்பதில்லை."

ஒரு முதலாளியாகப் பணம் போட்டதைத் தவிர, உங்கள் தயாரிப்பாளர் என்ன செய்துவிட்டார் என்று சொல்கிறீர்கள்?

"இன்றைக்கு சினிமா இருக்கும் இருப்பில் ஒரு ராஜா குதிரையில் வருகிறார், போகிறார் என்று ஒரு தயாரிப்பாளரிடம் போய்க் கற்பனையில் கூட கதை சொல்ல முடியாது. ஆனால் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, புலிகேசியின் கதைச் சுருக்கத்தை அவரிடம் சொன்னேன். 'இதாங்க வேணும்! இதான் புதுசு! இதைப் பண்ணுங்க' என்றார். எனக்குக் கண்கள் கலங்கி விட்டன. புதுமைகளை அங்கீகரிக்கும் ஒரு இயக்குனராக, தயாரிப்பாளராக ஷங்கர் இருந்ததால்தான் புலிகேசிக்கு சினிமா வடிவமே கிடைத்தது. எங்கள் படக்குழுவில் ஆர்ட் டைரக்டர் பி.கிருஷ்ணமூர்த்தியைத் தவிர வேறு யாருக்கும் வரலாற்றுப் படங்களில் பணிபுரிந்த அனுபவம் துளிகூடக் கிடையாது! ஆனால் எங்க டீமை அவர் நம்பினார்."

புலிகேசி பாத்திரத்துக்கு வடிவேலு கச்சிதமாகப் பொருந்திய ரகசியம் என்ன?

"கார்ட்டூனில் இருந்து பிறந்த கதை என்பதால், விகடனில் நான் வரைந்த கார்ட்டூன் உருவமே வடிவேலுவின் சாயலில்தான் இருக்கும். தவிர, மண்ணின் மைந்தராக வடிவேலுவின் தோற்றமும், அவரது நிறமும், உடல்மொழியும் அப்படியே புலிகேசியைப் புடம்போட்ட மாதிரி அமைந்துவிட்டது! புலிகேசி கதை உருவாகும்போதே வடிவேலுதான் பொருத்தமாக இருப்பார் என்று தீர்மானித்து விட்டேன். ஆனால் இது வடிவேலுக்காக புனையப்பட்ட கதை என்று சொல்வதை மறுக்கிறேன்."

வடிவேலுவை மனத்தில் வைத்துக்கொண்டு படம் பார்க்க வந்த ரசிகர்கள்... 'என்னப்பா காமெடியனை வெச்சுக்கிட்டு மெசேஜ் சொல்ல வந்துட்டாங்க' என்ற ரீதியில் விமர்சனங்கள் வந்ததை எப்படி எடுத்துக் கொண்டீர்கள்?

"என்.எஸ்.கே., சாப்ளின் எல்லாம் உலக மகா நகைச்சுவைக் கலைஞர்கள். ஹீரோக்கள் மெசேஜ் சொல்வதை நமது மக்கள் கேட்கிறார்களோ இல்லையோ, சாமான்ய சமூகத்தின் பிரதிநிதிகளான காமெடியன்கள் சொல்லும் மெசேஜை

காமெடி!

வேத வாக்காகவே எடுத்துக்கொள்ளும் பக்குவம் நம் ரசிகர்களுக்கு உண்டு. நல்ல நகைச்சுவை என்பதே சிரிப்பும் சமூகக் கோபமும் கலந்ததுதான். வடிவேலுவை வெறும் காமெடி நடிகராக மட்டுமே எதிர்பார்த்து படத்துக்கு வந்த அவரது ரசிகர்கள், அவரது ஹீரோயிஸத்தையும் ரசிக்கவே செய்தார்கள். தியேட்டர்களுக்கு நேரடியாக விசிட் செய்தபோது இதைத் தெரிந்து கொண்டேன்."

மதுரையிலிருந்து உங்கள் சினிமா பயணம் எப்படித் தொடங்கியது?

"எனது அண்ணன் கண்ணன்தான் அதற்குக் காரணம். மூன்றாம் வகுப்பு படிக்கிறப்போ நீதிக் கதைகளை உல்டாவா சொல்லுவோம். ஏழு, எட்டாம் வகுப்புகளில் படிக்கும்போது சேர்ந்தே பள்ளி நாடகங்களில் நடிப்போம். பத்தாவது படிக்கும்போது அண்ணன் தீவிர இலக்கிய வாசகர். அவர் எனக்கு அறிமுகப்படுத்தின பதினெட்டாவது அட்சக்கோடு, பாரீஸுக்குப் போ, அம்மா வந்தான் மாதிரியான நாவல்கள் அந்த வயசுக்கு அதிகம். இப்படிப் படிக்கும் வேளையிலும் ராணி காமிக்ஸ் ரொம்பப் படிப்பேன். பிறகு படிப்பு முடிச்சு சென்னை வந்து மாணவப் பத்திரிகையாளனாகச் சேர்ந்து... கி.மு.வில் சோமு கார்ட்டூன் தொடர் மூலமா சேரன் என்கிற தரமான இயக்குநர்கிட்டே சேர முடிஞ்சது. எனக்கு சினிமாவிலே பெரிசா எதுவும் வேணாம். சினிமாவிலிருந்து ஓய்வு பெற்று வெற்றி-தோல்விகளைத் திரும்பிப் பார்க்கும்போது நம்ம படைப்புகள் குறைந்தபட்சம் நமக்காவது பிடிச்சிருக்கணும்."


- ஆர்.சி.ஜெயந்தன்

படம் : **பொள்ளாச்சி சுந்தரம்**



• சிம்பு தேவன்

உணவுப் பழக்கம், உடற்பயிற்சி இரண்டும்தான் ஒரு மனிதனை உயிர்ப்போடு வைக்கும் விஷயங்கள். நான் உற்சாகத்தோடு இருக்கவும் இவைதான் காரணங்கள். ஆரோக்ய வாழ்வு தேடி வெளியில் எங்கும் அலைய வேண்டாம். அது நமக்குள்ளேயே இருக்கிறது. என் நலவாழ்வுப் பட்டியல் சுருக்கமானது; சுகமானது.



டயட்டீஷியன் பாட்டி...

திருச்சி மேயர் சாருபாலா தொண்டைமான்

அதிகாலை ஐந்து மணிக்கு, அலாரம் வைக்காமலே விழிப்பு வந்துவிடும். எழுந்தவுடன் நிறையத் தண்ணீர் குடிப்பேன். இறைவன் நமக்களித்திருக்கும் மிகச் சிறந்த திரவ ஆகாரம் தண்ணீர். பின்னர் முப்பது நிமிட நேரம் தியானம். அது ஒரு தனி உலகம். அதில் சஞ்சரிப்பது அலாதியானது. அடுத்து ட்ரெட் மில்லில் முப்பது நிமிட நடைப் பயிற்சி. ஒரு நாளை உற்சாகத்தோடு துவங்க எனக்கு உறுதுணையாக இருப்பது இவைதான். பிராணாயாமம் எனப்படும் எளிய மூச்சுப் பயிற்சியும் இதில் அடக்கம்!

காலைச் சிற்றுண்டியாக இட்லி, கொத்துமல்லிச் சட்னி, கேழ்வரகுக் கஞ்சி, நவதானியங்கள் போட்டு வேக வைத்த கஞ்சி என ஏதேனும் ஒன்று. காலையில் காபி, மாலையில் தேநீர் அருந்தும் பழக்கமும் உண்டு. கோடை காலங்களில் தாளித்த கடுகுடன் கறிவேப்பிலை மிதக்கும் மோர் அருந்துவேன். மதிய உணவாக சிறிதளவு அரிசிச் சாதம், சப்பாத்தி. தினசரி ஒரு கீரை வகை சமையலில் கட்டாயம் இடம் பிடித்துவிடும். காய்கறிகள் நிறையச் சேர்த்துக் கொள்வதுண்டு. அவியல் மற்றும் கூட்டுப் பொரியல் பதார்த்தங்களை ஒருபிடி பிடிப்பேன். எண்ணெய் விட்டு வறுத்தெடுத்தவற்றுடன் 'காய்' விட்டுப் பல வருடங்கள் ஆகிவிட்டன. மாலை ஏழு மணிக்கு இரவு உணவு. சப்பாத்தி, இடியாப்பம், இட்லி இவற்றில் ஏதேனும் ஒன்று!

பத்து வருடங்களுக்கு முன்பு ஆழியாறு சென்று அறிவுத் திருக்கோயிலில் தங்கியிருந்து, வேதாத்ரி மகரிஷி அவர்களிடம் தீட்சை பெற்று, குண்டலினி யோகம் கற்றுக் கொண்டேன். மிகவும் நுட்பமான, அற்புதமான விஷயம் அது. இல்வாழ்க்கையில் இருந்துகொண்டே ஆண்களும் பெண்களும் குண்டலினி யோகம் கற்றுக்கொள்ளலாம் என்பதை விரிவாகப் பரப்பிய வித்தை மகான் வேதாத்ரி மகரிஷி.

படிக்கிற காலத்திலேயே வீட்டிலிருந்து பள்ளிக்கு தினசரி சைக்கிளில் சென்று வந்திருக்கிறேன். அந்தப் பயிற்சி எனக்கு அரசியலிலும் கை கொடுத்தது. ஒரு முறை ஐந்து கி.மீ. சைக்கிள் பேரணியில், காங்கிரஸ் தோழர்களுடன் சைக்கிளில்

சென்று வந்தேன். சமீபத்தில் நடைபெற்ற மாநகராட்சித் தேர்தலில் வாக்கு சேகரிக்க என்னுடைய நாற்பத்து நான்காவது வார்டின் எல்லாப் பகுதிகளுக்கும் சைக்கிளில்தான் சென்றேன்.

திருச்சி மேயராகப் பணியாற்றிய கடந்த ஐந்து வருடங்களிலும் சரி, இப்போதும் சரி... முறையான உணவுப் பழக்கமும், சீரான உடற்பயிற்சியுமே என்னைச் சுறுசுறுப்பாகவும் நோய்வின்றியும் இயங்க வைத்துக் கொண்டிருக்கின்றன. நான் சிறுமியாக இருந்த காலத்திலிருந்து, எனக்குத் திருமணமாகி, இரண்டு குழந்தைகள் பிறந்து, அவர்கள் வளரும் வரை எங்களுடன் நிழல்போல இருந்து, என் ஆரோக்கியத்துக்கான டிப்ஸை வாரி வழங்கியவர் என்னுடைய பாட்டி பாலம்மாள் பாஸ்கர தொண்டைமான். அவர் காட்டிய வழியில்தான் ஆரோக்கியமாக சென்று கொண்டிருக்கிறது என் குடும்பத்தின் சுக வாழ்வு!''

சந்திப்பு, படம்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



விமர்சனம்

வல்லவன்



முதல்ல ஆச்சர்யப்படத்தான் தோணுது– இத்தன சின்ன வயசுல சிம்புக்குள்ள இவ்வளவு திறமையான்னு! அடுத்து எழறது வருத்தம்... ஏன் இந்த மனுஷன் திறமைய நல்லவிதமா பயன்படுத்தாம இப்படிக் காதல், காமம்னே உழல்றாரேன்னு!

'மன்மதன்' மாதிரி வல்லவனும் 'சைக்கோ' கதைதான். முதல்ல இதுலேர்ந்து வெளியே வரணும் சிம்பு. சொல்லப்படாத விஷயங்கள் எவ்வளவோ இருக்க, எதுக்கு மீண்டும் மீண்டும் மனநலம் தொடர்பாவே கதை பண்ற சிந்தனை? நயன்தாராவ உருகி உருகிக் காதலிக்கிறார். அந்தக் காதல் மிக அழகா சொல்லப்பட்டிருக்கு. வல்லவனைவிட 'பல்லன்' பிரமாதப்படுத்தறார், பரிதாபத்தை ஈஸியா சம்பாதிச்சு (நம்மகிட்டயும்) காதலை சக்சஸ் பண்றார். ஆனா, தேவையில்லாம படுக்கையறைக் காட்சிகள், அது இதுன்னு கேவலமா அந்தக் காதலைக் கொச்சைப்படுத்திடறார். குறைஞ்ச பட்சம் 'இப்படி இருந்துட்டாலாவது வயசு வித்தியாசம் பாக்காம, நம்மள விட்டுட்டுப் போகாம இருப்பா'ங்கற சிந்தனையையாவது நியாயப்படுத்த வச்சிருக்கலாம்.

அடுத்து ரீமாசென். பாத்திரத்துக்குப் பொருத்தமில்லாத தேர்வு. காதலனை ஷூவைக் கழட்டி அடிக்கிறதெல்லாம் டூமச்; நம்ப முடியல. ஏற்கெனவே நீலாம்பரிய பார்த்துட்டதால இவர் பண்ற வில்லத்தனம் எடுபடாம போகுது. சந்தியா நண்பியா வந்து நட்புக்கு வக்காலத்து வாங்கறதோடு சரி. சந்தானம் அண்ட் கோ அடிக்கிற லூட்டியில வயிறு வலிக்க ஆரம்பிச்சுடுது.

பின்னணில முன்னணி யுவன். 'லூசுப் பெண்ணே' பல காதலர்களோட ரிங்டோனா ஆகிப் போச்சு! 'யம்மா யம்மா' 'கும்தலக்கடி கும்மா!' 'காதல் வந்துடுச்சு' ரீமிக்ஸ் ஜிவ்! பாலகுமாரனோட வசனங்கள் செம கூர்!

படம் ரொம்ப நீளம். திடீர்னு முடியற மாதிரி ஃபீலிங் ஏற்படறதைத் தவிர்க்க முடியல. க்ளைமாக்ஸ் சரியா சொல்லப்படாதது பெரிய குறை. எங்கெங்கோ கத்திரி போட்டு, முன்பாதியில இருந்த வசீகரத்தைப் பின்பாதியில இல்லாம பண்ணிட்டாரு சிம்பு.

- லஜ்ஜாவதி



சென்னை அகராதி!

அரசியல் : இது ஒருவகைச் சூதாட்டம். சென்னை நகரின் பிரபல வக்கீல்கள் பலரும், இன்னும் வேலையற்ற பிரபுக்கள் சிலரும் இந்தச் சூதாட்டத்தில் ஈடுபடுகிறார்கள். "பொது ஜனங்கள்", "வாக்காளர்", "ஏழை எளியவர்கள்", "ஒடுக்கப்பட்டவர்கள்" ஆகியோர் இந்த ஆட்டத்தில் பணயமாக வைக்கப்படுகிறார்கள். ஆட்டத்தில் கெலிப்பவர்களுக்கு கௌரவ மாஜிஸ்ட்ரேட் பதவி முதல், நிர்வாக சபை அங்கத்தினர் பதவி வரையில் கிடைக்கலாம்.

ஈகை : சென்னை வீதிகளில் நடமாடும் குஷ்டரோகிகளும், க்ஷய ரோகக்காரர்களும் இந்தச் சிறந்த தர்மத்தைக் கடைபிடித்துத் தங்கள் நோய்களை எல்லாருக்கும் தாராளமாய் வழங்கி வருகிறார்கள். மற்றப்படி சென்னையில் 'ஈகை'யைக் காண்பது சிறிது பிரயாசையான காரியந்தான்.



ஊமை : சென்னை சட்டசபை அங்கத்தினரில் 100-க்கு 70 பேர் இந்த இனத்தைச் சேர்ந்தவர்களென்று சொல்லப்படுகிறது.

ஓடு : மௌண்ட் ரோட்டிலுள்ள வெள்ளைக்காரர் கடைகளுக்குள் ஒருவன் தன் மனைவியை அழைத்துக்கொண்டு புகுந்துவிட்டால், வெளியே வந்ததும் கையில் எடுத்துக்கொள்ள வேண்டியது திருவோடு.

ஔடதம் : முற்காலத்தில் இது நோய் போக்கும் சாதனமாயிருந்ததாகச் சொல்லப்படுகிறது. தற்போது சென்னையில் ஒரு சிலர் ஊரைக் கொள்ளையடிப்பதற்கு சாதனமாயிருந்து வருகிறது.

நாகரிகம் : சென்னையில் நாகரிகம் வளர்ந்து வருகிறதென்பதைப் பற்றி அபிப்பிராய பேதமே இருக்க முடியாது. சாராயக் கடை, சுருட்டுக் கடைகளின் வளர்ச்சியையும், கொசுக்களின் பெருக்கத்தையும் கொண்டு சென்னையின் நாகரிகத்தை ஒருவாறு அளந்தறியலாம்.

பணம் : இந்த வஸ்துவை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் தவிப்பவர்கள், அடுத்த ரயிலில் சென்னைக்குப் புறப்படுவார்களாக.

- வானதி பதிப்பகத்தின் 'அதிர்ஷ்ட கவசம்' நூலிலிருந்து..

நம்மாழ்வாரின் திருவிருத்தம் நூறு கட்டளைக் கலித்துறைப்பாக்களைக் கொண்டது.

அந்தாதி வடிவத்தில் உள்ள அகத் துறைப் பாடல்கள். அகத்துறை என்றால் தலைவன், தலைவி, செவிலி, தோழி, நற்றாய், பாங்கன் போன்ற தீர்மானித்த பாத்திரங்கள் பேசுவதைப்போல அமைந்த பாக்கள். சங்கப் பாடல்களின் மரபில் வந்தவை இவை. குறுந்தொகை, அகநானூறு, நற்றிணை, ஐங்குறுநூறு போன்றவை அகத்துறைப் பாடல்களின் தொகுப்பு நூல்கள். சுமார் எட்டாம் நூற்றாண்டில் பக்தி இலக்கியம் தோன் றின பின் அகத்துறைப் பாடல்களின் அற்புதத்தை இழக்காமலிருக்க, அவற்றை தொல்காப்பியத்தில் சொன்ன அதே விதிகளைச் சற்று மாற்றித் தலைவனை மட்டும் மானுடனிலிருந்து கடவுளாக மாற்றிப் பக்தியும் காதலும் ஒன்றுதான் என்கிற ஆழமான கருத்தை வலியுறுத் தினார்கள். அவர்களுள் நம்மாழ்வார் சிறந்தவர். திருவிருத்தத்தின் பாசுரங் களை நேரடியாகப் புரிவது கொஞ்சம் கஷ்டம்தான். பதம் பிரித்துப் பொருள் உணர்ந்தால் பல ஆச்சரியங்கள் கிடைக்கும்.

உதாரணம், இந்தப் பாடலை முதலில் நேரடியாகப் படித்துப் பாருங்கள்.

"மலர்ந்தே ஒழிந்தில மாலையும்
மாலைப்பொன் வாசிகையும்
புலந்தோய் தழைப்பந்தர் தண்டுற
நாற்றிப் பொருகடல்சூழ்
நிலந்தாவிய எம்பெருமான் தனது
வைகுந்தமன்னாய்
கலந்தார் வரவுஎதிர்கொண்டு
வன்கொன்றைகள் கார்த்தன"

(ஒழிந்தில-இன்னும் மலரவில்லை, பொன்வாசிகை-பொன்னாலான வட்ட மாலை, பந்தர்-பந்தல், நாற்றி-தொங்க விட்டு, வைகுந்தமன்னாய்-வைகுண்டத் தைப் போன்றவளே, கலந்தார்-கூடினவர், கார்த்தன-அரும்பின)

கொன்றை மலர்கள் இன்னும்
மலரவில்லை,
நெருக்கமான பந்தல் போன்ற
கிளைகளில்
தங்கநிற மலர்களை இன்னும்
தரவில்லை.
கடல்சூழ்ந்த உலகத்தைத் தாவி
அளந்த
பெருமானின் வைகுந்தம்
போன்றவளே!
உன்னுடன் கலந்தவர்
வரவை எதிர்பார்த்து
அரும்புகள் மலரக் காத்திருக்கின்றன.

இப்போது இந்தப் பாடலின் அழகு தெளிவாகிறதல்லவா?

தோழி தலைவிக்குச் சொல்வது இது. 'கொன்றை மலர்கள் மலர்ந்துவிட்டன. கார்காலத்தில் வருவேன் என்று சொன்ன தலைவன் இன்னும் வரவில் லையே' என்று வருத்தப்பட்ட தலைவிக் குத் தோழி சமாதானம் சொல்வது. அவன் வரப் போகிறான் என்ற சந்தோஷத்தில் தான் இவை மலரப் போகின்றன. இது ஒரு கால மயக்கு என்கிறாள். இவ்வகை யான பாடல் குறுந்தொகையிலும் உள்ளது; தலைவன்தான் வேறு. அதையும் பார்க்கலாம்.

மடவமன்ற தடவு நிலைக் கொன்றை
கல் பிறங்கு அத்தம் சென்றோர் கூறிய
பருவம் வாரா அளவை, நெரிதரக்
கொம்பு சேர் கொடி இணர் ஊழ்த்த
வம்ப மாரியைக் கார் என மதித்தே -
கோவர்த்தனார்

பொய் மழைக்காலம்

முட்டாள் கொன்றை
பாலைவன வழியில் சென்ற
தலைவர் திரும்பி வருவதாகச்
சொன்ன
மழைக்காலம் வருவதற்குள்
பொய் மழையைப் பார்த்து
மழைக்காலம் என்று எண்ணி
கொடியெல்லாம் பூக்கிறது

இரண்டாம் நூற்றாண்டில் எழுதப் பட்ட காதல் கவிதை ஒன்பதாம் நூற்றாண் டில் பகவான்மேல் பக்தி செலுத்த அழகு குன்றாமல் திருத்திய நம்மாழ்வாரின்

சுஜாதா

மேதைமையை வியக்கலாம். இதற்கான இலக்கணம் இறையனார் களவியல் என்ற நூலின் உரையிலிருந்தும் மாணிக்கவாச கரின் திருக்கோவையாரிலும் உள்ளது. சங்க காலத்துக் காதலை இடைக்காலத் தில் பக்தியாக மாற்றிவிட்டார்கள்.

ஒன்பதாம் நூற்றாண்டில் எழுதப் பட்ட நம்மாழ்வாரின் பாடலை

they are waiting
with buds
for the return
of your lover
once twined in your arms.

வைணவர்கள் இதை, 'பகவானையும் பாகவதரையும் எப்பொழுதும் சேர்ந்து

கொன்றைகளின் அவசரம்

இருபதாம் நூற்றாண்டில் ஏ.கே.ராமானு ஜன் ஆங்கிலத்தில் எப்படித் தந்திருக் கிறார் என்பதையும் இப்போது வியக் கலாம்.

They haven't flowered yet,
the fat konrai trees,
nor hung out their garlands
and golden circlets
in their sensual canopy of leaves
along the branches
dear girl,
dear as the paradise of our lord
who measured the earth
girdled by the restless sea,

அனுபவிக்கலாயிருக்க உரிய காலத்தில் அனுபவிக்கப் பெறாமையால் ஆழ் வார்க்கு உண்டான தளர்ச்சியை அன்பர்கள் ஆற்றுதல் இதன் உள்ளுறை பொருள்' என்பார்கள். ●



தமிழ்நாடு சுபிட்சமாக இருக்கிறது!

- முகில்

இந்த நிமிஷத்துல ஒரு தமிழனா உங்க மனசு என்னத்த ஃபீல் பண்ணுதோ, அதைத்தான் நான் புலம்பப் போறேன்.

இன்னிக்குக் காலைல எனக்குச் செமத்தியா கோவம் வந்திருச்சு. எதுக்குன்னு கேக்கறீங்களா? என்னைப் பார்த்து ஒருத்தன், 'நல்லாயிருக்கியா?'ன்னு கேட்டுட்டான். இந்த 'இலவச' தமிழ் நாட்டுல 24 மணி நேரமும் கேக்குறதுக்கு எத்தனையோ எஃப்.எம் இருக்கு. அதை விட்டுட்டு, ஒருத்தன் இன்னொருத்தனைக் கேவலமாத் திட்டி விடுற அறிக்கைகளைக் கேக்குறது மட்டுந்தான் மக்களோட வேலைன்னு நினைச்சுக்கிட்டு இருக்காங்களே, நம்ம எல்லாத்தையும் ஓரறிவு (அதான், ஓட்டுப் போடுற அறிவு) மட்டும் கொண்ட ஜந்துவா நினைச்சு என்ன வேணும்னாலும் பேசுறாங்களே, அப்பேர்ப்பட்ட இந்தத் தமிழ் நாட்டுல நம்மால எப்படிய்யா நல்லாயிருக்க முடியும்?

'நீ தமிழன். உள்ளாட்சித் தேர்தல்ல ஓட்டுப் போடுறது உன் கடமை'ன்னு உன் மனசு உடுக்கை அடிச்சு வீர வசனம் பேச, நானும் அப்பாவியா ஒய்யார நடை நடந்து ஓட்டுப் போடப் போனேனுங்க. 'ஊசாப்பா நீ. உன் ஓட்டை நேத்தே போட்டாச்சு. போ போ. போய்ப் பொழப்பைப் பாரு'ன்னு தொரத்தி விட்டானுங்க. இந்தா வைச்சுக்கோன்னு கையில ரெண்டு காந்தியை வேற திணிச்சுட்டாங்க.

காந்தியைப் பார்த்ததும் மனசு வேற மாதிரி உறுத்த ஆரம்பிச்சுருச்சு. வாங்குன காசுக்குக் கள்ள வோட்டாவது போடலாமேன்னு கருணை உள்ளத்தோட திரும்ப உள்ளே போனேன். அந்தக் கட்சிக்காரங்களைப் பார்த்து, 'அய்யா, என் வோட்டைத்தான் போட முடியல. எனக்கும் ஒரு வாய்ப்பு கொடுங்க; நானும் ஒரு அம்பது கள்ள வோட்டாவது போட்டு ஜனநாயகக் கடமைய நிறைவேத்திட்டுப் போறேன்'னு கத்துனேன்; கெஞ்சுனேன்; கதறினேன்.

'போயா பிஸ்கோத்து. ஏற்கெனவே நாங்க குத்துன குத்துல வோட்டு நூத்துக்கு நூத்தியிருவது சதவிகிதம் வந்து நிக்குது. இடத்தைக் காலி பண்ணுறியா, இல்ல உன்னைக் காலி பண்ணவா?'ன்னு ஒரு ஆளு மூஞ்சியிலேயே குத்த, உயிர் பிழைக்க ஒரு ஆம்புலன்ஸ் பின்னாலேயே வேகமா ஓடியாந்து வீட்டுல விழுந்தேன்.

கோவம் கோவமா வந்துச்சு. என்னால வேற என்ன செய்ய முடியும்? இலவச கலர் டீ.வி.யில எதிர்க்கட்சி சேனல் நியூசைப் பார்த்து கோவத்தைத் தணிச்சுக்கிட்டேன். நான் எந்தக் கட்சிக்காரனும் கிடையாதுங்க. அப்பப்ப வாத்தியார் பாசம் மட்டும் எட்டிப் பார்க்கும். பாருங்க, நம்மல்லாம் இன்னும் செவப்பு எம்.ஜி.ஆரையே மறக்கல. அதுக்குள்ள 'கறுப்பு எம்.ஜி.ஆர்'னு ஒருத்தரு கௌம்பி வந்தா என்னாத்த சொல்லுறது!



கள்ளுக்கடையைத் தொறப்பேன், டாஸ்மாக்கை டரியல் பண்ணுவேன்னு அறிக்கை உடுறாரு ஒருத்தரு. அவரை எதிர்த்து 'குடிகாரன் பேச்சு. எல்லாமே ஸ்காட்ச்சு'ன்னு இன்னொருத்தரு அறிக்கை விடுறாரு. எனக்கென்னவோ, வருங்காலத்துல ரேஷன் கடையில மண்ணெண்ணெய்க்குப் பதிலா குவார்ட்டர் ஊத்துவாங்களோன்னு தோணுது.

ஒண்ணுமில்லீங்க... ஏதோ எம்.ஜி.ஆர். ஒக்காந்துக்கிட்டும், நின்னுக்கிட்டும் போன வேனாம். அதை ஒரு அம்மா அவருக்கு கிஃப்டா கொடுத்தாங்களாம். அதுலதான் பிரசாரம் பண்ணுவேன்,



ஏன்னா நாம எல்லாம் அவரோட வாரிசு கன்னு விருதாச்சலம் பார்ட்டி வேர்ட்ஸ் விடுது. 'ஏய்... அதெப்படி நீ சொல்லலாம், அந்த வேன் எம்.ஜி.ஆரோட கட்சி சொத்து. நீ அத லவட்டிக்கிட்ட. ஒயுங்கா



திருப்பிக் கொடு'ன்னு ஏதோ ஒரு பார்ட்டி எகிறிக் குதிக்குது. ஏம்ப்பா... எம்.ஜி.ஆர். வேனா வந்து ஓட்டுப் போடப் போகுது. நீங்கதானப்பா வேன் வேனா ஓட்டுப் போடுறதுக்கும் ஆட்கள் சப்ளை பண்ணப் போறீங்க!

எனக்கு இன்னும் புரிய லீங்க. ஒரு தலைவரு இருக் காரே... எப்பப் பார்த்தாலும் மீசையில கையை வைச்சு முறுக்கு னாப்லயே பத்திரிகைக்கு போஸ் கொடுப்பாரே, அவரு இப்ப எந்தக் கூட் டணில இருக்காரு? ஒருவேளை போயஸ்–அறிவாலயத்துக்கு இடையில் ரூட் பஸ் டிரைவரா மாறிட்டாரோ? ஊரு பேர மாத்திப்போட்டா ஒரு தல வருவாரே, அவரோட மூஞ்சே எனக்கு மறந்து போச்சுங்க. நெசம்தானுங்க, எவ்வளவோ முயற்சி செஞ்சும் ஞாப கத்துக்கே வரமாட்டேங்குதுங்க!

டீ.வி.யைப் போட்டா, உலகத் துல இருக்குற ஒட்டுமொத்த கொடு மையையும் தாங்குற தியாக பிம்பமா கோலங்கள் அபி வாழுது. நாலு தடவை மார்கழி மாசம் போயிருச்சு. இன்னும் கோலங்கள்தான் முடிஞ்ச பாடில்லைன்னு அடுத்தாப்புல வர்ற செல்வியைப் பார்த்தா அதுலயும் அரசி யல் பல்லைக் காட்டுது. ஆமா செல்விக்கா, நீங்க அ.தி.மு.க. ஐடி கார்டைத் தொலைச்சுட்டீங்களா, அதான் தூக்கிட்டாங்களா? நமக் கென்ன தெரியும், 'கோக்'கு மாக்கா இதுல என்ன பிஸினஸ் ப்ளான் வெச்சி ருக்கீங்களோ!

இத்தனை டென்சனையும் தணிக் கறதுக்காக சினிமாவுக்குக் கௌம்பு னேங்க. 'வரலாறு'க்கு டிக்கெட்டை வாங்கிட்டு, தியேட்டர் மாறி 'தர்மபுரி'க்கு போயிட்டேன். படத்துக்கு வந்திருக்கோமா, இல்ல தே.மு.தி.க. பிரசாரப் படத்துக்கு வந்திருக்கோமான்னு ரொம்ப நேரமாப் புரியல. தியேட்டர்ல இருந்து வெளிய வர்றப்போ, எங்க நம்ம கையில யும் 'கட்சி உறுப்பினர் அட்டை'யை வலுக்கட்டாயமாத் திணிச்சுருவாங் களோன்னு மிரண்டுட்டேன்.

கடைசியா என்ன சொல்லப் போறேன்னு ஆவலா இருக்கீங்களா? 'நாம நாசமாப் போகணும் நாடு முன்னேற...'

ஒரு கம்பெனி, ஒரு புதிய ப்ராடக்டை சந்தையில் அறிமுகம் செய்ய நினைக்கிறது. நியூஸ் பேப்பரிலோ, டி.வி.யிலோ விளம்பரம் கொடுக்கலாம்தான். ஆனால் அப்படி ஆரம்பித்தால் பிறகு கம்பெனியை இழுத்து மூடவேண்டி வரும். அந்த அளவுக்குப் பணத்தை வாரி இறைக்க வேண்டும். மேலும் விளம்பரமும் இடைவிடாது கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். நடைமுறைக்கு இது சாத்தியமில்லை. ஆனாலும் இப்பொழுது புதிய பொருள் சந்தைக்கு வரவேண்டும். என்ன செய்யலாம்?

இந்த இடத்தில்தான் ஆபத்பாந்தவனாய் உதவுவார் அந்த கம்பெனியின் பி.ஆர்.ஓ. இந்தப் பணியிலிருப்பவர் நேர்த்தியாக வேலை செய்தால் போதும், எந்த நிறுவனமும் கிடுகிடு வளர்ச்சியைக் கண்டுவிடும்.

சரி, இந்த உலகத்தின் முதல் பி.ஆர்.ஓ. எங்கிருந்து தோன்றியவர்? நம் நாட்டிலிருந்துதான். 'நாராயணா... நாராயணா' என்று சொல்லியே பல பிரச்னைகளை முன்னின்று தீர்த்த நாரதரைத்தான் இவ்வுலகின் முதல் பி.ஆர்.ஓ. என்பேன். ஸ்ரீராமனின் பி.ஆர்.ஓ.வாக இருந்து

புதுசா சம்பாதிங்க!

செயல்பட்ட அனுமனின் சாதுர்யங்கள் ஏராளம். பி.ஆர்.ஓ.வின் அடுத்தகட்டமான கார்ப்பரேட் கம்யூனிகேஷனை அன்றைக்கே செயல் வடிவில் நிரூபித்துக் காட்டியவர் பகவான் கிருஷ்ணர். பாடி லாங்குவேஜ் மற்றும் வார்த்தை உச்சரிப்பின் வழியாக, சரியாகத் திட்டமிட்டு எந்தக் காரியத்தையும் முடிப்பார். எதிரிகளிடம்கூட அவர் தன் வாதத் திறமையைக் காட்டி மரியாதை பெற்றாரே! இப்படி நமது இதிகாசங்களிலேயே மக்கள் தொடர்புப் பணிக்கான கவடுகள் உள்ளன.

அதன்பின்பு சுதந்திரப் போராட்டக் காலங்களில் மக்களிடம் விடுதலை வேட்கையைக் கொண்டு சென்ற மகாத்மா காந்தி, பாரதி, திலகர் உட்பட அனைவருமே மக்கள் தொடர்புப் பணியைச் செவ்வனே செய்தவர்கள்.

பி.ஆர்.ஓ. என்கிற வார்த்தை இந்திய வியாபாரத் தளத்தில் நடைமுறைக்கு வந்தது; 1990களில்தான். சீனா, ரஷ்யா, கொரியாவில் தாராளமயமாக்கல் காலடி எடுத்து வைத்தது. இந்தியாவுக்குள்ளும் நுழைந்தது. பன்னாட்டு நிறுவனங்கள் டாலர்களைக் கொட்டி விளம்பரங்களில் தூள் பரத்தினார்கள். இந்திய கம்பெனிகள் நடுங்கிப்போயின. பன்னாட்டு கம்பெனிகளை எதிர்கொள்ள முடியாமல் தவித்தன. நிச்சயமாக அவர்கள் விளம்பரங்களுக்குச் செலவிடுவதைப்போல் நம்மால் முடியாது. அப்போது மாற்று ஏற்பாடாகக் கொண்டு வரப்பட்டதுதான் மக்கள் தொடர்புப் பணி. அதாவது பி.ஆர்.ஓ.

ஒரு பொருள் சந்தைக்கு வரும்முன் அதன் மகிமையை ஊருக்கு உணர்த்துவது பி.ஆர்.ஓக்களின் தலையாயப் பணி. இன்று அனைவருக்கும் மீடியா வழியாக விளம்பரம் தேவைப்படுகிறது. ஓசையின்றி எவரும் வியாபாரம் செய்வதில்லை; செய்யவும் முடியாது. மக்களுக்கும் கம்பெனிகளுக்குமிடையே ஒரு பாலம் வேண்டும். ஒரு கம்பெனியின் எம்.டி., தம் நிறுவனத்தின் பெருமைகளைத் தாமே ஊர் ஊராகப் போய்ச் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. அவர் சார்பாக, அவர் என்னென்ன பேசுவாரோ அத்தனையையும் ஒரு பி.ஆர்.ஓ. பேச வேண்டும்; செய்ய வேண்டும். இங்கு குறிப்பிட்ட நிறுவனத்தின் பொருள் சந்தைப்படுத்தப்படும். விவரங்



கள் தெளிவாகத் தெரிவிக்கப்படும். ஒரு கம்பெனி ஷேர் மார்க்கெட்டுக்குள் நுழையும்போது பி.ஆர்.ஓ.தான் பங்குதாரர்களுக்கும் கம்பெனிக்கும் பாலமாக இருக்க வேண்டும்.

பி.ஆர்.ஓ.வின் தயவு இல்லாமல் இன்று எதுவும் இல்லை. ஸ்டார் ஹோட்டல்கள் பன்னாட்டு நிறுவனங்கள் முதல் சிறிய கம்பெனிகள் வரை பி.ஆர்.ஓ.வின் தேவையை உணர்ந்திருக்கிறார்கள். இந்திய கிரிக்கெட் அணிக்கும்கூட பி.ஆர்.ஓ. உண்டு. காங்கிரஸ் பி.ஜே.பி. என அரசியல் கட்சிகளுக்கும் பி.ஆர். ஏஜென்சிகள் உள்ளன. தனியே பி.ஆர்.ஓ. ஊழியரை வைத்துக்கொள்ளாதவர்கள் பி.ஆர். ஏஜென்ஸியிடம் பணியை ஒப்படைக்கிறார்கள்.

இந்தத் துறையும் நவீனம் அடைந்துள்ளது. கார்ப்பரேட் கம்யூனிகேஷன் என்கிற புதிய வேலையைப் பன்னாட்டு நிறுவனங்கள் உருவாக்கியுள்ளன. சென்னையில் எம்.ஓ.பி., ஸ்டெல்லா மாரிஸ் மற்றும் திருச்சியிலுள்ள பெரியார் ஈ.வே.ரா. போன்ற கலைக் கல்லூரிகளில் எம்.ஏ. பப்ளிக் ரிலேஷன்ஸ் படிப்பு உள்ளது.

கம்யூனிகேஷன் ஸ்கில் உள்ள அனைவரும் தாராளமாக இத்துறையில் நுழையலாம்; ஒரு சாஃப்ட்வேர் இன்ஜினியர் வேலை காலியாக இருந்தால், அந்த வேலைக்குக் குறைந்தது ஐந்து பேராவது போட்டியிடுவார்கள். ஆனால் பி.ஆர். பணிக்கு ஐந்து இடங்கள் காலியாக இருக்கின்றன என்றால், அதற்கு ஒருவர்தான் போட்டியிடுவார். வேலைவாய்ப்பு இதில் கொட்டிக் கிடக்கிறது. ஆரம்பச் சம்பளம் எட்டாயிரம் முதல் கிடைக்கும். ஆங்கில அறிவு மட்டுமே இந்த வேலைக்குப் போதாது. வட்டார மொழி கட்டாயம் அவசியம்.

1906ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஓர் விபத்தைப் பற்றிய செய்தியை ரயில்வே பி.ஆர்.ஓ. வெளியிட்டு, அது நியூயார்க் டைம்ஸில் செய்தியாக வந்தது. இதுதான் உலகில் பி.ஆர்.ஓ. வெளியிட்ட முதல் பத்திரிகைச் செய்தி. பொதுவாக, நூறு வயது ஆனவுடன் தள்ளாட்டம் அதிகமாகும். ஆனால் இந்தத் துறை இப்பொழுதுதான் நிமிர்ந்து நடக்க ஆரம்பித்துள்ளது.

சந்திப்பு - **ச.ந.கண்ணன்**

படம் : **ஸ்ரீஹரி**

ஸ்ரீனிவாசன்,
மக்கள் தொடர்பு அதிகாரி,
ப்ரைம் பாயிண்ட்





• டி.வி.சுந்தரம் ஐயங்கார்

எஸ். சந்திரமௌலி

எம்.ஜி.ஆர்., சிவாஜி, ரஜினி, கமல் என்று தமிழகத்தில் மூன்றெழுத்துப் பிரபலங்கள் ஏராளம்; தாராளம். தொழில் துறையில் டி.வி.எஸ். Trust (நம்பிக்கை); Value (மதிப்பு); Service (சேவை). சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் மதுரையில் ஊன்றப்பட்ட வித்து, இன்று ஆலமரமாக வேர் பரவி, ஆண்டுக்கு 9000 கோடி ரூபாய் புழங்கும் முன்னணி தொழிற் குழுமமாக விளங்குகிறது. இந்த ஆலமரத்துக்கு வித்திட்டவர் டி.வி.சுந்தரம் ஐயங்கார்.

ஒருமுறை சுந்தரம் ஐயங்கார் சென்னைக்கு வந்திருந்தபோது, சென்னையில் பிரபல வக்கீல் நார்ட்டன் துரை பேசிய நிகழ்ச்சிக்குச் சென்றிருந்திருக்கிறார். 'படித்தவர்கள் வர்த்தகம், தொழிலில் இறங்கி, நாலு பேருக்கு வேலை கொடுக்க வேண்டும்' என்று துரை பேசியது, சுந்தரம் ஐயங்காரின் மனதில் ஆழப் பதிந்து விட்டது.

ஆரம்பத்தில், மர வியாபாரிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பிரம்பு, சவுக்கு சப்ளை செய்தார். தந்தையின் வற்புறுத்தலால், அதனை நிறுத்தி விட்டு ரயில்வேயில் வேலைக்குச் சேர்ந்தார். பின்பு இம்பீரியல் வங்கியில் சேர்ந்தார். இந்தத் தருணத்தில் அவரது தந்தை மறைய, இன்னொரு நண்பருடன் கூட்டாக மர வியாபாரம் ஆரம்பித்தார். 1912-ல் அதையும் நிறுத்திவிட்டு, அதில் போட்ட முதல், கிடைத்த லாபத்தைக் கொண்டு கான் பகதூர் கான் நவாஸ்கான் என்பவருடன் கூட்டாக பஸ் சர்வீஸை ஆரம்பித்தார். மதுரையை மையமாகக் கொண்டு புதுக்கோட்டை தஞ்சாவூர் மார்க்கங்களில் டி.வி.எஸ். பஸ்கள் ஓடத் தொடங்கின.

பஸ் நிரம்பும்வரை காத்திருக்காமல், குறித்த நேரத்தில் பஸ் புறப்பட வேண்டும் என்ற டி.வி.எஸ். கொள்கையும், ஓட்டுநர்களும், நடத்துநர்களும் பயணிகளை மிகவும் மரியாதையுடன் நடத்தியதும், மக்கள் மத்தியில் டி.வி.எஸ். பஸ்களுக்கு நன்மதிப்பைப் பெற்றுத் தந்தன.

சாலைப் பராமரிப்பு ஒப்பந்தத்தின் மூலம் சாலைகளைச் செப்பனிட்டதன் காரணமாக, வருவாயும் கிடைத்தது; டி.வி.எஸ். பஸ் டயர்கள் தேய்மானம் குறைந்து நீடித்தும் உழைத்தன. கூடவே, மோட்டார் வாகன உதிரிப் பாகங்களை வரவழைத்து, விற்பனை செய்ய ஆரம்பித்தார் சுந்தரம் ஐயங்கார். 1929-ல்,



மூன்றெழுத்து மந்திரம்!

அமெரிக்காவின் ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனத்தின் வாகனங்கள் மற்றும் உதிரிப் பாகங்களை விற்பனை செய்யும் நேரடி ஏஜென்சி உரிமையையும் பெற்றார்.

அந்தக் காலத்தில் வசதி படைத்த ஜமீன்தார்களிடம், அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்ட கார்களை விற்பனை செய்யும் நோக்கில், டி.வி.எஸ். தம் பணியாளர்களில் சிலரைத் தேர்ந்தெடுத்து கார் ஓட்டக் கற்றுக் கொடுத்தார். டிரைவர் காரைப் பயன்படுத்துவதில் உள்ள அனுகூலங்களை ஜமீன்தாரிடம் எடுத்துச் சொல்லி, காரையும் டிரைவரையும் ஜமீன்தார் வீட்டிலேயே விட்டுவிட்டு, அவருடைய குதிரை வண்டியில் தான் புறப்பட்டு வந்து விடுவார். ஒரு வார காலம்வரை காரைப் பயன்படுத்தும் ஜமீன்தார்கள், அதன் சௌகரியத்தில் மனம் மகிழ்ந்து, காரை வாங்க முன்வருவார்கள். இவ்வாறு டி.வி.எஸ். செட்டிநாட்டைச் சேர்ந்த செல்வந்தர்கள் பலரிடம் கார்களை விற்றிருக்கிறார். இன்று பிரபலமாக இருக்கும் 'எக்ஸ்சேஞ் பிசினஸின்' முன்னோடி டி.வி.எஸ்.தான் என்றால், சற்றும் மிகை இல்லை.

பயணிகள் போக்குவரத்தில் தம்மை நிலைநிறுத்திக் கொண்டபின், டி.வி.எஸ். சரக்குகளை எடுத்துச் செல்வதற்குப் பாதுகாப்பானதாக, முழுமையாக மூடப்பட்ட லாரிகளை உருவாக்கினார். 'உங்கள் சரக்குகளை, எங்கள் குழந்தைகளைப் போல பத்திரமாக எடுத்துச் சென்று, உரிய இடத்தில் கொண்டு சேர்ப்போம்' என்ற டி.வி.எஸ். விளம்பரம், மக்கள் மத்தியில் மிகுந்த நம்பிக்கையினை ஏற்படுத்தியது. இன்றும், தென்னிந்திய மாநிலங்களில் 12 கிளைகள், 460 புக்கிங் ஆபீஸ்கள் கொண்ட டி.வி.எஸ்.சின் சதர்ன் ரோடுவேஸ் நிறுவனம் 300-க்கும் அதிகமான சரக்கு லாரிகளை இயக்குகிறது.

கனரக வாகனங்கள் வாங்குவதற்கு நிதி உதவி செய்யும் நோக்கத்துடன் துவங்கப்பட்டது சுந்தரம் ஃபைனான்ஸ். பொது மக்கள், அரசுடைமை வங்கிகளில் சேமிப்பதைப் போல நம்பிக்கையுடன் தங்கள் சேமிப்பையும், ஓய்வூதியப் பணத்தையும் நம்பி இதில் முதலீடு செய்வது ஒரு பெருமை என்றால், வங்கிகளில் வராக் கடன்கள் பெருகிவரும் தற்போதைய நிலையில் 99% வாங்கிய

> “டி.வி.எஸ். நிறுவனங்களில் காலைப் பணியைத் துவங்குவதற்குமுன் பதினைந்து நிமிடம் உடற்பயிற்சியும் மூச்சுப் பயிற்சியும் செய்கிறார்கள்.”

இல்லையா?

கடலின் சிரிப்பில்
நீ அபாயத்தையும்
உணர்வதில்லையா?

பாப்பி மலரின் இரத்தப் பட்டில்
நீ அச்சுறுத்தலைக்
காண்பதில்லையா?

ஆப்பிளில் மரணமடையவென்றே
நீ ஆப்பிள் மரங்கள் மலர்வதைப்
பார்ப்பதில்லையா?

மற்தியின் குப்பிகள் சிரிப்புடன்
சூழ்ந்திருக்கும்போது
நீ அழுவதில்லையா?

— யார்?

கடன்கள் இங்கு வசூலாவது சாதனையே!

மோட்டார் உதிரிப் பாகங்களுக்கான தேவை அதிகரிக்கும் என்பதை அறுபதுகளிலேயே உணர்ந்து, மேற்கத்திய நாட்டு நிறுவனங்களுடன் கூட்டாகத் தொழிற்சாலைகளை டி.வி.எஸ். ஆரம்பித்தது. அப்படி ஆரம்பிக்கப்பட்டவற்றில் பிரேக்ஸ் இந்தியா, சுந்தரம் கிளேட்டன், வீல்ஸ் இந்தியா, சுந்தரம் ஃபாசனர்ஸ், லூகாஸ் டி.வி.எஸ். ஆகியவை சில. இவை அனைத்துமே இன்று வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன.

டி.வி.எஸ்.50 என்ற மொபெட்டை அறிமுகப்படுத்தி வெற்றி கண்ட டி.வி.எஸ்., அடுத்து மோட்டார் சைக்கிள் உற்பத்தியிலும் தடம் பதித்தது. ஜப்பானின் சுசுகி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டு கூட்டாக 100 சி.சி. மோட்டார் சைக்கிள்களை உற்பத்தி செய்யத் தொடங்கி, அதிலும் வெற்றி பெற்று தற்போது, சொந்தக் காலில் நிற்கிறது. டி.வி.எஸ். அறிமுகப்படுத்திய ஸ்கூட்டி, இன்று இளம் பெண்களின் ஃபேவரிட் வாகனம். மொபெட், மோட்டார் பைக், ஸ்கூட்டர் என்று எதுவானாலும் அவ்வப்போது புதுப் புது மாடல்களை அறிமுகப்படுத்துகிறது. இன்று டி.வி.எஸ். மோட்டார் கம்பெனிக்கு உலகமெங்கும் ஒரு கோடி வாடிக்கையாளர்கள் இருக்கிறார்கள். கடந்த ஆண்டில், இந்த நிறுவனத்தின் மொத்த வருவாய் மூன்றாயிரம் கோடியைத் தொட்டது.

டி.வி.எஸ். தொழிலாளர்கள் தொடங்கி நிர்வாகிகள் வரை அனைவருக்குமாக, பயிற்சிக்கு அதிக முக்கியத்துவம் தருகிறது. பயிற்சி ஓர் ஊழியரை, வேலையை நேர்த்தியாகச் செய்ய வைக்குமென்பது டி.வி.எஸ். பாலிசி. ஜப்பானிய முறையில், தரக் கட்டுப்பாட்டுக்கும் இங்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது.

வாடிக்கையாளர்களின் திருப்தி என்பது, ஊழியர்களின் கையில் என்று நம்புகிறது டி.வி.எஸ். இதனால், எப்போதும் ஊழியர்கள் நலனில் பெரும் அக்கறை காட்டுகிறது. அதனால்தான், டி.வி.எஸ். குழும நிறுவனங்களில் வேலை நிறுத்தம் மிகவும் அரியதொரு வார்த்தையாக உள்ளது.

டி.வி.எஸ். - சில தெரியாத தகவல்கள்:

* டி.வி.சுந்தரம் ஐயங்காரின் தந்தை திருநெல்வேலி மாவட்டத்துக்காரர் என்றாலும் அவர் பிறந்தது கேரள மாநிலத்திலுள்ள திருச்சூரில்.
* ராஜாஜி, ஏ.கே.செட்டியார் போன்றவர்களது நூல்களை பதிப்பித்து பல பள்ளிகளுக்கு டி.வி.எஸ். நிறுவனம் வழங்கியிருக்கிறது.
* சில டி.வி.எஸ். நிறுவனங்களில் இன்றும், காலை பணியைத் துவக்குவதற்கு முன்பு பதினைந்து நிமிட நேரம் உடற்பயிற்சியும், மூச்சுப் பயிற்சியும் செய்வது வழக்கமாக இருக்கிறது.
* டி.வி.எஸ். இரண்டு சக்கர வாகன விளம்பரங்களில் நம் ஊர் டெல்லி கணேஷ், சூர்யாவைத் தவிர சச்சின், மகேந்திரசிங் தோனி ஆகியோரும் தோன்றியுள்ளனர்.
* டி.வி.எஸ். குழுமத்தின் தாய் வீடான டி.வி.சுந்தரம் ஐயங்கார் & சன்ஸ் நிறுவனத்தின் இணைய தளம் :

www.tvsiyengar.com

நீங்கள் கேட்டவை

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்

? தமிழக அரசின் கோரிக்கையை உடனுக்குடன் நிறைவேற்றுகிறார் மன்மோகன்சிங் என கருணாநிதி கூறியிருக்கிறாரே?

! கோரிக்கைக் குரல் சற்று ஓங்கி ஒலித்தால் மிரட்டலாகிவிடும் என்பது கருணாநிதிக்கும் தெரியும்; மன்மோகன்சிங்குக்கும் தெரியும்.



• இறங்கும் தட்டு!

கசப்புடன் கூட்டணியில் தொடர வேண்டுமா?

● வி.எம்.எஸ்.ஸ்ரீனிவாசன், சோழவந்தான் ❑

? இல்லறத்தில் இருக்கும் சாதாரண மனிதன் முக்தி பெறுவதற்கு ஏதாவது வழி இருக்கிறதா?

! இருக்கிறதே! அந்த இல்லறத்தில் உள்ள பெரியவர்களைப் பூஜித்து, இல்லாளுக்குச் சரிபாதி உரிமைகளை அளித்து, பிள்ளைகளை ஒழுக்க நெறியுடன் வளர்த்தால், அந்தக் குடும்பத் தலைவனுக்கு முக்திக்கான வழியில் இரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருக்கும்.

● எஸ்.சந்திரமுகி, கலிங்கியம்

? கிரிக்கெட் உலகில் ஆஸியை அசைத்துப் பார்க்கப் போகும் நாடு எது?

! அப்படி ஒன்று கண்ணுக்கு எட்டிய தூரத்தில் தென்படவில்லை.



• ... ஒலி!

• ஓங்கும்...



தராசு



• வழியும் ஆசை!

இன்னும் ஐந்து ஆண்டுகள் கழித்து இதே கேள்வியை அனுப்புங்கள், பார்ப்போம்.

● **கணேச சிவப்பிரகாசம், கடலூர்**

? தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தல் முடிந்த சூட்டோடு சூடாக அடுத்து வரும் கூட்டுறவு சங்கத் தேர்தலைப் பற்றி...?

! இதிலும் மறைமுகமாகவேணும் கட்சி அரசியல் புகுந்து கேலிக்கூத் தாக்கிவிடும் வாய்ப்புகள் நிறையவே உண்டு.

● **அ.சா.குருசாமி, செவல்குளம்**

? அரசுப் பேருந்துகளில் எழுதப்பட்டிருந்த திருக்குறள் அழிக்கப்பட்டு, கலைஞரின் பொன்மொழிகள் எழுதப்படுகின்றனவே...

! இதை மறுத்து கலைஞர் வெளியிட்டுள்ள அறிக்கை குழப்புகிறதேயொழிய, சரியான பதிலாக அமையவில்லை. வேலையில்லாதோருக்கு வழங்கப்பட்ட உதவித் தொகைக்கான காசோலைகளைக்கூட கருணாநிதியின் படம் அச்சடித்த உறைகளில் வைத்துத்தான் கொடுத்திருக்கிறார்கள். வள்ளுவருக்குச் சிலை எழுப்பி, குறளுக்கு உரை எழுதினால் போதாது; குறளோவியத்தின்படி வாழ்ந்து காட்ட வேண்டும்.

● **பி.ஸ்ரீனிவாசன், சென்னை-26** ✱

? இவ்வளவு மனக்கசப்புகளுடன் டாக்டர் ராமதாஸ் தி.மு.க. கூட்டணியில் இருக்க வேண்டுமா?

! கூட்டணியில் நீடிப்பதால் புது டெல்லி ஆதாயங்கள் ஒரு தட்டில்; தமிழக மனக்கசப்புகள் மற்றொரு தட்டில். ராமதாஸின் தராசில் இப்போதைக்கு ஆதாயங்கள் உள்ள தட்டே தாழ்ந்திருக்கிறது.

● **என்.வி.ரமணி, விருகம்பாக்கம்**

? புஷ்ஷின் ஈராக் செயல்பாடுகளுக்கு ரம்ஸ்ஃபீல்ட்தான் காரணம் என்பதைப் போல் அவரைக் கழற்றிவிடுதல் நியாயமா?

! பலிகடா என்று கேள்விப்பட்டதில்லையா? ஆங்கிலத்தில் scape goat என்பார்கள்– பிறர் பாவங்களைச் சுமந்து தண்டனைக்கு உள்ளாகும் ஆடு!

• சுமக்கும் பாவம்!



? க.வேடியப்பன், கும்மிடிப்பூண்டி

சரத்பவாரைத் தள்ளிவிட்டதற்காக ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் கேப்டன் மன்னிப்புக் கேட்டுள்ளாரே...

டி.வி.யில் அந்தக் காட்சியைப் பார்க்கும்போது அப்படியொன்றும் பெரிய குற்றமாகத் தோன்றவில்லை. இருப்பினும், பாண்டிங் மன்னிப்பு கேட்டுவிட்டார்; பவாரும் 'பெரிசுபடுத்தாதீங்க' என்று சொல்லிவிட்டார். குற்றம் சாட்டிய கவாஸ்கர்தான் கொஞ்சமாக அசடு வழிகிறார்.

• மல்லிகா அன்பழகன், சென்னை - 112

பட்டப்பகலில், சென்ட்ரல் ரயில் நிலைய போலீஸ் பூத்திலேயே ரௌடிகள் வெட்டிக் கொல்கிறார்களே...?

இருங்க இருங்க.. இப்பத்தானே சென்னை போலீஸ் கமிஷனர் ரவுடிகளை 'ரவுண்ட் அப்' செய்துக்கிட்டிருக்கார். அதுக்குள்ள அவசரப்பட்டா எப்படி...

• எம்.கே.இளமதி, பேரையூர்

? மற்ற மாநிலங்களைப் போல் தமிழகத்திலும் மாணவர்களுக்கு இலவசக் குடைகளை வழங்கலாமே?

ஏன், ரெயின்கோட் தயாரிப்பாளர்கள் என்ன பாவம் பண்ணினார்கள்?

• கே.தெய்வசிகாமணி, ஆவடி

? 'காணாமல் போன மீனவர்கள் அனைவரும் புயல் வருவதற்கு முன்பே கடலுக்குப் போனவர்கள்' என தி.மு.க. அமைச்சரும், 'மீனவர்கள் வாழ்வோடு மைனாரிட்டி தி.மு.க. அரசு விளையாடுகிறது' என்று ஜெயலலிதாவும் கூறுவதைப் பற்றி...?

மீனவர்களின் அவதியும் அரசியலாகிறதே தவிர தீர்ந்தபாடில்லை.

• எஸ்.கௌரிலக்ஷ்மி, ஸ்ரீரங்கம்

? அஃப்சல் குரு கடைசியில் கருணை மனு அளித்து விட்டாரே, இனி...?

! செய்த குற்றத்துக்கு வருத்தம் தெரிவிக்க அஃப்சல் இவ்வளவு யோசித்தார் எனில், மன்னிப்பு குறித்து முடிவு செய்ய அப்துல் கலாம் எவ்வளவு யோசிக்க வேண்டும்! யோசித்து முடிவு செய்வார் என நம்புவோம்.

• லெ.நா.சிவகுமார், சென்னை - 33

? 'சதாம் ஹுசேனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட தினம் ஈராக் மக்களுக்கு ஒரு நல்ல நாள்' என்று அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்துள்ளாரே?

! அதிபர் புஷ்ஷுக்குக் கெட்ட நேரம் தொடங்கிவிட்டதாக அமெரிக்க மக்களே சொல்லிவிட்டார்களே! தேர்தலில் பாராளுமன்ற மேல்சபை, கீழ் சபை - இரண்டிலும் புஷ்ஷின் ரிபப்ளிகன் கட்சிக்குப் பெரும்பான்மை இல்லாமல் போச்சே! ●



• நீத்த யோசனை!

❑ ரூ.100/- பரிசு பெறுபவர்:

வி.எம்.எஸ்.ஸ்ரீனிவாசன்,
6-2-120, மார்க்கெட் சாலை,
சோழவந்தான் - 625 214
மதுரை மாவட்டம்

• ரூ.50/- பரிசு பெறுபவர்:

பி.ஸ்ரீனிவாசன்,
ஸாய் லோக் அபார்ட்மெண்ட்ஸ்,
பிளாட் 46, கதவு எண் 1,
(இரண்டாவது மாடி)
குமரன் காலனி இரண்டாவது தெரு,
வடபழனி, சென்னை - 600 026

காமேசுவரி

சுதா சேஷய்யன்

பயம் போனபின்....

பயம் இருக்கிறபோது வாயே திறக்க மாட்டோம் - அம்பாளிடம் போகும் போது என்று இல்லை; இது சராசரி வாழ்க்கையிலேயே நடக்கும். நமக்கு யாரிடமாவது பயம் என்றால், அவர் கிட்டேயே போக மாட்டோம்; ஒதுங் கியே இருப்போம்; பேசமாட்டோம். கொஞ்சம் கொஞ்சமாகப் பழகப் பழக, பயம் போய்விட்டது என்று வைத்துக் கொள்வோம், அப்புறம் என்ன நடக் கும்? புதிதாக வந்தவர்களிடம் பழக பயப்படுகிற குழந்தைகள் முதலில் அவர்கள் கிட்டே போகாமல் தள்ளி நிற்கும். ஒரு மணி நேரம் ஆன பிறகு அதே குழந்தை பக்கத்தில் போய் உட் காரும். உட்கார்ந்து "உன் பாக்கெட்டில் இருக்கிற பேனாவைத் தருகிறாயா?" என்று கேட்கும் - அடுத்த கட்டமாக! பயம் போனவுடனேயே 'எனக்கு ஏதேனும் கொடு' என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா! அந்த மாதிரிதான் பயம் போனவுடனேயே கடவுளிடம் நாம் என்ன பண்ணுகிறோம், "அம்மா, எனக்கு இதைக் கொடு" என்று கேட் கிறோம். அப்படிக் கேட்பதற்காகப் பயத்தைப் போக்குவது அபய ஹஸ்தம்; கேட்டதைத் தருவதற்காக அமைந்திருப் பது வர ஹஸ்தம்.

பயம் போனவுடனே என்னென் னவோ கேட்க ஆரம்பித்துவிடுவோம்! பாரதியைப் போல எல்லோரும் இருக்க முடியுமா! பாரதி என்ன கேட்டார்? 'காணி நிலம் வேண்டும்' என்று ஆரம் பித்துக் கேட்டாரே, எல்லாம் தமக்குச் சொந்தமாக வேண்டும் என்பதற்காக அல்ல - வையத்தைப் பாலித்திட வேண்டும் என்பதற்காகவல்லவா அவர் கேட்டார்! - பாட்டுத் திறத்தாலே வையம் பாலித்திட வேண்டும்!

அப்படிக் கேட்டுப் பெற விரும்புவ தைத் தரக்கூடியது வர ஹஸ்தம்.

ஆனால், லலிதாம்பிகையிடம் பார்த் தால், அபய ஹஸ்தமும் இருக்காது; வர ஹஸ்தமும் இருக்காது!

ஆதிசங்கர பகவத் பாதர் சொன்னார்: "இந்த அபய-வர ஹஸ்தம் காட்டி ஆள வேண்டிய அவசியம் உனக்கு இல்லை. அதனால்தான் உன் திருக்கரங்களில் அதற்கான அடை யாளம் இல்லை" என்று.


லலிதாம்பிகையின் நான்கு திருக்கரங் களுள் ஒவ்வொன்றும் வேறேதோ ஒரு பணியைச் செய்துகொண்டிருக்கின்றன - சதுர்பாஹு ஸமன்விதா!

இந்த நான்கு திருக்கரங்களிலும் என்னென்ன இருக்கின்றன என்று பார்த்தால் ஒரு கரத்தில் 'பாசம்' இருக் கிறது - ராக ஸ்வரூப பாஷாட்யா

பாசம்

பாசம் என்று சொன்னாலே கயிறு என்றுதான் அர்த்தம். யமனுடைய கையிலே பாசக் கயிறு இருக்கிறது என்கிறோமே - அது 'கேட்டு வாசல்படி' என்று சொல்கிற மாதிரிதான்! அந்தக் கயிறு அவ்வளவு வலிமை வாய்ந்தது என்பதால் இரட்டிப்பாக்கிப் 'பாசக் கயிறு' என்கிறோம்.

பாசம் என்றாலே பந்தம்


10
நெல்லை
காந்திமதி அம்மன்

கட்டுவது - நம்மைக் கட்டிப் போட்டிருக்கின்ற ஒன்று! அதைக் கையிலே வைத்திருக்கிறாள். எப்படிக் கயிறால் கட்டிப் போட முடியுமோ, அப்படி பாசம் நம்மைக் கட்டிவிடும்.

இந்தக் கயிற்றை விடுவிக்க என்ன வேண்டும் என்று பார்த்தால், அதற்காக இன்னொரு மேல் கரத்தில் அவள் வைத்திருப்பது அங்குசம்.

பளபளக்கும் அங்குசம்

அங்குசத்தை எப்படி வைத்திருக்கிறாள் என்றால், **குரோதாகார அங்குச உஜ்வலா!** பளபளவென்று இருக்கக் கூடிய அங்குசம். பளபள என்று அது ஜ்வலிப்பதற்கு ஓர் அர்த்தம் இருக்கிறது. எப்போதுமே, பளபளவென்று ஓர் ஆயுதம் காணப்பட்டால், அவ்வாயுதம் கூர்மையாகவும் இருக்கும்.

சில சமயங்களில் ஒரு நூலை வெட்டுவதற்குக் கத்திரியைப் பயன்படுத்துகிறபோது, கத்திரி மழுங்கியிருக்குமேயானால் அது நூலை வெட்டாது. மேலும் நூல் அப்படியே பிரிந்து திரி திரியாக வரும். பாசத்தை வெட்டுகிறபோது அது திரி திரியாகப் பிரிந்தால் பிரயோஜனமில்லை அல்லவா...? நறுக்கென்று கத்திரிக்க வேண்டும். அதனால் அந்த அங்குசம் எப்படி இருக்கிறது...? அம்பாளின் கையில் உள்ள அங்குசமானது பளபளவென்று ஜ்வலிக்கிறது.

அந்தப் பளபளக்கும் அங்குசம் எத்தகையது என்றால், அது குரோதாகார அங்குசம். குரோதம் என்றால் பொதுவாக துவேஷம் என்று பொருள். அப்படியானால், அம்பாளிடம் ஏன் குரோதாகார அங்குசம் இருக்க வேண்டும்...?

துவேஷத்தைக் காட்டினால்தான் அந்த இடத்தில் பந்தத்தை வெட்ட முடியும் என்கிறபோது, அப்படிப்பட்ட நிலையில் குரோதத்தைக் காட்டி, தேவையில்லாத பந்தத்தை வெட்டக் கூடியவள் அவள்.

ஆக ஒரு கையில் பாசம், இன்னொரு கையில் அங்குசம்!

ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் ஆரம்பிக்கிற விதத்தைக் கவனியுங்கள். ஸ்வரூப வர்ணனை ஆரம்பிக்கிறபோது கூட இந்த திருக்கரங்களின் வர்ணனைதான் முதலில் வருகிறது. அதற்குப் பிறகுதான் மற்ற வர்ணனைகளெல்லாம்.

மன வில்

சரி, சதுர்பாஹு - நான்கு கரங்களுள் முதலில் பாசம் - நம்மைக் கட்டிப் போடக்கூடிய பற்று - அதைச் சொல்லி இரண்டாவதாக அந்தப் பாசத்தை நீக்கும் அங்குசத்தைச் சொல்லியாயிற்று.

மற்ற இரு கரங்களில் என்ன இருக்கின்றன என்பதைத்தான் அடுத்த இரு திருநாமங்கள் சொல்கின்றன:

மனோரூபேக்ஷு கோதண்டா
பஞ்சதன்மாத்ர ஸாயகா

அம்பாளுடைய திருமேனியில் மற்ற இரு கரங்களைப் பார்த்தால் தெரியும். இடத் திருக்கரத்தில் கரும்பு வில்லையும் வலக் கரத்தில் ஐந்து மலர் அம்புகளையும் தாங்கிக் கொண்டிருக்கக் கூடியவள் என்று. கோதண்டா என்றால் வில். வில்லைத் தாங்கிக் கொண்டிருக்கக் கூடியவள் கோதண்டா. இக்ஷு கோதண்டா அதாவது கரும்பு வில். அதிலும் மனோரூபேக்ஷு கோதண்டா- வெறும் இக்ஷு கோதண்டா என்று சொல்லவில்லை; மனோரூபேக்ஷு கோதண்டா எனச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே வெறும் கரும்பு வில் அல்ல; நம் மனம் தான் கரும்பு வில்லாக அமைந்திருக்கிறது; அந்தக் கரும்பு வில்லைத் தன் திருக்கரத்தில் தாங்கிக் கொண்டிருக்கக் கூடியவள் அவள்.

திருத்தம்

கல்கி 12.11.2006 இதழில் ஸ்ரீலலிதா தொடரில் குறிப்பிடப்பட்டிருந்த செய்தியில் **'ஜான் ஷட்ராஃப் (கார்டன் ஷட்ராஃப் அல்ல)'** என்பதை, **'ஜான் உட்ராஃப் (கார்டன் உட்ராஃப் அல்ல)'** என்று திருத்திப் படிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம்.

- ஆர்.

மலர் அம்புகள்

பஞ்சதன்மாத்ரஸாயகா - அவளுடைய கையிலே இருக்கக் கூடிய சரங்கள் - அம்புகள் என்னவென்று கேட்டால், அவை வேறு ஏதோ அம்புகள் அல்ல; வெறும் மலர் அம்புகள் அல்ல. மலர் அம்புகள் என்றால் கரும்பு வில் என்று சொன்னது போல் 'புஷ்ப பாணம்' என்று சொல்லியிருக்க வேண்டும். ஆனால் 'பஞ்சதன்மாத்ர ஸாயகா' என்று சொல்லியிருக்கிறது. அப்படியானால், அவள் கரங்களில் இருப்பது மலர் அம்புகள் அல்ல... எங்களுடைய தன்மாத்ரைகள்தான் அங்கே அம்புகளாக இருக்கின்றன!

நான்கு திருக்கரங்களைக் கொண்டவளே! பாசத்தை ஒரு கரத்திலேயும், பாசத்தைக் களையும் அங்குசத்தை ஒரு கரத்திலேயும் எங்கள் மனமாகிற வில்லை ஒரு கரத்திலேயும் எங்கள் பஞ்சதன் மாத்திரைகளை ஒரு கரத்திலேயும் தாங்கிக் கொண்டிருப்பவளே!

பஞ்சதன்மாத்ர ஸாயகா என்றால் என்ன அர்த்தம். அந்த அம்புகளை புஷ்ப பாணங்களாகத்தான் சித்திரிக்கப் பார்க்கிறோம். அம்பிகைக்கே காமேசுவரி என்று ஒரு திருநாமம் உண்டு - பின்னாலே வரும்.

காமேசுவரருடைய திருத்தொடையில் அமர்ந்து கொண்டிருக்கக் கூடியவள் என்று பின்னால் ஒரு திருநாமம் வரும். பரமேசுவரனுக்குக் காமேசுவரன் என்று ஒரு திருநாமம். அம்பிகைக்குக் காமேசுவரி என்று ஒரு திருநாமம்.

காமம் என்றால் ஆசை - விருப்பம் என்று அர்த்தம். இந்த உலகத்தைப் படைக்க வேண்டும் என்ற விருப்பத்தினால், அதற்காக அவதாரம் செய்த அம்பிகைக்குக் காமேசுவரி என்று பெயர்.

இந்த உலகத்தைப் படைக்க வேண்டும் என்பதற்காக, நிர்குண பிரம்மமாக இருந்த அந்த பரமாத்மா தன்னையே ஒரு ஸ்வரூபத்துக்குள் கொண்டு வந்தாரே அதனால் அவருக்குக் காமேசுவரர் என்று பெயர்.



அதுமட்டுமல்ல, நம்முடைய விருப்பங்களை, ஆசைகளை அவள் நிறைவேற்றித் தரக்கூடியவள் என்பதனால் காமேசுவரி என்று பெயர். இன்னொரு அர்த்தம் என்னவென்றால் அழகாக இருக்கக் கூடியவள்; கமனீயமாக இருக்கக் கூடியவள். (கமனீயமாக - அழகாக)

இப்படி, காமேசுவரி என்ற பெயருக்கு நிறைய அர்த்தங்களைச் சொல்லலாம் என்றாலும் கூட, 'காமம்' என்ற சொல்லோடு இன்னொருவரையும் நாம் பொருத்திப் பார்க்க முடியும். காமன் என்று சொன்னால் மன்மதனைக் குறிக்கும். மன்மதனிடம் இருப்பதும் இதே கரும்பு வில்; இதே மலர் அம்புகள்தான்! இதன் தாத்பர்யம் என்ன...?

(தொடரும்)

ஆண்களுக்கு எதிரானது அல்ல!

குடும்ப வன்முறை இந்திய அளவிலான பிரச்னை மட்டுமன்று; உலகளாவிய பிரச்னையாக உள்ளது. உலக நாடுகள் பலவற்றிலும் குடும்ப வன்முறையைக் குறைக்க பல்வேறு சட்ட வழிமுறைகள் உள்ளன. இந்தியாவிலும் இது IPC-498A-யின் கீழ், கிரிமினல் சட்டமாக வருகிறது. இந்தச் சட்டத்தால் எதிராளி சிறைத் தண்டனைக்கு உள்ளாகிறார். குடும்ப உறவில் தேவை தண்டனையல்ல; உடனடியான சமூகத் தீர்வே என்பதை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு மகளிர் நல அமைப்புகள், வழக்குரைஞர்கள், சமூக ஆர்வலர்கள் பல்லாண்டுகளாகப் போராடி வந்ததன் விளைவாக, இப்பொழுது Protection From Domestic Violence Act-2005 சிவில் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு அமல்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் தன்மை, விளைவுகளைப் பற்றி ஜனநாயக மாதர் சங்க மாநிலச் செயலாளர் உ. வாசுகி நம்மிடம் பேசுகையில்...

"இந்தச் சட்டம் ஆணுக்கெதிரான ஒரு விஷயமாகப் பார்க்கப்படுவது தவறு. குடும்ப உறவுகளில் பெண்ணுக்கும் ஜனநாயக உரிமைகள் உண்டு என்பதை வலியுறுத்திச் சொல்வதே இந்தச் சட்டத்தின் நோக்கம்.

ஒரு பெண் மனரீதியாகவோ, உடல் ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ, பாலியல் ரீதியாகவோ வன்முறைக்கு உட்படுத்தப்பட்டால், சம்பந்தப்பட்டவரின் மேல் நடவடிக்கை எடுக்கவே இந்தச்



பாலா (பிசினஸ்மேன்):

"இந்தச் சட்டத்தின் விதிமுறைகளைப் பார்க்கிறப்ப இது ஏதோ ஆண்கள் எல்லாம் கொடுமைக்காரர்கள் என்கிற பார்வையில் உள்ளது. மனைவியால் அவதிப்படும் கணவன் இல்லையா? மகனால் பிரச்னைக்குள்ளாகும் தந்தை இல்லையா? சகோதரிகளால் வஞ்சிக்கப்பட்ட அண்ணன், தம்பிகள் இல்



உ. வாசுகி



சட்டம்.

நாம் அநேக குடும்பங்களில் பார்க்கிற ஒரு விஷயம்... குடும்பத்தில் கணவன் - மனைவிக்குள் பிரச்னை ஏற்பட்டால் முதல் வார்த்தையாய் கணவன் சொல்வது "வெளியே போ, இது என் வீடு".

லையா? எல்லாரும் நல்லவங்களோ, எல்லாரும் கெட்டவங்களோ இல்லை.

ஏன், தன்னோட கணவனைப் பிடிக்காத ஒரு பெண், இந்தச் சட்டப்படி 'என் கணவர் என்னைத் துன்பப்படுத்துகிறார், திட்டுறார்' என்று வழக்குப் பதிவு செய்தால் அந்த நபரின் நிலைமை என்ன? இப்படியான கேள்விகள் இருந்தாலும், வன்முறைதான் வழி என்று நினைக்கும் ஆண்களுக்கு இது பொருத்தமான சட்டம் தான்."

வாடகை வீடானாலும் வெளியேறச் சொன்னால் குற்றம்தான் என்கிறது இந்தச் சட்டம்.

குடும்ப உறவில் இருக்கக்கூடிய பாதிக்கப்பட்ட பெண்கள் நேரடியாகவோ, சேவை அமைப்புகள் மூலமாகவோ, பாதுகாப்பு அதிகாரிகள் மூலமாகவோ, காவல்துறை மூலமாகவோ தமக்கு நேர்ந்த கொடுமைகளிலிருந்து மீள, நியாயம் கேட்டு நீதிமன்றத்தை அணுக வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதில் பாதுகாப்பு அதிகாரிகளை இன்னும் மாநில அரசு நியமிக்கவில்லை. அப்படி நியமிக்கப்படும் இவ்வதிகாரிகள், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு இருப்பிடமும், உடல் ரீதியான பாதிப்புக்கு உள்ளாகியிருந்தால் மருத்துவ உதவியும் செய்யக் கடமைப்பட்டவர்.

ஆண்கள் மீது மட்டுமே இவ்வழக்குகள் தொடர முடியும் (மாமியார், நாத்தனார் மற்ற உறவினர்களுக்கு இது பொருந்தாது). தண்டனை ஓராண்டு சிறைத் தண்டனையும், ரூ.20,000 ரொக்கமும் ஆகும்.

இந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்த வாய்ப்புள்ளதே என்ற குரல்கள் ஆங்காங்கே ஒலிக்கத்தான் செய்கின்றன. எந்தச் சட்டமும் தவறாகவும், சரியாகவும் பயன்படுத்தப்படுவது நம் கைகளில்தான் உள்ளது.

சில சமூக ரீதியான சட்டங்களின் பயன்பாடே, தவறான பயன்பாடாக (misuse) பார்க்கப்படுவது வருத்தத்துக்குரிய விஷயம்தான்.

எனவே இந்தச் சட்டம் நான்கு சுவர்களுக்குள் முடங்கிக் கிடக்கும் பெண்ணுக்கும் சமூக நீதி உண்டு என்பதைக் காட்டுகிறது.

இதில் அரசு செய்ய வேண்டியது என்னவெனில், பாதுகாப்பு அதிகாரிகளை நியமனம் செய்து, பாலின நிகர்நிலைக் கண்ணோட்டத்தை விழிப்புணர்வு பெறச்செய்து, பத்திரிகை, ஊடக விளம்பரங்களின் மூலம் சட்டத்தைக் கீழ்த்தட்டு மாதர் வரை கொண்டு செல்வதுதான்."

- அருணா. செந்தில்குமரன்

படம்: பொள்ளாச்சி சுந்தரம்



சிந்தியா (பல் மருத்துவர்) :

"எங்க மருத்துவமனைக்கு முகமெல்லாம் வீங்கி, பல் உடைஞ்சு வருவாங்க. எங்களுக்குத் தெரியும்... அது கணவன் - மனைவி தகராறில் ஏற்பட்ட காயம்தான் என்று. ஆனால் பெண்கள் 'தடுக்கி விழுந்துட்டேன்','பாத்ரூம்ல வழுக்கிடுச்சு' என்று வேறு காரணங்களைத்தான் சொல்வார்கள். வீட்டுப் பிரச்னையை வெளியே சொல்ல பயம். கணவர் வீட்டை விட்டு வெளியே துரத்திவிட்டால் என்ன செய்வது என்ற திகில்தான் முக்கிய காரணம். இன்னொன்று, தனித்து வாழ இயலாத சமூகச் சூழல். இதுபோன்ற சட்டங்கள் ஓரளவுக்குத்தான் துணைவர முடியும்.

பகையான நாடுகளே பல விஷயங்களைப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு கண்டு கொண்டிருக்கின்றன. இது வீட்டுப் பிரச்னை. இதற்குத் தீர்வு கிடைக்காமலா போய்விடும்? முக்கியமாக பெண்கள், ஆண்களுக்கு எதிராக இந்த விஷயத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது."





வென்றவர்கள்

கல்கி 22.10.2006 மற்றும் 29.10.2006 இதழ்களின் ஜாலி போட்டி - 1 மற்றும் 2-க்கு வந்து குவிந்த ஏராளமான சரியான விடைகளில் பரிசுக்குரிய 16 (8 + 8) பேரைத் தேர்ந்தெடுப்பதற்குள் மலைத்துப் போய்விட்டோம். வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்துக்கள்! தொடர்ந்து பங்கு பெறுங்கள்....

ஜாலி போட்டி முடிவு - 1

பரிசு பெற்றோர்....

1. வீர.செல்வம்,
   பூம்புகார்
2. பி. கற்பகம் பழனிச்சாமி,
   சென்னிமலை
3. கா. இராமகார்த்திகேயன்,
   இராணிப்பேட்டை
4. உமா மோகன்தாஸ்,
   திண்டுக்கல்
5. மலை அரசன்,
   அருகந்தம்பூண்டி
6. ச.ஆ.கேசவன்,
   இனாம் மணியாச்சி
7. ஜி. இஸ்மாயில்,
   வேலூர் - 4
8. எஸ்.பாலாஜி, ஸ்ரீரங்கம்

ஜாலி போட்டி முடிவு - 2


பரிசு பெற்றோர்....

1. ப.தேவி,
   கும்பகோணம்
2. எஸ்.கோகுலவாணி,
   சேலம்
3. ராம் ஆதிநாராயணன்,
   தஞ்சாவூர்
4. சி.ஜெயலலிதா,
   தேனி
5. ஜி.கண்ணன்,
   சென்னை
6. எஸ்.ராகவன்,
   சென்னை
7. இந்திரா,
   சென்னை
8. மு.ரவிச்சந்திரன்,
   அறந்தாங்கி



இதிலுமா பிரிவினை?

இந்தியாவில் மொழிவாரி மாநிலங்கள்



• இரா. செழியன்

1956-ஆம் ஆண்டு, நவம்பர் ஒன்றாம் தேதி அமைக்கப்பட்டு, தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா என மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. அந்த மாநிலங்கள் அண்மையில் பொன் விழாவைக் கொண்டாடி இருக்கின்றன. அனைத்துக் கட்சித் தலைவர்களும் இணைந்து அந்த மாநிலங்களில் விழா எடுக்கின்றனர். இங்கு தமிழ்நாட்டில் ஆளும்கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் தனி விழா எடுக்க, ம.தி.மு.க., ஏன், தோழமைக் கட்சியான பா.ம.க.கூட தனியாக நிகழ்ச்சி நடத்தி இருக்கிறது. தமிழ்நாட்டில் மட்டும் ஏன் இந்த அவல நிலை? சிறந்த பார்லிமெண்டேரியனான இரா.செழியனிடம் கேட்டோம்:

''மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்டதன் முக்கிய நோக்கம், அந்தந்த பகுதியிலுள்ள மக்கள், நிர்வாகத்துடன், அரசு இயந்திரத்துடன் ஒரு நெருங்கிய தொடர்போடு இருப்பார்கள் என்ற எண்ணத்தில்தான்.

அப்படி அமைக்கப்பட்ட பிறகு இன்றுவரை தமிழகம் பலவிதங்களில் அண்டை மாநிலங்களால் வஞ்சிக்கப்பட்டு வருகிறது. காவிரி, முல்லைப் பெரியாறு, ஆழியாறு, பரம்பிக்குளம் என்று பல பிரச்னைகள். இங்கே தமிழகத்தில் ஒன்றுபட்டுப் போராட வேண்டிய கட்சிகள், குறுகிய அரசியல் நோக்கில் பிரிந்துபோய்க் கிடக்கின்றன. தமிழகத்தின் மண் அளவு குறைந்தது மட்டுமல்லாமல், இங்கே பண்பாடும் குறைந்து விட்டது. ஆளும் கட்சியும் எதிர் கட்சியும் பரம விரோதிகளைப் போலச் செயல்படுகின்றன. மக்கள் செல்வாக்கை, வேண்டாதவர்களை ஒடுக்கத்தான் பயன்படுத்துகிறார்களே தவிர, தமிழ்நாட்டு நலன்களுக்கு உபயோகிப்பதில்லை. மத்திய அரசு, ராஜதந்திரமாகச் செயல்பட்டு மாநில மோதல்களைத் தடுக்க வேண்டும். நதிகள் தேசிய மயமாக்கப்பட வேண்டும். இன்று தமிழகம், பல துறைகளில் முன்னேற வேண்டுமானால் கட்சிப் பேதங்களை மறந்து ஒன்றுபட வேண்டும்'' என்று வேதனையுடன் குறிப்பிடுகிறார் செழியன்.



'தமிழ்நாடு - 50' ம.தி.மு.க. விழாவில்...

• ஸ்ரீநி

எனது எடை 90 கிலோ. டயட்டில் இருப்பது, ஜிம்முக்குச் செல்வது போன்ற வற்றால் மட்டும் இந்த எடையைக் குறைக்க முடியுமா?

- கே.வனிதா,
தி.நகர்

டாக்டர் ஆர்.பானுமதி *(சித்த, ஆயுர்வேத மூலிகை நிபுணர்):*

டயட் என்கிற பெயரில் பட்டினி கிடப்பதால் வாயுத் தொல்லைதான் வரும். சரியான முறையில் உணவுக் கட்டுப்பாட்டைக் கடைபிடித்தால் மட்டுமே எடை குறைய வாய்ப்புள்ளது. ஒரு பெண்ணானவர் எடையைக் குறைக்க அவருக்கு மலச் சிக்கல் இருக்கிறதா, மாதவிடாய் சரியாக இருக்கிறதா, ஹீமோகுளோபின் குறைவாக உள்ளதா, மெனோபாஸ் என்றால் நாற்பது வயதுக்கு மேல் வருவதா, உடலில் நீர் கோத்திருக்கிறதா, அதிக அளவு கொழுப்பு இருக்கின்றதா என்று அனைத்தையும் கண்டறிய வேண்டும். ஒருவரின் சராசரி எடையானது அவரது மொத்த உயரத்தின் செ.மீட்டரிலிருந்து 100-ஐக் கழித்தால் வருவது. உதாரணத்துக்கு 145 செ.மீ. உயரம் உள்ளவர், 45 கிலோ எடை தான் இருக்க வேண்டும். இந்தக் கணக்கின்படி மூன்று மாதங்களில் 10 கிலோ எடைதான் குறைக்க முடியும். ஆயில் மசாஜ், இரத்த ஓட்டத்தைச் சீர்படுத்தி நீராவிக் குளியல், சூரியக் குளியல், மண் தெரபி, கலர் தெரபி என்று எடையைக் குறைக்க நல்ல பல மூலிகை சிகிச்சைகள் உள்ளன. இவற்றைத் கடைபிடித்து சரிவிகித உணவையும் உட்கொண்டால், 90 கிலோ என்ன... நூறு கிலோ எடையிலிருந்துகூட ஸ்லிம்மாக முடியும்.


• டாக்டர் செந்தில்

கண்வலி

என்னைத் தவிர என் வீட்டில் எல்லோருக்கும் கண் வலி. இது எதனால் வருகிறது? கண் வலி வந்தவரைப் பார்ப்பதால் பரவுமா? வராமல் தடுக்க என்ன செய்ய வேண்டும்?

- மா. முத்து,
கோவை


டாக்டர் செந்தில் *(கண் மருத்துவர்):*

'மெட்ராஸ் ஐ' என்பது வைரஸ் இன்ஃபெக்ஷன்தான். கோடை காலத்திலிருந்து மழைக் காலத்துக்கு மாறும் போதுதான் இந்த வைரஸ் தொற்று அதிகமாகப் பரவி கண் வலியை உண்டாக்குகிறது. கண் வலியால் பாதிக்கப்பட்டவரைப் பார்ப்பதால் இது நிச்சயம் பரவாது.





வராமலிருக்க...



• டாக்டர் வி. பாலாஜி

பாதிக்கப்பட்டவர் பயன்படுத்தும் டவல், சோப், கைக்குட்டை போன்றவற்றை உபயோகப்படுத்துவதால்தான் பெரும்பாலும் பரவுகிறது.

கண் வலியை வெகு வேகமாகத் துரத்தியடிக்க, வந்தவுடன் சென்று கண் சிறப்பு மருத்துவரை அணுகி 'ஆன்ட்டிபயாடிக் ட்ராப்ஸ்' போட்டுக்கொள்வது நல்லது. வெந்நீரால் கண்ணுக்கு ஒத்தடம் கொடுப்பதைத் தவிர்த்து, குளிர்ந்த நீரில் ஒத்தடம் கொடுப்பதன் மூலம் கண்ணிலுள்ள வலி குறைந்து அழுக்கும் சுத்தமாகும். வராமல் தடுக்க, கண்வலி வந்தவர் பயன்பாட்டிலுள்ள பொருட்களைத் தவிர்ப்பதுதான் ஒரே வழி!

என் அம்மாவுக்குச் சர்க்கரை வியாதி இருக்கிறது. ஆனால் எனக்குச் சர்க்கரை வியாதிக்கான எந்த அறிகுறியும் இது வரையில் இருந்ததில்லை. அண்மையில் இரத்தப் பரிசோதனை செய்தபோது எனக்குச் சர்க்கரை அளவு அதிகமாக இருப்பதாகக் கூறுகிறார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. விளக்குங்களேன் டாக்டர்...

- இரா. வரதராஜன், நாகர்கோவில்

டாக்டர் வி.பாலாஜி (நீரிழிவு நோய் நிபுணர்):

பெரும்பாலும் டயாபடீஸால் பாதிக்கப்பட்ட 70 சதவிகிதத்தினருக்கு அறிகுறியே இருக்காது. இதற்கு 'சைலண்ட் டிசார்டர்' என்று பெயர். முப்பது சதவிகிதத்தினருக்கு அதிகப் பசி, அதிக தாகம், எடை குறைவு, அடிக்கடி சிறுநீர் கழித்தல், தோள் வலி எனப் பல்வேறு அறிகுறிகளை வைத்து டயாபடீஸ் வந்துள்ளதை உணரலாம். அறிகுறியே அறிய முடியாத 70 சதவிகித டயாபடீஸ்காரர்களுக்குத்தான் பிரச்னையே. காரணம், சர்க்கரையின் அளவு மிகவும் அதிகரித்துவிடும். ஏதோ ஒரு காரணத்தால் இரத்தப் பரிசோதனை செய்யும்போதுதான் அதிர்ச்சி காத்திருக்கும்.

ஆக, ஒருவருக்கு டயாபடீஸ் உள்ளது என்பதைத் தீர்மானிப்பது அறிகுறிகள் மட்டும் அல்ல, இரத்தப் பரிசோதனையும் தான். எனவே, அறிகுறி உள்ளவர்களாக இருந்தாலும், இல்லாதவர்களாக இருந்தாலும் தங்கள் குடும்பத்தில் யாருக்கேனும் டயாபடீஸ் இருந்தால், ஆறு மாதங்களுக்கு ஒரு முறையும், இல்லாதவர்கள் வருடத்துக்கு ஒரு முறையும் கண்டிப்பாக இரத்தப் பரிசோதனை செய்துகொள்வது உத்தமம். முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இது மிக அவசியம்.



• டாக்டர் ஆர்.பானுமதி

தொகுப்பு: **வினோ**

படங்கள் : **பொள்ளாச்சி சுந்தரம்**

கிழக்கு கடற்கரை சாலை

பெயர்ல இருக்குற பரவசம், படத்தோட முன்பாதிலதான் இருக்கு. ஒரு காதல் அரும்பி, மொட்டுவிட்டு, மலர்றதை ரொம்ப இயல்பா சொல்லியிருக்காங்க. ஆனா அந்தக் காதலர்கள் எதிர்கொள்ற பிரச்னையைச் சொன்னதுல சுவாரஸ்யமில்ல. ஸ்ரீகாந்தும் பாவனாவும் தனியறையில தள்ளப்பட்டு, காதலால உந்தப்படுற அந்த நொடிகள் பரவசமானவை. ஆக்ரோஷம், ஆவேசம், அன்பு, அரவணைப்புன்னு கலவையான உணர்வுகளைப் பிரதிபலிச்சு, படம் முழுக்க காதலுக்காக உருகுறார் ஸ்ரீகாந்த். பாவனாவும் சளைக்கல... கோபத்தைக் கண்கள்லயும் காதலை இதயத்துலயும் தாங்கிப் பிரமாதப்படுத்தறாங்க. நீண்ட நாளைக்கப்புறம் சுரேஷ். தன்னை யாரும் மிஞ்சிடக்கூடாதுங்கற வெறி அவர்கிட்ட தாண்டவமாடுது.

காதலர்களைப் பிரிக்க சுரேஷ் போடுற ஒரே ஒரு ப்ளான் முடிஞ்சதுமே படமும் முடிஞ்சிடுறது அலுப்பைத் தருது. கடத்திக் கொண்டு போய்க் கடலுக்குள்ள போடுறதெல்லாம் ஓல்டு டெக்னிக். நீச்சல் தெரியாத ஸ்ரீகாந்த், தானும் தப்பிச்சி பாவனாவையும் காப்பாத்தறது நாம பார்க்கறது சினிமாதான்னு நிரூபிச்சிடுது.

புது இசையமைப்பாளர் 'பால்'க்கு 'ஜே' போடலாம். 'கஞ்சப் பெண்ணே' நெஞ்சு நிறைக்குது. எம்.வி.பன்னீர் செல்வம் கிழக்குக் கடற்கரைச் சாலைக்குப் புதுமுகம் சூட்டியிருக்கார்.

'நீண்ட புல்லாங்குழலாகியது நீ ஏறிய ரயில்'னு அங்கங்கே கவிதைத்தனமான வசனங்கள், புத்திசாலித்தனமான காட்சிகள்ல இயக்குநர் ஸ்டான்லி பளிச்சிடுறார். சுனாமிய பேஸா வச்சு எடுக்கப்பட்ட கதை... இன்னும் கவனம் செலுத்தியிருந்தா நல்ல பதிவா இருந்திருக்கும்!

- லஜ்ஜாவதி



ஒரு பக்கக் கதை

அந்த ஒரு நிமிடம்!

நெல்லை கண்மணி





பல் துலக்கிவிட்டு செய்தித்தாளுடன் சோபாவில் அமர்ந்த கண்ணனை, காபியுடன் வந்த காயத்ரி விரட்டினாள். "மணி ஏழாச்சு; காபியைக் குடிச்சிட்டு சீக்கிரமா பிள்ளைகளைத் தயார் பண்ணுங்க. எட்டு மணிக்கு ஸ்கூல் பஸ் வந்துடும். நான் சமையலை முடிக்கிறேன்." உள்ளே போய்விட்டாள். தலைப்புச் செய்திகளை மட்டும் பார்த்துவிட்டு, காபியைக் குடித்தான். கண்கள் தானாக வராந்தா மூலைக்குச் சென்றன. சமையலறையிலிருந்து மனைவியின் குரல் துரத்தியது.

"எழுந்தாச்சா?"

நேரம் வேகமாக ஓடியது. ஒரு வழியாக ஸ்கூல் பஸ்ஸில் குழந்தைகளை ஏற்றிவிட்டு சோபாவில் உட்கார்ந்தான். கண்கள் மறுபடி வராந்தா மூலையை நோக்கின.

"என்ன உட்கார்ந்துட்டீங்க? சீக்கிரமா குளிச்சிட்டு சாப்பிட வாங்க. ஒன்பது மணிக்கு ஆபீஸ் கார் வந்திடும்ல... சரியான அசமஞ்சம்!"

குளித்து உடை மாற்றி பூஜை அறையில் சிறிது நேரம் சாமிகளுக்குத் தரிசனம் கொடுத்துவிட்டு வந்தவனின் பார்வை, மீண்டும் வராந்தா மூலைக்குச் சென்றன. சிற்றுண்டியுடன் வந்த காயத்ரி உணவைப் பரிமாறிக்கொண்டே சொன்னாள்... "தினம் உங்களுக்கு ஏன்தான் இவ்வளவு நேரமாகுதோ... மணி ஒன்பதாயிடுச்சு; ஃபைல்ஸ் எல்லாம் எடுத்துட்டுப் புறப்படுங்க."

வாசலில் கார் வந்துவிட்டது. "கார் சத்தம் கேக்கலியா? மசமசன்னு நின்னுக்கிட்டு... புறப்படுங்க."

காயத்ரி கண்ணனைக் காருக்குள் தள்ளாத குறையாக ஏற்றிவிட்டாள்.

தெருமுனைக்கு வந்ததும் கார் சிக்னலில் நின்றது. கண்ணனுக்கு மீண்டும் அந்த வராந்தா மூலை நினைவுக்கு வந்தது. சட்டென்று காரைத் திருப்பி வீட்டுக்குப் போய்விட்டு வந்து விடலாமா என்று ஓர் எண்ணம் தோன்றித் திரும்பிப் பார்த்தான். தன் காருக்குப் பின்னால் இவ்வளவு கார்களா? நினைத்தாலும்கூட போக முடியாதே! கண்ணனுக்குத் தன்மீது கோபமாக வந்தது.

வராந்தா மூலைக்குச் சென்று ஒரே ஒரு நிமிட நேரமாவது எடுத்துக்கொண்டு, ஒரு வார்த்தை 'ஏம்மா, உடம்புக்கு என்ன செய்யுது? ராத்திரி பூராவும் இருமல் சப்தம் கேட்டதே' என்று அம்மாவைக் கேட்டிருக்கலாமோ! 'ச்சே!' என்று தலையிலடித்துக் கொண்டான். ●



பரிசு ரூ.2000



இந்த இதழில் ஆங்காங்கே இடம்பெற்றுள்ள குறுங் கவிதைகளை எழுதியுள்ளது இங்குள்ள மூன்று பேரில் ஒருவர்தான். யார் அவர்? வாலியா? ரவீந்த்ரநாத் தாகூரா? அல்லது பாப்லோ நெருதாவா? யார் என்று கண்டுபிடித்து, கூடவே கல்கி பற்றி 'நச்'சென்று இரண்டு வரியில் ஒரு கமெண்டையும் எழுதி அனுப்பவும்.

சரியான விடை மற்றும் 'நச்' கமெண்ட் எழுதும் எட்டுப் பேருக்கு தலா ரூ.250 பரிசாக அளிக்கப்படும்.

அஞ்சலட்டையை மட்டும் பயன்படுத்தவும். ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

கடைசி தேதி : 27.11.2006

முகவரி :

ஆசிரியர், ஜாலியா கண்டுபிடிங்க,
கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.





Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka.